சக்தி

ரேடியோ என்ற பெயரிலேயே முதன்மையானது மகத்தானது



உங்களுக்குப் பூரண திருப்தி அளிக்கவல்லது

மார்க்கோனிபோன்

ஒன்றே!

No. 1125

- உலகில் எந்த ஊரை வேண்டுமானாலும் நீங்கள் உவந்து கேட்கலாம்.
- நீங்களே அங்கிருந்து நேரில் கேட்பதுபோலிருக்கும் அதன் ரிஸப்ஷன்.
- நீடித்த உழைப்பிற்கு நிகரற்ற ரேடியோ மார்க்கோனிபோன் ஒன்றுதான்.
- சித்திரத்திலுள்ளது 5 வால்வு ஏ. ஸி. மாடல் மார்க்கோனி போன்.

சென்னை ராஜதானிக்கு (சமஸ்தானங்கள் உள்பட) பிரதான டீலர்கள் :

ஸூபர் ரேடியோ கம்பெனி லிமிடெட், மௌண்ட் ரோடு, மதராஸ்

மார்க்கோனிபோன்

சென்னை ராஜதானிக்கு (சமஸ்தானங்கள் உள்பட) ஸோல் டிஸ்ட்ரிபியூட்டர்கள் :

ஸ்ரீ ராம விலாஸ் ஸர்வீஸ் லிமிடெட், மௌண்ட் ரோடு, மதராஸ்

ROLEX

Prince

The World's most accurate Wrist Watch as officially acknowledged by KEW (ENGLAND) OBSERVATORY

G1490 The "Brancard"	Stainless	Rs. 275
Do.	9-ct. Gold	Rs. 425
Do.	18-ct. Gold	Rs. 550
G1862 The "Classic"	Stainless	Rs. 250
Do.	9-ct. Gold	Rs. 400
Do.	18-ct. Gold	Rs. 500

31 WORLD RECORDS FOR ACCURACY

எல்லா விதத்திலும் தலைசிறந்து விளங்குபவை

உங்கள் அன்புக்கு உகந்தவர்களுக்கும் ஆப்த நண்பர்களுக்கும் நீங்கள் அளிக்கப்போகும் பரிசுகள், புது வருஷப் பரிசானாலும் சரி, கலியாணப் பரிசானாலும் சரி, 'ரோலக்ஸ்' கைக் கெடியாரங்களே குணத்திலும் அழகிலும் உபயோகத்திலும் சிறந்த பரிசாகும். 'ரோலக்ஸ்' வாட்சுகள் எல்லாச் சோதனைகளாலும் முதன்மையென நிரூபிக்கப்பட்டவை.

ரோலக்ஸ் 'பிரின்ஸ்' வாட்சு குற்றமற்ற உழைப்பில் உலகிலேயே முதன்மை யானதென்று, 'க்யூ' (இங்கிலாந்து) லெபோரடெரி அதிகாரிகளால் ஆதரிக்கப் பட்டுள்ளன. உழைப்பில் தலைசிறந்த மற்றைய 'ரோலக்ஸ்' கெடியாரங்களும் பல வேறு விலைகளில் கிடைக்கும். யாவும் குற்றமற்று உழைக்குமென உலகப் பிரசித்தி பெற்றவை.

SIGN OF THE CLOCK TOWER

P. ORR & SONS LTD

MADRAS OOTACAMUND RANGOON LONDON

POST BOX 317 MADRAS



அழகிய, நவீன முறையிலுள்ள தங்க வெள்ளி
சாமான்கள் உங்களுக்கு வேண்டுமோ?

வாருங்கள்! வந்து பாருங்கள்!

ராதா ஜ்வல்லரி ஷோ ரூம்





குறிப்பிடத் தக்கவை, உத்திரவாத முள்ளவை,
உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவை, நீண்டகாலம் உழைப்பவை

ஆண்களுக்கு :—தங்க மோதிரங்கள், கல்யாண மோதிரங்கள், இனுமல் மோதிரங்கள், நவீன கழுத்துச் சங்கிலிகள், பித்தான் கற்கள் முதலியன.

பெண்களுக்கு :—நவீன நெக்லஸ்கள், புதுமாதிரி தங்கச் சங்கிலிகள், ஒட்டியாணங்கள், வங்கி, வகைவகையான எனுமல் காப்புகள் முதலியன.

வெள்ளிச் சாமான்கள் :—டம்ளர்கள், டீ செட்டுகள், விளையாட்டுச் சாமான்கள், ஜாடிகள், அழகிய பட்டைக் கொலுசுகள், எனுமல் கொடுத்த பலவகை சாமான்கள்.

இன்னும் எது வேண்டும்? தயாராயிருக்கின்றன. ஆர்டர்களுக்கும் செய்து தரப்படும்.

டெலி { போன் 37.
{ கிராம் 'ராதா'

G. ராதாகிருஷ்ண செட்டி
ஜ்வல்லர், பெரிய கடைத்தெரு, திருச்சி

பசு வணக்கம்—குழந்தை உணவு தருவது



மாட்டுப் பொங்கல்

சாப்பி டம்மா சாப்பி டம்மா
சர்க்கரைப் பொங்கல்.
கூப்பிடம்மா துள்ளி யாடும்
குட்டிக் கன்றையும்...

குளிர் நீரில் ஆட்டி மஞ்சள்
குங்குமம் இட்டே—உன்
தளிர் முகத்தைப் பார்க்கும்போது
சாந்த மாகுதே...

உன்னைப் போலே சாது ஜீவன்
உலகினில் உண்டோ?
தன்னலம் சிறிதும் இல்லாத்
தருமத்தாய் நீயே...

பூமி தந்த புல்லை யுண்டு
பொறுமையாய் இருப்பாய்
சேமமாக மாந்தர் வாழச்
சேவை செய்குவாய்...

குடங் குடமாய்ப் பால் சுரந்து
குடிகளைக் காப்பாய்—உன்போல்
கடமை சாக்க மாந்தருக்குக்
கருணை வாராதோ...

ஆடிப் பாடி அந்த நாளில்
ஆலத்தி யெடுத்தே,
ஓடி யாடும் கன்றுடனே
உன்னைப் பூசித்தோம்—இன்று

துள்ளுங் கன்றைத் தோலுரித்தே
துணிகளை யடைத்தே—உன்னைக்
கள்ள மாந்தர் ஒட்டக்கறக்குங்
கடுமை யென்சொல்வேன்...

கண்டுகண்டுன் கன்றும் ஏங்கக்
கரும்பிப் பிச்சர்கள்
மொண்டு மொண்டுன் பாலைக்குடித்தே
மொத்துவா ருன்னை...

பருத்திப் பாலும் புல்லும் நீரும்
பார்த்து வைத்திடார்
வருத்தி யுன்னை வேலைவாங்கும்
வறட்டு நெஞ்சரே...

நன்றி கெட்ட மாந்தர் உனது
நன்மை யெண்ணிலார்.
கொன்றருந்திக் காட்டுப் புலிப்போற்
கொடுமை செய்கின்றார்...

பசுத் திருவே உன்னைப் போலெம்
பாரதத் தாயும்
கசியக் கசியக் கண்ணீர்வெள்ளம்
கலங்கி நிற்கின்றாள்...

வீட்டில் அடிமை யாக நீயும்
வேதனைப் படுவாய்
நாட்டில் அடிமையாக நாங்கள்
நலிகின்றோம் அம்மா...

சனிப் பிடித்த வாள ரக்கர்
தாயே நீவளர்
இனிய பச்சை நிலத்தையெல்லாம்
இரத்த மாக்கினார்...

தொத் தடிமைத் தொல்லை தீரச்
சுதந்தரம் பெருக
சுத்த சக்தி அருளை யின்று
தொழுது வேண்டுவாம் — பசுவே
தொழுது வேண்டுவாம்...

—சுத்தானந்த பாரதி

கீழ்க்கண்ட இடங்களில்
எங்கள்
"சக்தி" விற்பனைக்கு
ஏஜண்டுகள் தேவை

★

நிபந்தனைகளுக்கு கீழ்க்
கண்ட விலாசத்திற்கு
எழுதவும்

அரக்கோணம்
ஈரோடு
உடுமலைப்பேட்டை
கள்ளிக்கோட்டை
சிதம்பரம்
சீர்காழி
தாராபுரம்
திண்டிவனம்
திருவண்ணாமலை
திருமங்கலம்
திருவாரூர்
பண்ருட்டி
பாண்டிச்சேரி
பாபநாசம்
பொள்ளாச்சி
வந்தவாசி
விருதுநகர்
லால்குடி

★

சக்தி காரியாலயம்
P. B. NO. 1361
G. T. மதராஸ்

பொருள் அடக்கம்

JL
M211, N36, S
N42.61
134194

மாட்டுப் பொங்கல் (பாட்டு)
சுவாமி சுத்தானந்த பாரதியார் ... —

கதவு திறந்ததா? ... 1

விஜயலட்சுமி பண்டிதை
தி. ஜ. ர. ... 3

வாய்வு நீக்கும் பரிகாரம்
டி. வி. திருவேதி ... 6

கார் காலம்
டி. கே. சிதம்பரநாத முதலியார் ... 7

குடிசையில் குபேர போகம் (பாட்டு)
'சுரபி' ... 9

நடந்த காவேரி
மு. அருணாசலம் ... 10

சிருஷ்டி (கதை)
ஸி. ஆர். ஸரோஜா ... 12

விநோத அரசர்கள்
செல்லம்மாள் ... 15

ஜவுளிக்கடையிலே (கதை)
ரா. ஸ்ரீ. தேசிகன், எம்.ஏ. ... 17

ஜப்பான்
ஏ. கே. செட்டியார் ... 20

கின்னரகிரி சுந்தரவதி (கதை)
எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் ... 22

ஜமீந்தாரிணி (தொடர்கதை) ... 25

காதல் கன்னிகை (கதை)
வி. ஆர். எம். செட்டியார் ... 28

வீரன் கடமை (ஓரங்க நாடகம்)
சுவாமி சுத்தானந்த பாரதியார் ... 30

உதவாக்கரைப் படிப்பு
லியோ டால்ஸ்டாய் ... 33

பறித்த பூக்கள் ... 35

புத்தக உலகம் ... 37

பாலர் பாட்டு: குருவித் தம்பதிகள்
'ஜீவன்' ... 38

,, கதை: விகடம் தெரியாத விகடன்
'நீலா' ... 39

ஒலியும் நிழலும் ... —

சக்தி

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

மலர் கூ : இதழ் க — விஷு—தை

கதவு திறந்ததா?

பர்டோலியிலே காங்கிரஸ் தலைவர்கள் கூடினார்கள். ஆலோசனைகள் புரிந்து சில முடிவுகளும் செய்தார்கள். முக்கிய முடிவுக்கு முக்கியப் பொறுப்பு ராஜாஜியைச் சேர்ந்தது. பர்டோலி நிகழ்ச்சிகளின் பின் விளைவுகள் என்ன?

(1) காந்திஜி சத்யாக்ரகப் பொறுப்பை விட்டு விலகினார்; அதாவது சத்யாக்ரகம் நின்றதென்றுதான் அர்த்தம். மறுபடியும் மகாத்மா ‘ஹரிஜன்’ முதலிய பத்திரிகைகளை ஆரம்பித்துள்ளார்.

(2) இந்தியா மந்திரி அமெரி, இருந்த இடத்தைவிட்டு இம்மியும் அசையவில்லை. நிலைமையில் ஒன்றும் மாறுதல் இல்லையென்று சொல்லிவிட்டார்.

(3) பிரிட்டிஷ் பிரதமர் ஸ்ரீ. சர்ச்சில், பதில் சொல்லப் போவதாய்ச் சொல்லுகிறார். யாருக்கு? காங்கிரஸுக்கு அல்ல. ஸர் டெஜ் பகதூர் முதலிய திரிசங்குப் பிரமுகர்களுக்கு.

(4) டோக்கியோ ரேடியோவில் ராஜாஜிக்குத் தினந்தோறும் ‘அஷ்டோத்தரம்’ நடப்பதாய்ச் சொல்லுகிறார்கள்.

(5) “நான் அப்போதே சொன்னேனே; சொன்னபடி நடந்தது பார்த்தீர்களா காங்கிரஸ்” என்று ஆனந்தக் கூத்தாடுகின்றன சில குட்டிப் பத்திரிகைகள்.



சத்யாக்ரகப் பொறுப்பை விட்டு நீங்கிய மகாத்மா காந்தி, தேசத்துக்கு வழிகாட்ட, தம்முடைய ‘ஹரிஜன்’ பத்திரிகைகளைத் தொடங்கிவிட்டார்.

பர்டோலியிலே அப்படி என்னதான் தீர்மானம் செய்யப்பட்டுவிட்டது? “இதைக் கொஞ்சம் விளக்குங்களேன்” என்று ராஜாஜியை யாரோ கேட்டார்களாம். “தீர்மானங்களுக்கு இப்படி அர்த்தம் கேட்பது ஏதோ மனக்கோளாற்றின் சின்னமேயாகும். தெளிவான வாசகத்தின் பொருளுக்கு வியாக்கியான மெதற்கு?” என்று சொடுக்கிவிட்டு, தமது வியாக்கியானத்தை அவர் விளம்பி யிருக்கிறார்.

ஆனால், உண்மை யென்ன தெரியுமோ? வியாக்கியானத்தினால்தான் முளைத்திருக்கிறது இப்போது வந்திருக்கிற விவகாரமெல்லாம். பம்பாய்த் தீர்மான வியாக்கியானத்திலே மகாத்மாவுக்கும் மற்றவருக்கும் அபிப்பிராயபேதம். சுயராஜ்யப்போரில் மட்டுமன்றி, தேசத் தற்காப்புக்குங்கூட அஹிம்சா சக்தியையே உபயோகிக்கவேண்டுமென்று பம்பாய்த்தீர்மானம் சொல்வதாக மகாத்மா எண்ணினார். அந்த அர்த்தம் தவறு என்று ராஜாஜி போன்றவர்கள் வியாக்கியானம் செய்துவிட்டார்கள். சத்யாகிரகப்பொறுப்பை மகாத்மா கைவிட்டார். ஆகையால், வியாக்கியான ஆசையைப்பற்றி ராஜாஜி ‘பூப்பூ’ செய்து பயனில்லை.

அது போகட்டும். பர்டோலித் தீர்மானம் என்ன புதிதாய்ச் சொல்லிவிட்டது? ஒன்றும் சொல்லவில்லை. “பம்பாய்த் தீர்மானம் ஊர்ஜிதம்” என்றே சொல்கிறது. பம்பாய்த் தீர்மானத்துக்கு இப்போது செய்யப்பட்டுள்ள பாஷ்யமும் அதன் மேல் மகாத்மாஜி கைக்கொண்டுள்ள நிலைமையும் சேர்ந்துதான், காங்கிரஸின் நிலைமையைச் சிறிது மாற்றி யிருப்பதாகச் சொல்லலாம்.

புதிய பாஷ்யத்தைப் பின்பற்றியே, காங்கிரஸின் தற்போதைய நிலைமையை நாமும் ஆராயவேண்டும். தெளிவாகச் சொன்னால், தேசத் தற்காப்புக்கு, இப்போதுள்ள நிலையில் பலாத்கார ராணுவம் உபயோகிக்கலாம் என்பது காங்கிரஸ் தலைவர்களின் கருத்து. ஆனால், சுதந்திரமில்லாவிட்டால், யுத்த முயற்சிகளில் காங்கிரஸ் பங்கெடுத்துக்கொள்ள முடியாது என்றும் அதே தலைவர்கள் திட்டமாய்ச் சொல்லுகிறார்கள்.

இதற்கெல்லாம் பச்சையாக அர்த்தம் சொல்லப்போனால், இதுதான் விஷயம்: சுயராஜ்யத்தைத் திரட்டி உருட்டித்தர பிரிட்டன் ஏதோ தயாராயிருப்பது போலும் அதற்கு இடறு கட்டையாக இந்தக் காந்தியும் இவருடைய பரிபூர்ண அஹிம்சா தர்மமுமே இருந்து வருவது போலும் விவகாரங்கள் நடந்திருக்கின்றன. இதனால், ஏதாவது பலன் விளையப் போகிறதா?

இந்திய சுதந்திரத்துக்குத் தடையாய் நிற்பது காந்தியின் அஹிம்சா தர்ம மல்ல. தேசத்தின் பேடித்தனமும் பிரிட்டிஷ் ராஜதந்திரிகளின் ஆணவமுமே யாகும். பிரிட்டிஷ் ராஜதந்திரிகளின் ஆணவத்தை வாதங்களாலும் சமிக்ஞைகளாலும் பாஷ்யங்களாலும் பிரார்த்தனைகளாலும் மாற்ற முடியாது. ஆகையால், இப்பொழுது சத்தியாக, 'சுயராஜ்யப் பார்சல்' பிரிட்டனிலிருந்து நமக்கு வந்து சேருமென்று தோன்றவில்லை. தவறி, சந்தர்ப்பச் சூழ்ச்சிகளால், பிரிட்டிஷ் ராஜதந்திரிகளின் மனம் மாறி, சுயராஜ்யம் நமக்கு இன்று அளிக்கப்படுவதாகவே வைத்துக் கொள்ளுவோம். இந்த யுத்தத்தில் தங்கள் கூட்டாளிகளாக நாம் இருக்கவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில்தான் அந்தச் சுயராஜ்யம் பிரிட்டனிடமிருந்து நமக்கு வரும். அந்த வாக்கைக் காப்பாற்ற நம்மால் முடியுமா?

இன்று நாம் எந்த நிலையில் இருக்கிறோம்? தற்கால யுத்தம் எப்படியெல்லாம் நடக்கிறது? ராட்சஸர்களைப்போல் வரும் எதிரிகளைத் தடுக்க, தேசமக்கள் பூராவையுமே தயார் செய்தால்தான், தற்கால யுத்தத்தில் சமாளிக்க முடியும் என்று ராஜாஜியே சொல்லுகிறார். தேசமக்கள் பூராவையும் பலாத்காரத் தற்காப்புக்குத் தயார்செய்வதென்றால், அதற்கு ஏராளமான ஆயுத வசதிகள் வேண்டும். கைக்குண்டுகளை உபயோகித்து எதிரி டாங்கிகளைத் தடுப்பது எப்படி, துப்பாக்கி சுடுவதெப்படி என்றெல்லாம் பிரிட்டனில் ஒவ்வொரு மனிதனும் அறியும்படி பத்திரிகைகள் பிரசாரம் செய்துவருகின்றன. நம் தேசத்திலோ ஆயுதச் சட்டம் இன்றளவும் சீறிக் கொண்டு நிற்கிறது. நாளைக்கே சுயராஜ்யம் வந்தாலும், அடுத்த க்ஷணத்திலே தேசமக்கள் பூராவையும் பலாத்கார எதிர்ப்புக்குத் தயாராக்க முடியுமா? 100 டாங்கிகள் வைத்திருப்பவனைவிட 200 டாங்கிகள் வைத்திருப்பவன்தான் பலாத்கார யுத்தத்தில் அதிக வல்லமையுள்ளவன்; அவன்தான் ஜயிப்பான். ஆகையால், நினைத்த நேரத்திலே அம்மாதிரி ஆயுதசிருஷ்டிதான் முடியுமா?

அனுபவ ரீதியாகப் பார்த்தாலும், இன்றுவரை நிர்க்கதியாயிருக்கும் நமக்கு, காந்தி வழி ஒன்றுதான் சாத்தியமாகும். அதாவது, ஜப்பானியனோ, ஜெர்மானியனோ எந்த எதிரியையும் நமது அஹிம்சா தர்ம ஒத்துழையாமையின் மூலம்தான் எதிர்க்க இயலும். சுயராஜ்யம் பெறுவதில் அஹிம்சை வெற்றியடையுமானால், தேசத் தற்காப்பில் அது தோல்வியடையும் என்பதில் அர்த்தமேயில்லை. அஹிம்சையை அடியோடு கைவிடத் துணியாத காங்கிரஸ், இந்தப் பாகப்பிரிவினையெல்லாம் செய்வது நாணயந்தான் ஆகுமா?

மொத்தத்தில், இன்று காங்கிரஸ், மாலுமியில்லாத மரக்கலம் போல் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. அதன் தீர்மானம் எந்தக் கதவையும் திறந்து விடவில்லை. எல்லாம் பழைய நிலைமைதான். பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் நம்முடன் சமரசத்துக்குக் காத்து நிற்கவுமில்லை. அப்படிக்கிருக்க, ஏன் இந்தக் கோளாறெல்லாம்? இன்று இந்திய அரசியல் அவந்தரைக்கு ஓரளவு பிரிட்டன்தான் காரணம் என்றாலும், ஒரே தலைவனிடமும் ஒரே தத்துவத்தினிடமும் நமக்குப் பரிபூரண நம்பிக்கையும் விசுவாசமும் ஏற்படாமல், மனக்குரங்கைத் திரியவிட்டுக் கொண்டிருப்பதே பெருங் காரணமாகும். இன்று தேசமக்கள் அந்த ஒரே தலைவன், இணையற்ற தலைவன், மகாத்மா காந்தி காட்டும் மார்க்கத்தையே நம்பியிருக்கவேண்டும். தேசம் உய்வதற்கு வேறுவழியெதுவும் கிடையாது.

அமெரி போனால்

அமெரிக்கு அநேகமாகக் 'கல்தா'க் கிடைத்து விடலாம் என்றும் அவர் ஸ்தானத்தில் ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் இந்தியா மந்திரியாக நியமிக்கப் படலாமென்றும் ஒரு வதந்தி கிளம்பியிருக்கிறது. ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ், ஜவஹரின் நண்பர். அபேதவாதப் பற்றுடையவர். ருஷியாவுக்கு பிரிட்டிஷ் ஸ்தானிகராய்ச் சென்று, தமது ராஜதந்திரத்தால் வெற்றிகரமாய் அதை யுத்தத்தில் கொண்டு வந்து சேர்த்தவர். அவர் இந்தியா மந்திரியாய் வந்தால், ரொம்ப லாபமுண்டாகும் என்று சிலர் எண்ணலாம். ஆனால், பிரிட்டிஷ் சர்க்கார் ஜோதியில் ஐக்கியமாகிவிட்ட ஒருவர் தனிப்பட்டு எதுவும் செய்து விட முடியும் என்று நமக்குத் தோன்றவில்லை. 'தலையிருக்க வால் ஆடுமா?' சர்ச்சிலின் பிடிவாதம் தீருமளவும் எந்த ஆள்மாற்றமும் பயன்படாது. ஆனால், கொள்கை மாற்றத்துக்கு ஆள்மாற்றம் கொஞ்சம் உதவத்தான் செய்யும்.

விசேஷ பேட்டி :

விஜயலட்சுமி பண்டிதை — தி. ஜ. ர.

ராஜபோகத்துடன் வாழ்ந்த ஒரு குடும்பத்தின் ஆண், பெண் அடங்கலும், அந்த 'அரை வேட்டிப் பக்கிரி' காந்தி இருக்கிறாரே, அவரது மந்திர சக்தியில் கட்டுண்டு, பரமதியாகங்களைச் செய்து விட்டதென்றால், அது நேருஜியின் குடும்பம்தான். பண்டித ஜவஹரின் தங்கையான விஜயலட்சுமி பண்டிதையும் அதில் ஒருவராவார்.

விஜயலட்சுமியைக் காண அலஹாபாது செல்லலாம்; அரண்மனை போன்ற 'ஆனந்த பவ'னைப் பார்க்கலாம்—இவ்விதம் நான் எண்ணமிட்டுக்கொண்டிருந்தேன். ஆனால், ஸ்ரீமதி விஜயலட்சுமி எனது இந்த ஆசைக்கெல்லாம் இடங்கொடுக்கவில்லை. "ஜனவரி 4௳ சென்னைக்கு வருகிறேன். அங்கேயே சந்திக்கலாம்" என்று, என் கடிதத்துக்குப் பதில் எழுதிவிட்டார்.

தேச ஸேவையிலும் தியாகத்திலும் ஈடு இணையற்ற அந்தக் குடும்பத்தின் பெருமை இன்று உலகப் பிரசித்தமாகும். ஆகையால், அதைப்பற்றி நான் இங்கே வர்ணிக்கத் தேவையில்லை.

விஜயலட்சுமி 1901-ஆம் வருஷம் பிறந்தார். மோதிலால் நேருவின் குடும்பத்திலே விஜயலட்சுமி 'செல்லக் குழந்தை.' அண்ணா ஜவஹர் பல வருஷம் மூத்தவர். ஹிந்துக் குடும்பங்களில் 'செல்லக் குழந்தை'யாகப் பெண்ணை வளர்ப்பது ரொம்ப அபூர்வமல்லவா? "இம்மாதிரி செல்லங் கொடுத்து வளர்ப்பதால், பின்னால் இவள் மிகவும் கஷ்டப்படப் போகிறாள்" என்று விஜயலட்சுமியைப் பற்றி, நேரு குடும்பத்தின் நண்பர்களெல்லாம் கூறுவார்களாம்.

மோதிலால் தம்பதிகளுக்குத் தங்கள் மகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப விருப்பமில்லை. வருங்காலத்தில் தங்கள் குமாரி பிரபலமடையப் போவதாக, அவர்களுடைய நம்பிக்கை. அதற்கேற்ற கல்வியை அல்லவா புகட்டவேண்டும்? ஆகையால், வீட்டிலேயே ஓர் இங்கிலீஷ்காரியைத் தாதியாக நியமித்தார்கள். விஜயலட்சுமியின்

தேவைகளையெல்லாம் கவனித்துக் கொள்வதும் வெளியே அவருக்குத் துணை செல்வதும், தாதியின் வேலை. அரை டஜன் உபாத்தியாயர்கள் வந்து வந்து வெவ்வேறு பொருள்களைப் பற்றிய பாடங்களையும் வீட்டிலேயே விஜயலட்சுமிக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

காலையிலே எழுந்ததும், விஜயலட்சுமியின் முதல் வேலை குதிரைசவாரிதான். சின்னஞ் சிறு குழந்தையாயிருக்கையிலேயே, அவர் குதிரை சவாரி செய்யப் பயின்றார். அதிலே அவருக்கு மிகுந்த சந்தோஷம். பழைய 'ஆனந்த பவன'மும் மோதிலால் நேருவால் தேசத்துக்கு—காங்கிரஸுக்கு—நன்கொடையளிக்கப்பட்டுத் தற்போது சுயராஜ்ய பவனமாயிருப்பதுமான அந்த மாளிகையின் ஒரு பக்கத்தில் சிறிது இடத்தை, விஜய லட்சுமியின் குதிரை ஸவாரிப் பயிற்சிக்கென்றே ஒதுக்கிச் செப்பனிட்டு வைத்திருந்தார்கள்.

"குதிரை ஸவாரிப் பயிற்சியில் குழந்தைப் பருவத்திலே உங்களுக்கு ரொம்ப விருப்பம் என்று, "இப்படியாக நான் மந்திரியானேன்' என்ற உங்கள் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்களே; இப்போதும் அந்தப் பழக்கம் உண்டா? அல்லது விட்டுவிட்டீர்களோ?" என்று, அவரைக் கேட்டேன்.

"என்? எப்போதும் உண்டு. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இன்றும் நான் குதிரை ஸவாரி செய்து வருகிறேன். குன்றுகள், பசிய வனங்களுக்கெல்லாம் சென்று வருவேன்" என்று மிகுந்த உற்சாகத்துடன் அவர் பதில் அளித்தார்.

பொதுக் கூட்டங்களில் மிக ஆணித்தரமாகவும் 'பளிச்சுப் பளிச்' சென்றும் பேசுவது போலவேதான், தனியே சம்பாஷிக்கையிலும் விஜயலட்சுமி பேசுகிறார். அவருடைய ஒவ்வொரு பதிலின் ஆரம்பமும் ஏதோ சண்டைக்கு வருவதுபோலவே இருக்கும். "ஏதடா இது! அடுத்த கேள்வியைக் கேட்போமா, வேண்டாமா?" என்றுகூட நமக்குத் தோன்றும். ஆனால், பதிலின் தொடக்கம்தான் பெரும்பாலும் முகச் சுளிப்புடன் இருக்கும். பிறகு, சுமுகமாகவே பதிலைப் பூர்த்தி செய்வார். அவருடைய சம்பாஷணையில் பாதி இப்படி, பாதி அப்படி—சுளிப்பும் சுமுகமும் மாறி மாறியிருந்தன.

'ஆனந்தபவன்' காம்பவுண்டுக்குள் விளையாட்டுக்கள் ஆடுவது, கல்வி பயில்வது இந்த இரண்டோடும் அவரது பாலியம் சென்றது. சிறு வயதில் அவருக்கு மிகுந்த சுதந்தரம் இருந்ததென்றாலும், ஸினிமாக்களை மாத்திரம் இங்கிலீஷ் தாதியின் சம்மதமில்லாமல் அவர் பார்க்கமுடியாது. அந்தத் தாதியோ மிக நல்ல படங்களைக் கூடப் பார்க்கத் தக்கவை அல்ல என்று தள்ளுபடி செய்துவிடுவாளாம். ஆகையால், விஜயலட்சுமி ஸினிமாப் பார்ப்பது ரொம்ப அபூர்வம். நாட்டியமாடுவதில் அவருக்கு மிகுந்த ஆசையாம். ஆனால், அந்த ஆசையைக் கண்டிப்பாகக் கூடாதென்று பெற்றோர் தடுத்து விட்டார்களாம். ஆனால், தம்முடைய மூன்று குமாரிகளில் எவளும் இப்போது இந்த நாட்டிய ஆசை கொள்ளக் காணோம் என்று விஜயலட்சுமி கூறுகிறார்.

ஷேக்ஸ்பியரின் நாடக பாத்திரங்களான ரோஸாலிண்டைப் போலும் போர்ஷியாவைப் போலும் தாம் ஆகிவிட வேண்டுமென்று இளமைப் பருவத்தில் விஜயலட்சுமிக்கு மிக்க ஆசை. தேச சரித்திரங்களைப் படித்த போது, சரித்திர நாயகிகளான மேரி அன்டாய்னெட், எலிஜபெத் ராணி இவர்களைத் தமக்கு உதாரணங் கொள்வாராம். பிரிட்டிஷ் துருப்புகளுக்கு நடுவே புகுந்து வாள் தாங்கி வீராவேசத்துடன் சாடும் ஜான்ஸி லட்சுமிபாயாகவே தம்மை அவர் கற்பனை செய்துகொள்வதும் உண்டாம். பதின்மூன்று, பதிநாலு வயதாயிருக்கும்போது, அன்னி பெஸண்ட், ஸரோஜினி தேவி ஆகியவர்களை விஜயலட்சுமி சந்தித்தார். வாலிபநாட்களில் ஸரோஜினிதேவிதான் விஜயலட்சுமியின் லட்சியப் பெண்மணியாக விளங்கினார்.

கத்தியவாரைச் சேர்ந்த ஆர். எஸ். பண்டிதர், காஷ்மீரப் பெண்மணியான விஜயலட்சுமியை 1920-ஆம் ௵ நவம்பர்௴ சந்தித்தார். அவர்களின் அன்பு வளர்ந்தது. "நீ என்னை மணந்து கொள்வாயா? அநேக மைல் தூரம் நடந்து பற்பல பாலங்களைக் கடந்து வந்திருக்கிறேன். வருங்காலத்தில், நீயும் நானும் கை கோத்து நமது பாலங்களை இனி நாம் கடப்போமே?" என்று ஒருநாள் விஜயலட்சுமியை அவர் வேண்டினார். 1921-ஆம் ௵ மே௴ 9௳ அவ்விருவருக்கும் திருமணமும் நடைபெற்றது.

இளமையில் விஜயலட்சுமி அதிகமாகப் பொது ஸேவைகளில் ஈடுபடவில்லை. ஏதோ சிறு சிறு சமூகப் பணிகள் மட்டில் புரிந்து வந்தார். முதன் முதலாக, அவர் பொது ஸேவைக்கு முன் வந்தது 1932-ஆம் வருஷந்தான். அதாவது மகாத்மாஜியின் சத்தியாக்கிரகத்தில் கலந்து, தம் தந்தையும் அண்ணனும் பிற உறவினரும் சென்ற சிறையைத் தாமும் அடைந்துவிட்டார். அப்போது 15-மாதக் காவல். தற்போதைய சத்தியாக்கிரகத்தில், 1940-ஆம் ௵ சேர்ந்து, நான்கு மாதச் சிறைப் பரிசு பெற்றார்.

"நீங்கள் எத்தனை தடவை வெளிநாட்டுப் பிரயாணம் செய்திருப்பீர்கள்?" என்று அவரைக் கேட்டேன்.

"எத்தனை முறையா? அதை எப்படிக் கணக்கிட்டுச் சொல்ல முடியும்? எத்தனையோ முறை சென்றிருக்கிறேன். என் வாழ்நாளில் பாதிக் காலம் வெளிநாட்டுப் பிரயாணங்களிலேதான் கழிந்திருக்கிறது" என்று அவர் பதில் தந்தார்.

"சமூகத்தில் பெண்களின் அந்தஸ்து வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு விதமாயிருக்குமே. எந்த நாட்டில் பெண்களின் அந்தஸ்து மிக உயர்ந்த நிலையில் இருக்கிறது?" என்பது எனது அடுத்த கேள்வி.

"நான் அதை ஆராய்ந்ததில்லை. தவிர, நான் பார்க்காத நாடுகளும் அநேகம் இருக்கின்றன. ஆகையால், இதை நான் எவ்வாறு சொல்ல முடியும்? முடியாது" என்று அவர் மறுத்துவிட்டார்.

சத்தியாக்கிரகத்துக்குப் பிறகு, 1935-ஆம் ௵ அலஹாபாது முனிஸிபல் தேர்தல் நடந்தது. காங்கிரஸ் அபேட்சகர்களில் விஜயலட்சுமியும் ஒருவர். அமோகமான ஆதரவுடன் வெற்றியும் பெற்றார். பின்னால், கல்விக் கமிட்டியின் தலைவருமானார்.

முனிஸிபல் தேர்தலுக்குப் பிறகு, மாகாணச் சட்டசபைத் தேர்தலிலும் காங்கிரஸின் சார்பாக நின்று, விஜயலட்சுமி வெற்றி பெற்றார். பின்பு, சகல மாகாணங்களின் காங்கிரஸ் சட்ட சபை அங்கத்தினர்களையும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களையும் கூட்டிய ஒரு மகாநாடு நடைபெற்றது. மந்திரி பதவி ஏற்கவேண்டுமென்று ராஜாஜி பிரேரணை செய்தார். வாதப் பிரதிவாதங்கள் பலமாய் நடந்தன. எல்லாவற்றையும் அமைதியாய் வெகுநேரம் கேட்டுக்கொண்டிருந்த விஜயலட்சுமிக்குக் கடைசியில் தமது உணர்ச்சியை அடக்க முடியவில்லை. எழுந்து, பிரேரணையை எதிர்த்தார்; பதவி ஏற்கக்கூடாதென்று வாதித்தார். பதவிக் கோஷ்டியாருக்கு இது எரிச்சலாயிருந்ததாம். "ஒரு பெண் இதை எதிர்ப்பதாவது!" என்றுகூட, அவர்களில் சிலர் சொன்னார்களாம், "நாங்கள் இதில் ஜயம் பெற்றே தீர்வோம். அப்போது உங்களைச் சரியானபடி தண்டிக்கிறோம், பாருங்கள்" என்றும் ஒருவர் கோஷித்தாராம். பிரேரணை வெற்றி பெற்றது; விஜயலட்சுமியும் தண்டனையை அடைந்தார். தண்டனை என்ன தெரியுமோ? ஒரு மந்திரி பதவியை அவர் தலையிலே சுமத்தியதுதான்!

"நீங்கள் ஒரு மந்திரியாக வேண்டுமென்ற யோசனை முதன் முதலில் யாரிடமிருந்து வந்தது?" என்று ஒரு கேள்வி கேட்டேன்.

"கராச்சித் தீர்மானத்தை அனுசரித்தே நான் மந்திரியானேன். என் புத்தகத்தைப் படித்துப் பாருங்கள்; அதில் இருக்கிறதே விவரம்" என்றார் விஜயலட்சுமி.

புத்தகத்திலுள்ள விவரம் இதுதான்: 1937-ஆம் ௵ ஜூலை௴ ஒரு நாள் காலையில், பண்டித பந்திடமிருந்து இவருக்கு ஒரு தந்தி வந்தது. "மந்திரி சபையில் சேர்வீர்களா?" என்று அதில் அவர் கேட்டிருந்தார். பதவி ஏற்பது தவறு என்பது விஜயலட்சுமியின் திடமான அபிப்பிராயம். ஆனால், மேலேயுள்ளவர்களின் கட்டளையை மீறும் வழக்கம் அவரிடம் கிடையாது. அன்றியும், இந்த அழைப்பு, ஆணும் பெண்ணும் சமம் என்ற கொள்கையைக் காங்கிரஸ் அங்கீகரிக்கிறது என்ற ருசுவாகும். இந்தக் காரணங்களால், மந்திரி பதவியை விஜயலட்சுமி ஏற்றுக் கொண்டார்.

மந்திரி காரியாலயத்துக்குள் பிரவேசித்த உடனே 'கிடு கிடு' என்று உத்திரவுகள் போட ஆரம்பித்தார். முதன் முதலில் அவர் செய்த காரியம், மேஜை, நாற்காலிகளை ஒழுங்குபடுத்தியதாகும். அநாவசியமான தளவாடங்களை அப்புறப்படுத்தினார். ஒரு கிண்ணம் கொண்டுவரச் சொன்னார். காரியாலயத் தோட்டத்திலே நிறையப் பூத்திருந்த ரோஜா மலர்களைக் கிண்ணத்தில் நிறைத்துவைக்கச் சொன்னார். "பூவா! வழக்கமில்லையே! வழக்கத்துக்கு விரோதமாய் இங்கே ஒன்றும் செய்யக் கூடாது, அம்மணி!" என்று பிரலாபித்தார் குமஸ்தா. "நானே போய்ப் பறித்து வருகிறேன்" என்று கிளம்பினார் விஜயலட்சுமி. 'தலைக்கு மேலே போய்விட்டது!' என்று எண்ணிய குமாஸ்தா, தாமே போய்ப் பூவைக் கொய்து வந்தார். முதலில் சுலபமான ஒரு தஸ்தாவேஜிக் கட்டை எடுத்துப்

படித்து, விஜயலட்சுமி தமது அபிப்பிராயத்தை எழுதினார். பிறகு, சிக்கலான மற்றவைகளும் அவருக்குச் சுலபமாயின.

பட்ஜெட் வந்தது. 'பூஜ்யம், பூஜ்யம், பூஜ்ய'மாக ஏகச் சுழிகள் அந்தத் திட்டத்திலே நிறைந்து கிடக்கக் கண்டதும், அவரது தலை சுழல ஆரம்பித்து விட்டது. "இந்தப் புள்ளி விவரங்கள் என்னைத் திகிலடையச் செய்கின்றன. என் பார்லிமெண்டரிக் காரியதரிசி இவைகளை எனக்கு விளக்கினால் தேவலை" என்று ஒரு சீட்டு அனுப்பினார். பதில் உடனே வந்தது: "புள்ளி விவரங்கள் உங்களைத் திகிலடையச் செய்கின்றனவா? நான் நம்பமாட்டேன். எத்தனையோ பட்டாளங்கள் வந்தாலும் அவைகளையெல்லாம் எதிர்த்து நிற்க, கனம் மந்திரி தயார் என்று எனக்குத் தெரியும். என்னைத் தைரிய மூட்டவே இந்தச் சீட்டை அனுப்பியிருக்கிறீர்கள் என்று எண்ணுகிறேன்" என்ற பதிலுடன், புள்ளி விவரங்களையும் விளக்கி எழுதினார் அந்தக் காரியதரிசி.

"நீங்கள் மந்திரி பதவி வகித்துச் சாதித்த காரியங்களில், எது மிகச் சிறந்தது என்று கருதுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

முகத்தை ஒரு புறம் திருப்பிக் கொண்டு, அழுத்தமான குரலில், அதட்டுவதைப்போல, "இந்தக் கேள்வி எனக்குப் பிடிக்கவில்லை" என்றார் விஜய லட்சுமி.

'சரிதான்; இத்துடன் எழுந்து போக வேண்டியதுதான் போலிருக்கிறது' என்று எனக்குள் நான் எண்ணிக்கொண்டேன்.

இச்சமயம் ஒரு சிநேகிதியை விடை கொடுத்தனுப்பச் சென்ற அவர், சாந்த முகத்துடன் திரும்பி வந்து, "என்ன சொன்னேன்? கேள்வி பிடிக்கவில்லை யென்றா? அப்படி ஏன் சொல்லுகிறேன் என்றால், தாங்கள் ஏதோ சாதித்து விட்டதாக எண்ணுகிறவர்களாயிருந்தால், ஏதாவது சொல்லலாம். காங்கிரஸ் மந்திரி சபை பூராவுமே ஒன்றும் சாதிக்க வில்லை, சாதிக்க முடியவில்லை என்றே என் அபிப்பிராயம். முக்கியப் பிரச்னையின் ஒரே ஓர் ஓரத்தைத்தான் அதனால் தொட முடிந்தது. ஆகையால், தான், நான் இப்படிச் சொன்னேன்" என்று சமாதானம் கூறினார்.

கேள்வி: "தங்களுடைய ராஜீய சித்தாந்தம் என்ன? காந்தியிஸம், ஸோஷலிஸம், கம்யூனிஸம் என்ற ஏதாவது ஓர் இஸம் உங்கள் சித்தாந்தமாகுமா?"

பதில்: "எந்த இஸமுக்குள்ளும் எனது ராஜீய சித்தாந்தம் அடங்காது. எனக்கு அபேதவாதக் கொள்கைகளிலும் சமத்துவத்திலும் நம்பிக்கையுண்டு. எந்த இஸம் வேண்டும் என்ற கவலையை நாம் கொள்ளுமுன், இந்திய விடுதலைக்குப் போராடுவதே இப்போது நமது முக்கியமான கடமை."

"தங்கள் சகோதரரின் அபேதவாத அபிப்பிராயங்கள் உலகப் பிரசித்தம். அவர் சொல்லுவதையெல்லாம் தாங்கள் அங்கீகரிக்கிறீர்களா?" என்று கேட்டேன்.

"இல்லை" என்று அழுத்தந் திருத்தமாய்ச் சொன்ன அவர், "ஏன் அங்கீகரிக்க வேண்டும்? யார் அபிப்பிராயங்களையும்—அது மகாத்மா காந்தியேயானாலும் சரிதான்—முழுவதும் நான் அங்கீகரிக்க வில்லை. ஒவ்வொருவருக்கும் அபிப்பிராய சுதந்திரம் வேண்டும். நான் சுதந்திரமான அபிப்பிராயங்கள் உடையவள்" எனக் கூறினார்.

கேள்வி: "அபேத வாதத்துக்கும் அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட காந்தியத்துக்கும் பொருத்தமுண்டா?"

"இதற்குப் பதில் சொல்ல முடியாது" என்று சற்று நின்றார்: "இதற்குப் பதில் சொல்லுவதானால், நீண்டதொரு கட்டுரைதான் எழுதவேண்டும். நான் ஏதாவது சொல்ல, நீங்கள் ஏதாவது போட்டுக் குழப்பி விடுவீர்கள்" என்று மறுத்து விட்டார்.

நானும் விடவில்லை: "இரண்டுக்கும் ஏதேனும் பொருத்தமுண்டா, இல்லவே யில்லையா; அதை மாத்திரம் சொல்லுங்கள்" என்று மீண்டும் வினவினேன்.

"அவைகளிடையே சில அடிப்படையான ஒற்றுமைகள் மட்டிலும் இருக்கின்றன. அவ்வளவுதான் சொல்ல முடியும்" என்று சுருக்கமாக அவர் குறிப்பிட்டார்.

கேள்வி: "காங்கிரஸ் காரியக் கமிட்டியின் பர்டோலித் தீர்மானம் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?"

பதில்: "ஒவ்வொரு காங்கிரஸ் ஊழியரும் அதுபற்றித் தம் தம் அபிப்பிராயங்களைச் சொல்லிக் கொண்டு திரிவதும் அறிக்கைகள் விடுவதும் தவறாகும். ஆனால், ஒன்றுமட்டில் சொல்ல விரும்புகிறேன்: காந்திஜீயின் தலைமையை இந்த ஸமயத்தில் நாம் இழப்பது எனக்கு மிகுந்த வருத்தமாகும்."

கேள்வி: "பிரிட்டிஷ் சர்க்கார் இறங்கி வருவதாக வைத்துக் கொள்வோம். இந்தியத் தேசிய ஸர்க்காரில் காங்கிரஸூம் பங்கெடுத்துக் கொண்டால், மகாத்மா ஜீயின் நிலைமை என்ன ஆகும்?"

பதில்: "தற்போதைய நிலைமையில், எந்தத் தேசிய ஸர்க்காரையும் காங்கிரஸ் அமைக்கக் கூடாதென்பதே என் கருத்து. சமூக அமைப்பு முழுவதுமே ஆட்டமெடுத்து விழும் தறுவாயில் இருக்கிறது. இந்நிலையில் நிகழவிருக்கும் சம்பவங்களின் போக்கை, காங்கிரஸ் அதிகாரம் வகிப்பதன் மூலம் மாற்றவே முடியாது."

"இன்னும் ஒரே ஒரு கேள்வி: காங்கிரஸ் தீர்மானம் என்னவாயிருந்தாலும் சரி; நீங்கள் சத்தியாக்கிரகம் செய்யவேண்டுமென்று, உங்களைச் சொந்த முறையில் மகாத்மாஜீ ஆக்ஞாபித்தால், என்ன செய்வீர்கள்?" என்று கடைசியாகக் கேட்டேன்.

"உடனே செய்வேன்" என்று, சற்றும் தயக்கமின்றிச் சட்டென்று பதில் அளித்தார். மேலும் தொடர்ந்து, "நான் ஒரு சமாதான வாதி. சகல யுத்தங்களுமே கூடாதென்று எதிர்ப்பவள். ஆகையால், இந்தக் கொள்கையின்மீது சத்தியாக்கிரகம் செய்ய என்னைக் காந்திஜீ கட்டளையிட்டால், அப்படியே செய்வேன்" என்றார்.

"வந்தனம்" என்று கூறி, இதனுடன் விடைபெற்றேன்.

மியாமி என்னுமிடத்தில், ஒரு மனிதன் இரண்டு வைரங்களைத் தன் பற்களுக்கிடையே பதித்துக் கொண்டிருக்கிறான். தான் செத்தால், தனக்குக் கிரியை செய்வோருக்குச் சன்மானமாகவே அவைகளை அப்படிப் பத்திரம் செய்திருக்கிறானாம்!

ஆசனங்கள்:

வாய்வு நீக்கும் பரிகாரம்

டி. வி. திருவேதி

வயிற்றிலே வாய்வு சேர்வதுதான் அஜீர்ணத்துக்கும் அநேகவித வயிற்று நோய்களுக்கும் காரணமாகும். அந்த வாய்வு உபத்திரவத்தை நீக்கிக்கொள்ள மிக முக்கியமான சில ஆசனங்கள் உண்டு. அவற்றை இங்கே விளக்குகிறேன்:

பிருஷ்டாசனம்

கீழே ஜமக்காளமாவது பாயாவது விரித்துக் கொள்ளவும். விரிப்பில் மல்லாந்து படுக்கவும். (கோவணமோ, லங்கோடோ இறுக்கிக் கட்டலாகாது. ஜிட்டி அல்லது கச்சம் கொஞ்சம் தளர இருக்கட்டும்.) முதல் படத்தில் உள்ளவாறு வலது காலை மடக்கி, மார்பிலே முழங்கால் படும்படி இரண்டு கைகளையும் கோத்து முழங்காலை அமுக்கவும். பிறகு வலது காலைப் பழையபடி நேராக நீட்டிவிட்டு, இடது காலை மடக்கி

படம் 1. பிருஷ்டாசன முதல் பயிற்சி

முன்போல் மார்பில் அழுந்தச் செய்யவும். இப்படி இரண்டு கால்களையும் மாற்றி மாற்றி 20 அல்லது முப்பது தடவை அப்பியாசம் செய்யவும். வேகமாகச் சுவாசம் விடவேண்டாம்; சாதாரணமாக விடவும். மார்பிலே முழங்கால் அழுந்தும்போது, சுவாஸத்தை நிறுத்தி, காலை நீட்டும் போது விடவும். முரட்டுத் தனமாய் இந்த அப்பியாசத்தைச் செய்வது கெடுதல். ஆகையால், ஜாக்கிரதையாகச் செய்யவும்.

இந்தப் பயிற்சி நன்ருய் வந்த பிறகு, இரண்டாவது படத்தில் கண்டவாறு, இரண்டு முழங்கால்களையும் சேர்ந்தாற்போல் முதலில் மார்பில் அழுத்தப் பயிலவும். கடைசியில் இரு முழங்கால்களும் மூக்கு நுனியைத் தொடும்படி வளைக்கவும். இந்த அப்பியாசத்திலும் முதல் அப்பியாசத்தைப் போலவே, இரு கால்களையும் நீட்டுவதும் பிறகு வளைத்து மூக்கு நுனியை முழங்கால்கள் வளைந்து தொடச் செய்வதுமாய்த் திரும்பத் திரும்ப 10 அல்லது 15 தடவை செய்யப் பழகவும். இதிலும், கால்களை நீட்டும் போது சுவாஸத்தை விடவும் வளைக்கும் போது நிறுத்தவும் வேண்டும். சுவாஸத்தை ஒரு போதும் வாயினல் விடக்கூடாது. சுவாஸமோ பெருமூச்சோ வாயால் விட்டால், தீங்கு நேரும். ஆகையால், அப்படிச் செய்யவே கூடாது.

படம் 2. பிருஷ்டாசன இரண்டாம் பயிற்சி

பலன்கள்: இந்த இரண்டு பயிற்சிகளும் முக்கியமாய் அடி வயிற்றுக்கு மிக்க நன்மை செய்யும். காலுக்கும் உரமூட்டும். இரண்டாவது அப்பியாசத்தின் போது, கால்களால் அடிவயிறும் கழுத்தால் மார்பும் அழுத்தப்படுவதால், இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட வயிறு, நல்ல பயிற்சி பெறுகிறது. ஆகவே வயிற்றிலுள்ள வாய்வு அகன்று, தொந்தியும் கரையும்.

உத்தித பாதாசனம்

விரிப்பில் முன் மாதிரியே மல்லாந்து படுக்கவும். கால்கள் இரண்டும் நேரே நீட்டியிருக்கவும். கைகளை மூன்றுவது படத்தில் கண்டவாறு, துடைப் பக்கத்தில், பூமியில் படாமல் உடம்போடு சேர்த்து வைத்துக் கொள்ளவும். இரண்டு கால்களையும் சேர்த்து, படத்தில் உள்ளவாறு நேராக மேலே தூக்கிச் சில விநாடி நேரம் அப்படியே நிறுத்தவும். பிறகு, கால்களை முன் போல மெதுவாகக் கீழே நீட்டவும். கால்களைத் தூக்கும்போது சுவாஸத்தை அடக்கவும்; கீழே கால்களை நீட்டும்போது சுவாஸத்தை விடவும். இந்த அப்பியாஸத்தை 10 அல்லது 15 தடவைகள் செய்யப் பழகிய பின்பு, பின் வருகிறபடி சிறிது மாற்றி இதே அப்பியாசத்தைச் செய்ய வேண்டும். அதாவது, மேலே உயர்த்திய கால்களைக் கீழே கொண்டு வரும்போது பூமியில் படாமல் தரைக்கு நாலங்குல உயரத்திலேயே நிறுத்த வேண்டும். பிறகு மேலே உயர்த்த வேண்டும். இவ்வாறு மூன்று அல்லது நான்கு தடவை செய்யவும். இதிலும் முன்போலவே சுவாஸ விதிகளை அனுஷ்டிக்க வேண்டும்.

பலன்கள்: இந்த ஆசனத்தினல் வயிற்றின் நௌலிக்கு நல்ல சக்தியும் நாபியில் உள்ள சூரிய சக்கிரத்துக்குப் பலமும் உண்டாகும்.

படம் 3. உத்தித பாதாசனம்

கார் காலம்

[டி. கே. சிதம்பரநாத முதலியார்]

காலங்களைக் கவிஞர்கள், மனித மனோ நிலையோடும் இயற்கைக் காட்சிகளோடும் பொருத்தி வர்ணிப்பார்கள். தமிழ்க் கவிஞர்கள் கார்காலத்தை வர்ணிக்கும் மூன்று அற்புதக் கவிகளை டி. கே. ஸி. இங்கே நாம் அனுபவித்து இன்புறச் செய்கிறார்.



தமிழ் நாட்டில் இப்போது பனிக்குல்லாக்களையும் கம்பிளிப் போர்வைகளையும் பார்க்கலாம். இந்தப் பனிக்காலம் உத்ஸாகத்துக்கு உரிய காலம் அல்ல. இது மாசிவரையும் எட்டும். பிறகு ஆறு மாசம் வேனிற்காலம். அந்த வேனிற்காலத்தில் பங்குனி, சித்திரை, வைகாசி மாசங்கள் இள வேனில் என்றும் அடுத்த மூன்று மாசங்கள் முதுவேனில் என்றும் சொன்னார்கள்.

முதுவேனில் என்றால், ஒரே வறட்சிதான். எல்லாருமே மழையை எதிர்பார்க்கிறார்கள். புரட்டாசியில், எதிர்பார்த்த மழை வந்து விடுகிறது. புரட்டாசி ஐப்பசி கார்த்திகை ஆகிய மூன்று மாசங்களும் கார் காலம். நம்மை ரக்ஷிப்பதற்காகவே, மேகங்கள் கிழக்குத் திசையி லிருந்து புறப்பட்டு வந்து வானத்தில் உலாவுகின்றன. மேகத்தைத் தமிழ்க் கவிஞர்கள் எப்படி எல்லாமோ புகழுவார்கள்.

தமிழ்க் கவிஞர்கள் கொடை வள்ளலைப் பார்த்து, 'முகிலே' அதாவது 'மேகமே' என்று புகழ்வார்கள். அழகு வழியும் கிருஷ்ணனது மேனியைப் பார்த்து, 'கொண்டல் வண்ணனே' என்று ஈடுபடுவார்கள்.

புல்லும் பூவுமே, நம்முடைய நாட்டில், மழையை எதிர்பார்த்த வண்ணமாய் இருக்கின்றன. பூமா தேவியின் முகம், மழை பொழிந்த மாத்திரத்தில், மலர்ந்து விடுகிறது.

புது வெள்ளம் சுழித்தோடும் ஆறுகள் எல்லாம், மக்களை, முக்கியமாகப் பெண்களைப் பார்த்து, "நீராட, வாருங்கள் வாருங்கள்" என்று அழைக்கின்றன. இயற்கையோடு ஒட்டி வாழும் பெண்களுக்கு, புதுப்புனல் ஆடல் ஆனந்தமே. அப்படி நீராடுவதால், அவர்களுடைய உடலும் மேனியும் புத்துயிர் பெற்றுத் திகழ்கின்றன.

ஆனால், கொஞ்சம் தூற்றல் ஆரம்பிக்கவும், பிளானல்ச் சட்டை எங்கே, 'புல்லுவா' எங்கே என்று கேட்கிற சாரி கட்டிய தெர்மா மீட்டர்களுக்கு மழை பிடிக்காது தான். உடம்புக்குக் கேடு கூட விளைந்துவிடும். டாக்டரும் நாடி பார்க்கும் நாகாபரணத்தைக் கழுத்தில் தொங்கவிட்டுக்கொண்டு வந்து விடுவார்.

ஆகையினால்த்தான், இயற்கையோடு ஒட்டிய பெண்களுக்கே மழைக் காலம் ஆனந்தத்தையும் ஆரோக்கியத்தையும் அழகையும் கொடுக்கிறது என்று சொல்லுகிறோம்.

இந்த உவகை ஊட்டும் கார் காலத்தில் நாயகர்களோடு குலாவி இருக்க வேண்டும் என்று பெண்கள் எண்ணுதல் இயல்பு. இந்த இயல்பை ஒட்டியே கார் காலத்தில் நாயகர் நாயகிகள் பிரிந்திருக்கக் கூடாது என்ற ஐதிகமும் ஏற்பட்டிருக்கிறது. ஐதிகமாய் இருந்தாலும், அதற்குள்க் காதல் தத்துவத்தின் அடிப்படையான உண்மை ஒன்று கிடக்கிறது என்பது வெளிப்படை.

தமிழ்க் கவிஞர்கள்; பூர்வமான தமிழ்க் கவிஞர்கள்—கார் காலத்தை வைத்து அருமையான காதல்க் கவிகள் பாடி யிருக்கிறார்கள். எப்படிப் பாடுகிறார்கள் என்று பார்ப்போம்.

திருவாரூர் ஸ்தலத்தில் எழுந்தருளி யிருக்கும் சிவபிரானிடம் காதல் கொண்டு அவருடன் சதா உறவாடிக்கொண் டிருந்தாள் ஒரு பெண். இடையில்ப் பிரிவு ஏற்பட்டு வருந்திக்கொண் டிருக்கிறாள். பல நாளாய்த் தூக்கமே இல்லை. இந்த நிலையில் மாடியிலிருந்து ஜன்னல் வழியாகக் கிழக்கே பார்க்கிறாள். சுற்றியுள்ள பூந்தோட்டத்தையும் பார்க்கிறாள். தோட்டத்தில், தோன்றிச் செடியானது செக்கச் செவேர் என்று பூப் பூத்திருக்கிறது. கார் காலம் வரப்போகிறதென்று விளம்பரம் போடுகிறது அது. அப்படியானால் பெண்ணால் சகிக்க முடியுமா? பக்கத்தில் நின்றுள்ள தோழியைப் பார்த்துப் புலம்புகிறாள் :

[சேரமான் பெருமாள் நாயனார் பாடுகிற பாட்டு]

'துயிலாநோய் யாம் தோன்ற'

தூக்கம் இன்மை எனக்கு ஒரு நோயாய் வந்துவிட்டது.

'துயிலாநோய் யாம்தோன்ற
தோன்றித்தீத் தோன்ற
மயில் ஆல,'

மயிலும் ஆட ஆரம்பித்துவிட்டது. இந்த அறிகுறிகளோடு வெகு ஆபத்தான காரியமும் வந்துவிட்டது.

நாயகன் சாமான்யப்பட்டவனா? எட்டாத அண்டங்களுக்கும் அப்பாலுள்ள புண்ணிய மூர்த்தி; வெண் திங்களை அவனுக்குத் தலையில்ச் சூடும் கண்ணி. அவனுடைய நீலகண்டத்தின் அழகை என்ன என்று சொல்லுகிறது !

இப்போது பாட்டைப் பார்க்கலாம்.

'துயிலாநோய் யாம்தோன்றத்
தோன்றித்தீத் தோன்ற,

மயில்ஆல வந்ததால்
மாதோ !—அயலாய
அண்டத்துக்(கு) அப்பாலன்
வெண்திங்கள்க் கன்னியான்
கண்டத்துக்(கு) ஒப்பாய
கார்.'

ஜன்னல் வழியாகப் பார்த்து நின்ற பெண்ணுக்கு, கீழைய வானத்தில் எதிர்பாராதவண்ணம் திடீரென்று மேகம் தென்பட்டதைச் செய்யுளின் உருவமே நன்றாய்க் காட்டுகிறது.

* *

இன்னொரு துறையில்க் கார்காலம் வேலை செய்வதைப் பார்க்கலாம்.

நாயகன் அயல் நாட்டுக்கு வியாபாரம் சம்பந்தமாகப் போயிருக்கிறான். அவனது வேலை அங்கே முடிந்தது. எப்படியாவது கார்காலம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகத் தன் ஊருக்குப் போய் நாயகி பக்கத்தில் இருந்துவிட வேண்டும் என்று அவசரம் அவசரமாய்ப் புறப்படுகிறான். தேரில் ஏறுகிறான். தேர்ப்பாகனும் குதிரைகளை வேகமாக ஓட்டுகிறான்.

தேர் இப்படி ஓடிக்கொண்டிருக்க, கிழக்குத் திசையில்ச் சிலமேகங்கள் திரண்டு, உச்சிக்கு வந்து, மேற்கு முகமாய் ஓட ஆரம்பித்துவிட்டன. அவ்வளவுதான், நாயகனுக்கு இல்லாத வருத்தம் வந்துவிட்டது. இந்த மேகங்கள் நமக்கு முன்பாக நாயகி இருக்கும் இடத்துக்குப் போய்விடுமே. எவ்வளவு ஆற்றாமைக்கு உள்ளாய் விடுவாள் என்றெல்லாம் ஒரே ஆத்திரம் அவனுக்கு.

ஒரு வெறியே பிடித்து விடுகிறது. ஓடுகிற மேகங்களைப் பார்த்தே அலறுகிறான் :

'ஓடுகிற மேகங்காள்
ஓடாத தேரில், வெறும்
கூடு வருகுதென்று
கூறுங்கோள்—'

'தூரத்தேயுள்ள நந்திவர்மனது மாநகருக்குப் போவீர்களானால், என் நாயகியைப் பார்ப்பீர்கள். பார்த்தால் நான் ரொம்பவும் நொந்து உயிரற்ற வெறும் கூடாகவே தேரில் வந்துகொண்டிருக்கிறேன் என்று ஓ! மேகங்களே சொல்லுங்கள்.'

'ஓடுகிற மேகங்காள்
ஓடாத தேரில், வெறுங்
கூடு வருகுதென்று
கூறுங்கோள்—நாடறிய
நந்தித் திருவாளன்
மாநகரில், நன்னுதலைச்
சந்தித் திடுவீரேல்த் தான்.'

நாயகியின் ஆற்றாமையை உணர்ந்த நாயகனது ஆற்றாமை இப்படி இருக்கிறது.

* *

இனி நாயகியே வருந்துகிற பாடல் ஒன்று :

தூக்கணங்குருவிக் கூட்டைப் பார்த்திருப்பீர்கள். பிரம்ம சிருஷ்டியில் அது ஒரு அற்புதந்தான். உருவம் கோமாளிக் குல்லாவைப்போல் இருக்கும். பரந்து அகன்ற அடிப்புறந்தான் வாசல். வாசல் வழியாக மேலே போனால் விலாப் பக்கத்தில் குஞ்சுகள் தங்க ஒரு மாடி. பந்தோபஸ்தான மாடி. வேறெந்தப் பிராணியும் அதற்குள்ப் போக முடியாது.

இப்படி அமைந்த மாடிக்குள்ச் சில வேளை ஒரு அதிசயமான வஸ்துவைப் பார்க்கலாம். மின்மினிப் புழு என்பதாக ஒரு புழு. அந்தப் புழு ஒன்றைத் தூக்கணங்குருவி கொண்டு வைத்திருப்பதுண்டு. சாதாரணமாய் நாம் பார்ப்பது மின்மின் வண்டு. மின்மினிப் புழுவை மலைப் பிரதேசங்களில்த் தான் அதிகமாய்ப் பார்க்கலாம்.

இந்த மின்மினிப் புழுவை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு மழைக் காலத்து இரவை உற்று நோக்க வேண்டும்.

இரவு ஒரே இருட்டு. மழை 'சோ!' என்று விடாமல்ப் பெய்து கொண்டிருக்கிறது. பேச்சுத் துணைக்கு யாரும் இல்லை. மனமும் ஏதோ நைகிற நிலையில் நொடிகிறது. சரி. ஒரு விளக்கையாவது துணையாகப் பொருத்தி வைத்துக் கொள்ளுவோமே என்று செய்யத் தோன்றுகிறது.

இப்போது கவிஞர் சொல்ல வருவதைக் கேட்போம். அவருக்கு இரவே ஒரு குருவி, கருங்குருவியாகத் தோன்றுகிறது. கன்னல் என்ற சொல்லுக்கு இரவு என்று பொருள்.

கன்னல் எனும் கருங்குருவி
ககன மழைக்(கு) ஆற்றாமல்

இரவாகிய அந்தக் கருங்குருவிக்கு மழை அடித்துக் கொண்டிருப்பதைத் தாங்க முடியவில்லை, அதுவும் விளக்கேற்றி வைத்துக் கொண்டதாம்.

மின்னல் எனும் புழுவெடுத்து
விளக்கேற்றும் கார்காலம்.

ஒரு திசையிலிருந்து வேறொரு திசைக்கு நெளிந்து பாய்கிற மின்னல்தான் புழு.

இப்படிக் கார்காலத்தில் இரவு இருக்கும்போது, ஒரு பெண் பிரிவாற்றாமையால் வருந்துகிறாள். அவளுடைய காதல் நாயகன் தென்மதுரைக்கு அரசனான மாவலிவாணன்.

அவனை இரவில் எதிர்பார்த்தாள். ஆனால் வரவில்லை. மனம் இடிகிறது. அவளுடைய மனநிலைமையைச் சிறிதும் உணராமல்ப் பக்கத்திலுள்ள தோழிகள் வேடிக்கையும் வின்னியாசமும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நாயகிக்கோ இதைச் சகிக்க முடியவில்லை. நாயகன் உடனிருந்தால், மழையும் இரவும், அனுபவிக்கக் கூடியவையா யிருக்கும்; ஆனால் இப்போதோ கார்காலமும் மழையும் வேண்டாதவையாய்ப் போய் விட்டன.

தோழிகளும் துணை அல்ல. துணையென்றால், கார்காலத்தில், காதலன் ஒருவன்தானே?

கன்னல் எனும் கருங்குருவி
ககனமழைக் காற்றாமல்,
மின்னல் எனும் புழுஎடுத்து
விளக்கேற்றும் கார்காலம்,
மன்னவனும் தென்மதுரை
மாவலிவா ணனைப்பிரிந்திங்கு
என்ன பிழைப்(பு) என்ன நகைப்(பு)
என்ன இருப்(பு) இன்னமுமே.

பிரிவாற்றாமை என்ன சோகத்தோடு வருகிறது பாருங்கள்!

கானடாவைச் சேர்ந்த, பால்மெர் என்னும் நகரில், ஒரு கை நொண்டியான 71-வயதுக் கிழவன் ஒருவன், ஒற்றைக்கால் முடவனான மற்றொரு 86-வயதுக் கிழவனை அடித்து விட்டான். சண்டையின் காரணம் பெண்களைப்பற்றி இருவருக்கும் நடந்ததொரு தர்க்கந்தான்!

* *

கறுப்பு நாயை வெள்ளை நாயாக்க முயன்றானாம் திருவாழ்த்தான். விஸ்கான்ஸின் என்னுமிடத்தில், இப்போது ஓர் இந்தியனை, வெள்ளைக்கார ஜாதியின் கௌரவ அங்கத்தினனாகச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்களாம்!

22-1-42

முதல்

ஆனந்தன்

அல்லது

அக்னி புராண மகிமை

கிருஷ்ணகாந்த், M. V. மணி, S. D. R. சந்திரன்,
B. சரஸ்வதி, V. M. பங்கஜம், K. V. ஜிவா,
முதலியோர் நடித்தது.

★

கீழ்க்கண்ட இடங்களில் ஓடிக்கொண்டிருக்கிறது

- மதுரை — ஸிடி சினிமா
- திருச்சி — முருகன்
- கோவை — எடிஸன்
- புதுவை — பாரதி
- சேலம் — ராமலிங்கேஸ்வரா
- மாயவரம் — சுந்தரம்
- காரைக்குடி — நடராஜா

டைரக்ஷன்: **யோகி**

யோகி பிலிம்ஸ்
&
பாரத் மூவிடோன் தயாரிப்பு

★

—: டிஸ்ட்ரிபியூடர்ஸ் :—

சௌத் இந்தியா பிக்சர்ஸ்
மவுண்ட் ரோட் — மதராஸ்

GANI & SONS

THE HOME OF
ROLLS WATCHES

Known the world over
for accurate
performance
&
durability



Rolled Gold Rs. 55/-
9 ct. Gold Rs. 80/-
18 ct. Gold Rs. 110/-



Rolled Gold Rs. 60/-
9 ct. Gold Rs. 110/-
18 ct. Gold Rs. 155/-

Rolled Gold Rs. 55/-
9 ct. Gold Rs. 80/-
18 ct. Gold Rs. 110/-

எல்லா விசேஷங்களுக்கும் பரிசு வழங்க
ஏற்ற பற்பல விதமான சாமான்கள்

கனி & சன்ஸ்,

மதராஸ்

ஹெட் ஆபிஸ்:
55-57, ரட்டான் பஜார்

பிராஞ்சு:
190, மௌண்டு ரோடு

பிருதிவிராஜ்
(ரஜபுத்திர வீரனின் தேசீய சரித்திரம்)

அதி உன்னத தமிழ்ப் படம்

கோவை ஸெண்ட்ரல் ஸ்டுடியோவில்
தயாரித்தது

P. U. சின்னப்பா
T. S. பாலய்யா
N. S. கிருஷ்ணன்
காளி N. ரத்னம்
T. M. ராமசாமி பிள்ளை
S. D. சுப்பையா
T. K. சம்பங்கி
G. M. பஷீர்
T. R. B. ராவ்
V. M. ஏழுமலை

M. R. சந்தானலெக்ஷ்மி
A. சகுந்தலா
T. A. மதுரம்
C. T. ராஜகாந்தம்
P. S. ஞானம்
V. S சுசிலா

மற்றும் பலர்

டைரக்ஷன் : **B. சம்பத் குமார்**

விநியோக உரிமைகள்

மதுரை, திருச்சி, திருநெல்வேலி, ராமநாதபுரம் (புதுக்கோட்டை உள்பட) தஞ்சாவூர் (காரைக்கால் உள்பட) ஜில்லாக்களுக்கும் ஆந்திரா, பர்மா, வட இந்தியா ஆகியவைகளுக்கு பூரண உரிமை

விவரங்களுக்கு :—
V. S. M. கோபால கிருஷ்ணய்யர், புரோப்ரைடர்

HARAN TALKIES
181, EAST GATE :: MADURA

கைவசமிருக்கும் படங்கள்

மீனாக்ஷி கல்யாணம்
தஞ்சாவூர் (காரைக்கால் உள்பட) ராமநாதபுரம் (புதுக்கோட்டை உள்பட) திருநெல்வேலி, ஜில்லாக்களுக்கு பூரண உரிமை

மாணிக்க வாசகர்
மதுரை ஜில்லாவுக்கு பூரண உரிமை

வீர ஜெகதீஷ்
தெகடில் பூர்ண உரிமை

குடிசையில் குபேர போகம்

'சுரபி'

கறுப்பன் :

மொந்தையிலே மதுவிருக்கு ;
  மொச்சைச் சுண்டல் தானிருக்கு ;
கந்தையிலே காசிருக்கு, கண்ணே கண்ணுட்டி !
  கைலாசம் வேறுண்டோடி, பொன்னே கண்ணுட்டி !

கறுப்பாயி :

பானையிலே சோறிருக்கு ;
  பழையஊறு காயிருக்கு—முந்
தானையிலே சருவிருக்கு, கண்ணே கண்ணாளா—இது
  தவிரஒருசொர்க்கமுண்டோ, பொன்னேகண்ணாளா!

கறுப்பன் :

மந்தையிலே மாடிருக்கு ;
  மண்ணுஒரு துண்டிருக்கு—ஈசன்
தந்த ரெண்டு கையிருக்கு, கண்ணே கண்ணுட்டி—அந்த
  இந்திரனும் ஈடோடி, பொன்னே கண்ணுட்டி

கறுப்பாயி :

குந்த ஒரு குச்சிருக்கு ;
  குடிக்க நல்ல கூழிருக்கு ;
சிந்தையிலே நீயிருக்கே, கண்ணே கண்ணாளா-எந்தச்
  சீமாட்டி ஈடெனக்கு, பொன்னே கண்ணாளா !

நடந்த காவேரி

[மு. அருணாசலம்]

ஜடத்துக்கும் உயிர் தந்து விடுவான் கவிஞன். ஜீவநதியைப் பற்றிக் கேட்பானேன்? ‘காவிரி, தென்பண்ணை, பாலாறு’ என்று அடுக்கினான் நமது புதுமைக்கவி. அவைகளிலே, காவேரியைப்பற்றி ஒரு பழங்கவி வர்ணித்துள்ள வர்ணனை இன்பத்தை இங்கே பருகுங்கள்.

பழைய காலத்திலே ரோம் நகரமானது கல்வியிலும் செல்வத்திலும் நாகரிகத்திலும் சிறந்திருந்தது. அதன் ஆதிக்கம் ஐரோப்பா முழுமையும் பரவியிருந்தது. அக்காலத்தில் ஒரு சமயம், பராக்கிரமம் மிகுந்த பகைவனொருவன் பெருஞ் சேனையோடு அந்நகர்மீது படையெடுத்து வந்தான். சென்ற இடமெங்கும் அவனுக்கு வெற்றிதான். அவன் சேனைப் பெருக்கையும் வீரத்தையும் கேட்டு, ரோம் நகர மக்கள் பெரிதும் கலங்கியிருந்தார்கள்.

நகரருகே தைபர் என்ற பெரிய நதி ஓடிற்று. அதைக் கடந்துதான் அந்நகருக்குள் பிரவேசிக்க வேண்டும். தைபர் நதி மிக்க ஆழமும் அகலமும் வேகமும் உடையது. நகரருகிலிருந்த ஒரு பாலத்தின் வழியாக அதைக் கடக்கலாமே யொழிய, யாரும் நீரிலிறங்கிக் கடந்து விட முடியாது.

இக்காலத்துப் போர் முறையிலே ஒரு விஷயத்தைப் பார்க்கிறோம். விரோதிக்கு உபயோகப்படக்கூடாதென்பதற்காக, பெரிய பெரிய பாலங்களை-கோடிக் கணக்கான பொன்னைச் செலவிட்டுக் கட்டிய பாலங்களை - கட்டினவர்களே தகர்த்தெறிகிறார்கள். இதே போல அக்காலத்திலும், ரோம் நகர மக்கள் தைபர் பாலத்தைத் தகர்த்தெறிவது அவசியமென உணர்ந்தார்கள். இந்த நிலையில், பகைவனும் ஆற்றின் அக்கரையை நெருங்கி விட்டான்.

பாலத்தின் வாயில் மிகக் குறுகியது. அதனுடைய மறுகரையின் வாயிலில் மூன்று ரோம வீரர்களை நிறுத்தி, எதிரியின் வீரர் வருவதைத் தடுக்கச்செய்து, ரோம் நகர மக்கள் பாலத்தை உடைக்க ஆரம்பித்தார்கள். எதிரிகள் பாலத்தருகே வந்ததும், ரோம வீரர் மூவரையும் கண்டார்கள். வாயிலில் மூவர் மட்டுமே நுழைய முடியும். ஆகவே, பகைவரில் மூவர் மாத்திரம் தனியே வந்து, இவர்களோடு போர்புரிந்தார்கள். ரோம வீரர் வென்றார்கள். இவ்வண்ணமாக இவர்கள், எதிரியின் வீரர் வரவர, மூவர் மூவராகக் கொன்று குவித்தார்கள்.

இதற்கிடையில் பாலம் உடைபட்டது. விழப்போகுந் தருணம். திரும்பி வந்துவிடுமாறு இவ்வீரர் மூவரையும் நகர மக்கள் கூவியழைத்தனர். இருவர் திரும்பிவிட்டார்கள். மூன்றாவது வீரனாகிய ஹொரேஷியஸ் என்பவன் திரும்பு முன்னமே, பாலம் சாய்ந்து நொறுங்கி வீழ்ந்து, பிரவாகத்தில் மறைந்து விட்டது. இந்த வீரன் மட்டும் தனியனாக அக்கரையிலேயே நிற்கவேண்டியதாயிற்று. பகைவர் இவனைச் சிறைப்படுத்த முயன்றனர். இவனோ, அவர்களைப் பார்த்துச் சிரித்துவிட்டு, உருவிய வாளை உறைக்குள் செருகிக் கொண்டு, நதியின் வெள்ளத்திலே குதித்தான். மேலெல்லாம், சண்டையினாலேற்பட்ட பல காயங்கள். அணிந்திருந்த கனமான கவசங்களும் வாளும் அப்படியே இருந்தன. இக்காயங்களையும் பளுவையும் ஹொரேஷியஸ் சற்றும் லட்சியம் பண்ணவேயில்லை.

இந்தச் சரித்திரத்தை, மெக்காலே என்ற ஆங்கில ஆசிரியர் பாட்டாகப் பாடியிருக்கிறார். தைபர் நதியில் குதிக்கும் தருணத்தில், ஹொரேஷியஸ் என்ன சொன்னான் என்பதைச் சொல்லுகிறார்.

“தைபர் நதியே! ரோமர்களாகிய எங்கள் வழிபாட்டுக்குரிய எந்தையே! ரோம் நகரத்தானாகிய என் உயிரையும் உடலையும் வீரத்தையும் இப்போது உன்னிடம் ஒப்புவிக்கிறேன். பெற்றுக் காப்பாயாக!”

இவ்வாறு சொல்லிக் குதித்து, அந்த வீரன், நதியின் பிரவாகத்தையும் பகைவர் விட்ட அம்பு மழையையும் பொருட்படுத்தாமல் நீந்திச் சென்று, தன் படையிருந்த ரோம் கரையை யடைகிறான் என்று முடிகிறது மேலே சொன்ன பாட்டு.

மெக்காலே எழுதிய இந்தப் பாட்டை ஆங்கிலம் கற்ற யாவரும் படித்தே யிருப்பார்கள். நான்கு, ஐந்து, ஆறாவது பாரங்களில் ஏதாவதொன்றில் இது கட்டாயம் பாடமாக இருந்திருக்கும். ஐந்தாவது பாரத்தில் நான் இதைப் படித்ததாக ஞாபகம். கதை அருமையான கதை. வீரமும் தியாக உணர்ச்சியும் நிறைந்தது. ஆனால், மாணவர்களாகிய எங்களை அக்காலத்தில் மயக்கியது, கதையின் சுவையல்ல; பாட்டிலுள்ள வார்த்தைகளிலேயே எங்களுக்கு அளவு கடந்த மோகம். ஹொரேஷியஸ் சொன்னதாக மேலே காட்டப்பட்ட வரிகளிலே எங்களுக்கிருந்த ஈடுபாட்டை என்னவென்றே சொல்லமுடியாது. அந்த வார்த்தைகளையே எல்லோரும் சதா ஸ்மரித்துக்கொண் டிருந்தோம். தைபர் நதியை — தந்தையாகிய தைபர் நதியை — பாட்டில் பார்த்துப் பார்த்து வியந்துகொண்டே யிருந்தோம்.

நாட்டுப்புறப் பள்ளிக்கூடத்தில் படித்த காரணத்தினால், நதியென்றால் எங்களுக்கு ஏதோ கொஞ்சம் தெரியும். தினந்தோறும் காலையில் இரண்டுமணிநேரம் ஆற்றில் கும்மாளம் போட்டுக் கொண்டிருந்து விட்டு, ஆற்றைப்பற்றித் தெரியாதென்று சொல்ல முடியாதல்லவா? ஆனால், நாங்கள் கும்மாளம் போட்டது தைபர் நதியில்லை, காவேரி யாற்றில்தான். இருந்தாலும், காவேரியாறு சிறு பிள்ளைகள் கும்மாளம் போடுவதற்கு ஏற்றதேயொழிய, கவிக்கு விஷயமாக அமைய முடியுமா? காவேரியாறு பாட்டுக்குள்ளேயெல்லாம் ஓடிமீளுமா? இது பற்றி எங்களுக்குச் சந்தேகந்தான். இந்தத் திறமையெல்லாம் தைபர் நதிக்குத்தான் உரியது

என்று நாங்கள் எண்ணியிருந்தோம்.

மாணவனா யிருந்த காலமெல்லாம் போய் வெகு காலங்கழித்து இப்போதுதான் தெரிகிறது, காவேரி போன்ற நம் நாட்டு ஆறுகள் மட்டுமே பாட்டுக்குப் பொருத்த மானவை என்பது. தவிர, 'தந்தையாகிய தைபர்நதி' என்று யாரேனும் சொன்னால், கேட்டுக் கொஞ்சம் சிரிக்கவும் தெரிகிறது.

பொதுவாக நமக்கெல்லாம், நதி என்பது ஒரு பெண் உருவத்தோடேயே நினைவுக்கு வருகிறது. கங்கை யாற்றினிடத்துள்ள மன ஈடுபாடு காரணமாக, அதற்கு ஒரு பெண் உருவம் கொடுத்து. சிவபெருமானுடைய தலையின்மேலே ஏற்றி வைத்திருக்கிறோம்.

கருணை என்ற உயர்ந்த மனிதப் பண்பையும் பெண்ணாகவே உருவகம்செய்து பார்க்கிறோம். இறைவன் உயிர்களிடத்து வைத்துள்ள கருணையை அவனுடைய திருவருள் என்று சொல்லுகிறோம். இந்தத் திருவருளே சக்தி என்றும், உமாதேவி என்றும் சொல்லி, அந்தச் சக்திக்குச் சிவனுடைய திருவுருவத்தில் பாதியையும் வாங்கிக் கொடுத்திருக்கிறோம்.

நதியை நினைக்கும்போது, அதனிடம் அமைந்த இந்தக் கருணையைத் தான் முதன் முதலாகக் குறிப்பிட வேண்டி யிருக்கிறது. யாதொரு பிரதி யுபகாரத்தையும் எதிர் பாராமலே, உலகத்துக்கு வேண்டிய நன்மையை விரும்பிச் செய்கிறது மழை. அந்த மழை தானே, நதி? மழையினாலுண்டாகிற வளமனைத்தையும் நமக்கு ஊட்டுவது நதி. ஆயிரக்கணக்கான வருஷங்களாக, தான் செல்லும் நெறியெல்லாம் வளமும் சுகமும் பெருகும்படி செய்து வருகிறது; சிறு கைக்குழந்தைக்குத் தானே வலிய வந்து பாலூட்டும் தாயைப் போல உதவுகிறது. ஆகவே, நதியைப் பெண் என்று மட்டும் சொல்வதைவிட, தாயாகவே கொண்டு, அத்தாயின் கருணையில் பெரிதும் மனம் ஈடுபட்டு, அத்தாயை வழிபடுவது மிகப் பொருத்தமே யாகும்.

இதயத்தோடொட்டிய ஈடுபாடு மக்களுக்குத் தாயினிடத்து உண்டாகுமே யொழிய, தந்தையினிடத்து அவ்வளவாக உண்டாவதில்லை. ஆகவே, நதியைத் தந்தையாகப் பாவிப்பது குற்றமில்லை என்றாலும், உணர்ச்சி மிகுதி அதில் வெளிப்படவில்லை.

தைபர் நதியினிடத்து ஹொரேஷியஸ் கொண்டிருந்த அன்பைக் கண்டு ஒரு காலத்தில் வியந்தோம். அதே போல, பழைய ஆசிரியரொருவர் காவேரியாற்றினிடத்து எவ்வளவு ஈடுபட்டு அதைப் போற்றுகிறார் என்பதை அவருடைய கவி மூலமாகப் பார்க்கலாம்.

புரட்டாசி ஐப்பசி மாதங்களில் காவேரி யாற்றில் புதுவெள்ளம் கரை புரண்டு போய்க் கொண்டிருக்கும். வெள்ளத்தினால், நீரின் நிறமே சற்றுச் சிவப்பாயிருக்கும். நீரின் மேற்பரப்பிலே செங் கடம்பின் மலர்கள் ஏராளமாக மிதக்கும். இதன் இதழ்கள், நுண்மையான செம்பட்டின் இழைகளைப் போன்றவை. ஆற்றிலே, மேற்கிலும் கிழக்கிலும், கண்ணுக் கெட்டிய தூரம் வரை இந்தப் பூக்கள் மிதந்து போவது, ஒரு போர்வை போர்த்தி விட்ட காட்சியை நினைவூட்டும். இக்காட்சியைப்பல வருஷங்களுக்கு முன் பல முறை நான் பார்த்திருக்கிறேன். இன்றும் இதைக் காணலாம்.

தவிர, ஆற்றங் கரையில் எத்தனையோ விதமான மரங்களும் செடிகளு முள்ளன. அவற்றின் மலர்களும் எத்தனையோ வகை.

இம் மலர்கள் நீர்ப்பரப்பிலே மிதப்பது உண்டு. அக்காட்சி, அலங்காரமான பல நிறப் பூம் போர்வை போலத் தோன்றும்.

காவேரியின் இருமருங்கிலுமுள்ள கரைகளில் பூஞ்சோலைகள் அடர்ந்திருக்கின்றன. அவற்றில் பூத்திருக்கும் பூக்களிலுள்ள தேனை உண்ணவந்த வண்டுகளின் ரீங்காரமானது எந்நேரமும் கேட்டுக் கொண்டே யிருக்கிறது.

"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ ஆடை யதுபோர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி !"

பூக்கள் மிதந்து வரும் காட்சியானது, நதியாகிய பெண் ஒரு மணிப் பூவாடை போர்த்துள்ள தோற்றத்தைக் கொடுத்தது. ஆற்றிலே கயல்மீன்கள் ஓடுவதையும் துள்ளுவதையும் நெளிவதையும் காண, அப்பெண்ணின் கண்கள் இங்குமங்கும் பிறழ்வது போலிருந்தது. கடைசியாக ஆசிரியர், 'நடந்தாய் வாழி காவேரி' என்றார். 'நடந்தாய்' என்ற சொல்லை நாம் சற்றுக் கவனிக்கலாம். எத்தனையோ நதிகளில், மழை பெய்தவுடனே வெள்ளம் பெருக்கெடுத்துக் கரை புரண்டு வரும். உடனே கடகட வென்று வேகமாக ஓடி, அவ்வளவு நீரையும் கொண்டு போய்க் கடலில் கொட்டிவிட்டு, மறுநாளே வறண்டு போய்விடும். வேகமாக ஓடுகிற ஆறுகளின் நீர் முழுதும் பயிர்களுக்குப் பயன் படாது. ஆனால், காவேரியாறு அப்படியல்ல. மழை நீரை மெதுவாகத் தாங்கிவந்து, நாடெங்குமுள்ள வயல்களுக்கும் சோலைகளுக்கும் பாய்ச்சுகிறது. இந்த இயல்பையே ஆசிரியர், மேலே பெண் என்று குறிப்பிட்டதற்குப் பொருத்தமாக, மென்மையான நடையுடையவள் என்பது தொனிக்கும்படியாக, 'நடந்தாய்' என்று கூறினார்.

இனி, காவேரி மெல்ல நடந்ததனால் என்ன ஏற்பட்டது? இவளுடைய நாயகன், காவிரி நாட்டரசனாகிய சோழன். சோழனுடைய செங்கோல் நேர்மையாகவே இருந்தது; நன்னெறியினின்றும் பிறழவில்லை. இதுவே காவேரியால் விளைந்த பெரும் பயன். காவேரி தந்த வளத்தினால், நாடு செழித்தது, மக்கள் சந்தோஷமாக வாழ்ந்தார்கள். எனவே, மன்னன் அரசுமுறையும் செம்மையா யிருந்தது என்பதற்குக் கேட்பானேன்?

"கருங்க யற்கண் விழித்தொல்கி
நடந்த எல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன் வாழி காவேரி !"

காவேரி நதியின் அழகையும், அதன் இருபுறத்திலும் செறிந்துள்ள சோலைகளின் வளத்தையும், சோழநாடு முழுவதையும் ஊட்டிச் செல்கின்ற அதன் கருணையையும் கண்டு அனுபவித்தவர் ஆசிரியர். இந்த அழகு, வளம், கருணை என்பவற்றின் பயனைக் விளைந்தது மன்னன் செங்கோல் என்று அவர் முடிவு கட்டுகிறார். மாரி பொய்ப்பினும் தான் பொய்யாது, காவேரியாறு பருவந் தோறும் புது வெள்ளத்தைக்

கொண்டுவந்து சோழநாட்டுக்கு உதவி, பயிரைச் செழிக்கச் செய்தமையாலே, அந்நாடு எக்காலத்தும் எல்லா வளமும் நிரம்பப் பெற்றிருந்தது. அவ்வளத்தையும் அதன் பயனை விளைந்த மன்னன் செங்கோற் சிறப்பையும் பாட்டின் மூலமாய்க் காணும்போது, நாமும் ஆசிரியரோடு சேர்ந்து காவேரியாற்றை வாழ்த்தவே எண்ணுகிறோம்.

" மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ வாடை யதுபோர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி !
கருங்க யற்கண் விழித்தொல்கி
நடந்த எல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன் வாழி காவேரி ! "

இப்படியாக ஆசிரியர் பாடும் போது, பாட்டிலே உண்மையனுபவத்தைக் காண்கிறோம். நம்முடைய நாகரிகத்திலே, அதாவது தமிழர்களுடைய கலைப் பண்பாட்டிலே ஆற்றை எவ்வளவாக மதித்திருக்கிறோம் என்பது தெரிகிறது. காவேரியம்மன் என்றெல்லாம் நம்மவர்கள் சொல்லிப் போற்றுவதிலுள்ள பொருளும் புலப்படுகிறது. இந்த உயர்ந்த நிலையைக் கண்ட பிறகுதான், ஆசிரியர் மெக்காலே, ஹொரேஷியஸ் வாயிலாகத் தைபர் நதிக்குத் தருகிற பெருமையும் இன்னதென ஒரு வகையாக விளங்குகிறது.

திபேத்தியர்களில் படிக்கத் தெரிந்தவர் மிகவும் சொற்பம். வால்டேர் அஷோ என்ற சுதேச ஐரோப்பியன், கையால் அடிக்கும் அச்சு யந்திரத்தை வைத்துக் கொண்டு ஐம்பதே பிரதிகள் ஒரு சமாசாரப் பத்திரிகை போடுகிறான். அவற்றைப் பல லாமாக்களுக்கும் குருமார்களுக்கும் அனுப்புகிறான். அவர்கள் அவற்றைப் பகிரங்கமாகப் பிரசங்கம் செய்வதுபோல் ஜனங்களுக்குப் படித்துக் காண்பிக்கிறார்கள். ஒரு கோஷ்டியார் இப்படிப் படித்து முடிந்ததும், மற்றொரு கோஷ்டிக்கு அந்தப் பிரதிகள் போய்ச் சேர்கின்றன. இம்மாதிரி பிரயாணம் செய்துகொண்டு, மிகச் சிறிய தொரு கிராமத்தானை ஒரு செய்தி எட்டுமுன் ஆறுமாதந் தொடங்கி இரண்டு வருஷங்கள் கூட ஆகிவிடுகின்றனவாம் !

சிறு கதை :

சிருஷ்டி

[ஸி. ஆர். ஸரோஜா]

அதியற்புத மனிதனைப் படைத்தான் பிரம்மன். அவனது புலமைத் திறமை சிருஷ்டியின் வெற்றிதான். ஆனால், அது பயன் பெற்றதா என்றால், அதுதான் இல்லை. பிரம்மசிருஷ்டி வியர்த்தமாயிற்று. ஆனால், கலைவாணிக்குத் தோல்வியுண்டா? கடைசியிலும் அவளுக்கு வெற்றிதான்.

கலைவாணிக்குப் பிரம்மனின் சிருஷ்டியில் வெறுப்பு ஏற்பட்டு விட்டது. சூர்ய உதயத்திலிருந்து சதா அலுப்புச் சலிப்பு இல்லாமல், விசித்திரமான பிறவிகளைச் சிருஷ்டிக்கும் அவர், அவளுடன் ரம்மியமாய் ஒரு தினமாவது பேசியது கிடையாது. ஆகையால், அவள் சில காலமாகவே அவரை விட்டுப் பிரிந்து, மந்தாஸரஸ் என்ற பூங்காவில் தனியாய் இருந்து வந்தாள்.

அப்பொழுது பூலோகத்திலே இலக்கிய மணம் குறைந்து வந்தது. இலக்கியம் என்று ஒன்றிருப்பதாகவே நினைவில்லாமல், ஜனங்கள் கிடந்தார்கள். பிரும்மா தம் கையில் உருவாகிக் கொண்டிருந்த மனிதனைப் பார்த்தார். சிருஷ்டியிலே ஒரு மாறுதல். அதனால் உலகத்திலே ஒரு புதிய சகாப்தம் மலர விரும்பினார். ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதானே கவிசிரேஷ்டன் தோன்றுவது வழக்கம்? தம் கரத்திலிருக்கும் மனிதனை மிகச் சௌந்தர்யவானாகச் சிருஷ்டித்தார்; தம் தொழிலின் மேன்மையை வாணி சதா புகழ்ந்து வந்தவள், இப்படித் தனித்து வசிப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. மனிதனைக் கீழே வைத்தார். பூங்காவினுள் அவர் நுழைந்தபோது, கலைவாணி வீணைகானத்தில் லயித்திருந்தாள். அவளைச் சுற்றிச் சகல ஜீவன்களும் மெய்மறந்திருந்தன. "வாணீ!" என்று பிரும்மா கூப்பிட்டார். அவளுடைய பத்ம நேத்திரங்கள் திரும்பின.

"அன்பே! என் சிருஷ்டித் தொழிலின் மேன்மையை உணராமல் இப்படிப் பராமுகமாய் இருக்கலாமா? வா. அதன் மேன்மையைக் காண்பிக்கிறேன்."

"உங்கள் சிருஷ்டியிலா மேன்மை? அந்தச் சிருஷ்டியிலே உருவாகும் பிறவிகளில் ஆயிரத்தில் ஒருவன் தான் சிறந்தவனாக இருக்க முடிகிறது. சௌந்தர்யவானாகச் சிருஷ்டிப்பீர்கள். ஆனால், அவன் தலையில் கோர எழுத்தைக் கிறுக்கி விடுவீர்கள்" என்றாள் கலைவாணி.

"இல்லை; வா, போகலாம்" என்று அழைத்து வந்தார் நான்முகன். அவருடைய கையிலிருந்த மனிதனைப் பார்த்ததும், அவளே திடுக்கிட்டு விட்டாள். உருவம் பூராவும் முடிந்தது.

"இவன் யார்?" என்று கேட்டாள் கலைவாணி.

"ஒரு பெரிய கவி. இவனுடைய சிருஷ்டிகள் மிக அற்புதமாய் இருக்கப் போகின்றன. இவனுடைய கவிதைகளை உலகம் போற்றிக் கொண்டாடப் போகிறது" என்றார்.

மனிதன் பூலோகத்துக்கு அனுப்பப்பட்டான்.

* *

அவன் பிறந்த இடத்தில் சௌந்தர்ய தேஜஸ் நடனமாடிக் கொண்டிருந்தது. வேதங்கள் புகழும் ஹிமாலயம். அதனின்று வழியும் கங்கை; அதன் வனங்கள். அங்கே தேனைச் சிந்தும் மலர்கள் செறிந்த மரங்கள். குழந்தை, மேருவின் பாதத்தில் பிறந்து இயற்கையின் மடியில் வளர்ந்து வந்தது. ஆனால், ஒரு வேட்டுவ ஜாதியிலே. உறவினர்கள் அதைப் பார்த்துப் பெயர் வைக்க முடியாமல் திண்டாடிப்

ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்துப் பிரசுரங்கள்

விவேகாநந்த சுவாமிகளது நூல்கள்

	ரூ.அ.		ரூ.அ.
விவேகாநந்த சரித்திரச் சுருக்கம்	0 12	ஸ்ரீ ராமகிருஷ்ண வசனாமிர்தம்	1 8
கடிதங்கள் முதல் பாகம்	0 10	ஸ்ரீ சாரதா தேவியின் சரிதம்	0 8
விவேகாநந்த ஞானதீபம் முதல் தொகுதி	2 0	நமது தாய்நாடு	0 8
ஷை ராஜயோகம்	1 4	ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தர்	0 3
ஷை பக்தியோகம்	0 10	எல்லாவற்றிலும் இறைவனைக் காணல்	0 2
ஷை கருமயோகம்	0 12	நடராஜ வடிவம்	0 3
ஷை சிகாகோப் பிரசங்கம்	0 5	சந்யாசி கீதம்	0 ½
ஷை பக்தி மார்க்கம்	0 5	நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை	0 2
ஷை முத்தி நெறி	0 2	ஈஸோப நிடதம்	0 6
ஷை பவாஹரிபாபா	0 3	குருதேவர் வாக்கியம்	0 6
ஜகஜீவபரவிளக்க வினாவிடை	0 12	ஞானோபதேசம்	0 14
ஸ்ரீ ராமகிருஷ்ண உபதேச மொழிகள்	1 12	எனது குருநாதர்	0 3

சக்தி காரியாலயம்

ஜார்ஜ் டௌன் சென்னை

சங்க மாலா

—முதலாவது பர்மிய வன்ப்படம்—

இத்துடன்

1. பர்தோலி காங்கிரஸ் கூட்டம்
2. பண்டித நேரு பர்மா சீனுப் பிரயாணம்
3. இந்திய க்ஷேத்திர யாத்திரை
4. பொற்கோவில் நிறைந்த பர்மா நாடு

ஆகிய சிறு படங்கள் காண்பிக்கப்பெறும்

30—1—42 முதல்

கோயம்புத்தூர்	—	டைமண்ட்
சேலம்	—	முருகன்
பெங்களூர்	—	சூபர்
உதக மண்டலம்	—	ரீகல்

4—2—42 முதல்

காரைக்குடி—ராம விலாசம்

— முதலிய இடங்களில் ஆரம்டம் —

டாக்குமெண்டரி பிலிம்ஸ்

ராயப்பேட்டை — சென்னை

இவருக்கு வருமானம்

சொல்பம்தான்

ஆனலும் இவர் இப்பொழுது ரூ. 500-க்கு இன்ஷ்யூர் செய்திருக்கிறார். குறைந்த வருமானமுள்ளவர்கள் தங்கள் பிற்கால உதவிக்கோ அல்லது தனக்கு பிற்காலம் தங்கள் மனைவி குழந்தைகளின் பாதுகாப்புக்கோ தங்கள் ஆயுளை இன்ஷ்யூர் செய்து கொள்வதுதான் ஒரே வழி என்பதை இவர் எப்பொழுதும் அறிந்திருக்கிறார். அவரால் மாதா மாதம் சேமிக்கக்கூடிய பணம் சாதாரணமாய் இன்ஷ்யூர் கம்பெனிகள் கொடுக்கும் பாலிஸிகள் எடுப்பதற்குப் போதுமானதா யில்லை.

அந்தக் குறையை நீக்க நாங்கள் ரூ. 500-க்கும் அதற்குக் குறைந்த தொகைகளுக்கும் இன்ஷ்யூர் செய்கிறோம். சாதாரணமாயுள்ள டாக்டர் பரீக்ஷைகள் இவைகளுக்குத் தேவையில்லை.

யுனைடெட் இந்தியா ஸேவிங்ஸ்
ஸர்டிபிகேட்டுகளை வாங்குங்கள்.

யுனைடெட் இந்தியா

பிராவிடெண்ட் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

யுனைடெட் இந்தியா பில்டிங்

எஸ்பிளனேட் — மதராஸ்

போனார்கள். ஹிமயத்தில் வசித்த முனி சிரேஷ்டர்களில் ஒருவர் தெய்வ ஆஞ்ஞையால் தள்ளப்பட்டு, அவ்வழியே வந்தவர், அதற்கு நரேந்திரன் என்ற நாமம் சூட்டிவிட்டுச் சென்றார்.

நரேந்திரன் சிறு பிராயத்திலேயே பிருக்கிருதியின் ரஸனையில் மூழ்கியிருப்பான். தன் ஜாதிக்கில்லாத பழக்கங்கள் அவனிடமிருந்தன. மருண்டோடும் மானிடத்தில் அவனுக்கு அத்யந்த வாற்சல்யம். கொஞ்சும் கிளிகளைக் கூட்டில் அடைக்க அவன் விரும்புவதில்லை. வாத்தியங்களிலே குழல் ஒன்றுதான் அவனுக்குப் பிடித்தது. ஏழு வயது நிரம்புகிற சமயத்தில், மூங்கிற் குழாயில் அவன் ஒரு துளையிட்டான். அதை வாயில் வைத்து ஊத ஆரம்பித்தால், தெய்வீகமான இசை ஒன்று அதிலிருந்து எழுந்தது! பதினாறு வயதை அடையும்போது, அவன் மனம் ஏகாந்தத்தை நாடியது. பெற்றவர்கள் அவனைப் பெரிய யோகி என மதித்து, அவன் போக்கில் விட்டுவிட்டார்கள். ஈசுவர கிருபையால் அற்புதமான எண்ணங்கள் அவன் மனதை முற்றுகையிட்டன.

அந்தி மயங்கும் நேரத்தில் வானிலே சிதறியிருக்கும் வர்ண ஜாலங்கள் அவனது ஓலையில் கவிதா ரூபம் பெற்றன. அந்த நீலப் பரப்பில் தோன்றும் தாரகைகளின் ஜொலிப்பு மயனின் அற்புத வேலைப்பாடாகத் தோன்றியது. அமுத கலசம் நீள் விசும்பில் பவனி வரும்போதும், பாலரவி கிழக்கே தோன்றும்போதும், அவன் இமைப்பதில்லை. தான் இமைத்தால் அந்த இயற்கைச் சௌந்தர்யம் மறைந்து போகுமே என்று அஞ்சி இமையா நாட்டம் பெற்ற தேவனாகி விடுவான்!

"வெள்ளியங்கிரியின் உச்சியிலே கருமேகங்கள் படிந்து செல்வது ஜடாதரனின் ஜடை அசைந்தாடுவதுபோல் தோன்றுகிறது. அதனின்று பனி உருகிக் கீற்றுப்போல் வழியும் நீர், கங்கை தன் வாயால் உமிழ்வதுபோல் தோன்றுகிறது. பர்வதத்தின் அருகில் மரகதப் பச்சைபோல் வானம் காணும் போதெல்லாம், உமை தன் நாதனை அணைத்திருப்பதுபோல் பாவிப்பான். இப்படியெல்லாம் அவன் இயற்கையின் தேஜஸைப் பருகி வெறி கொண்டான்.

வேனிற் காலம் வந்தது. மரங்கள் கனிகளைத் தாங்கி நின்றன. மதியின் கிரணங்கள் பூச் சொரிந்தன. விருட்சங்கள் தளிர்த்த இலைகளின்மேல் நிலாப் படிந்து அயர்ந்து உறங்குவதுபோல் தோன்றியது. கங்கையிலே துள்ளி விளையாடும் மீன்கள். அவைகளின் உடல்களில் தீட்டியிருக்கும் வர்ணங்களைச் சிருஷ்டி கர்த்தா எத்தனை கிண்ணங்களில்தான் நிரப்பி வைத்திருந்திருப்பானோ!

வனம், நதி, பர்வதம் இவைகளைப் பற்றி அற்புதமான கவி மலர்களை நரேந்திரன் புனைந்துவிட்டான்.

மாரிக் காலம் வந்தது. முகிற் கூட்டங்கள் சாரிசாரியாய்த் தவழ்ந்து சென்றன. வேலைப் போன்ற மின் வெட்டுக்கள். அகில சராசரங்களும் நடுங்கும் படியான இடியின் கர்ஜனை. இவைகளைக் கண்டு அவனுக்கு உற்சாகம் கிளம்பியது. மழை தாரை தாரையாய்ப் பொழியும்போது, ஒரு கவிதை வெளியாயிற்று. கங்கையின் அணை கடந்த பிரவாகம் அவனது மனதில் ஆனந்தம் உண்டாக்கியது. அது பூமியில் இறங்கினால் எவ்வளவு ஆபத்து என்று அவன் கருதவில்லை. தன்னைச் சுற்றி ஓர் உலகம் இருக்கிறது என்று அறிய அவனுக்கு அவகாசமில்லை. இதையெல்லாம் அறிந்துகொண்டிருந்தால், பிரம்மனின் கட்டளை என்னாவது?

நரேந்திரன் பர்வதத்தின் அடிவாரத்தை விட்டு, நகரத்துக்குள் ஒரு தடவை வந்தான். அதுவும் நீலக்கடலைப் பார்க்க. கடல் மணல் சூர்ய ரச்மி பட்டு ஜொலிக்கும்போது, அதை வைரங்களோடு ஒப்பிடுவான். உதய சூரியன் கிழக்கே எழுவதைப் பார்த்தால், நெருப்புக் கோளம் ஒன்று வானத்தின் கீழிருந்து வெடித்து எழுவதுபோல் அவன் கண்களுக்குத் தோன்றியது.

கவிகளின் வர்ணனைகளில் காதல் கலந்திராவிடில் சோபிதம் இருப்பதாகத் தோன்றவில்லை. மேருவையும் அதை விட்டால் வனாந்திரங்களையும் சதா பார்த்து வந்த நரேந்திரனுக்கு, காதலைப்பற்றி ஆரம்பத்தில் விளங்கவில்லை. அதைப்பற்றி எழுதாவிட்டால், அவனது கவிதை முற்றுப் பெற்றதாகவும் அவனால் நினைக்க முடியவில்லை.

எதிரே மலர் செறிந்த வகுள மரம். அதன்மீது இரண்டு கிளிகள். அவைகள் கொஞ்சும் பாவனையிலிருந்து, காதலர்கள் என்ற தீர்மானம் தோன்றியது. 'காதலே உலகத்தில் !கிடைக்காத பேறு' என்று வரைந்தான். மலைகள், நதிகள், மலர்கள், பட்சிகள் இவை

அவனும் அவன் ஏடுகளும் பூமியில் புதைந்தனர்

களைப்பற்றி யெல்லாம் மேலும் மேலும் என்ன எழுதுவது? மனிதர்கள்! அவர்களைப்பற்றி எழுத வேண்டாமா? அவன் அதற்காக முயன்றபோது, அங்கே......?

மனிதர்கள் ரஸனைத் திறமை நீங்கி எதையோ நாடி உழன்று கொண் டிருந்தார்கள். அன்பும் அமைதியுமாய் வாழும் பிறவியை, அவனால் கண்டு பிடிக்க முடியவில்லை. சண்டை, சச்சரவு, கேலி, பொறாமை! இவைகளை விட்டால், மனிதர்களுக்கு உதய அஸ்தமனம் ஆகாது போல் தோன்றியது. ஈசுவரன் உன்னதமாக நினைத்துச் சிருஷ்டித்த மனிதப் பிறவியைப் பற்றி, அவனால் ஒன்றும் எழுத முடியவில்லை.

"மனிதர்களே! சற்று நிமிர்ந்து பாருங்கள். அந்த நீலப் படுதாவில் இறைவனின் மணிக் கரங்கள் இயற்றியிருக்கும் வேலை நுட்பத்தைக் கண்டு களியுங்கள். அவசர அவசரமாய்ப் பகவானைக் காண, எங்கேயோ ஓடுகிறீர்களே! அதோ வழிந்தோடும் நதியின் சலசலப்பில் அவனது வேய்ங்குழலின் நாதத்தையும், சாய்ந்தாடும் புல்லில் ஓங்கார மந்திரத்தையும் காணலாமே!"

இதை அவர்கள் கேட்கவில்லை. தேங்காயையும் பழத்தையும் கூடை கூடையாய் எடுத்துக் கொண்டு, அமைதியில்லாமல் மக்கள் ஓடிக்கொண் டிருந்தார்கள்.

"இந்தச் சமூகத்தினிடையே என் இலக்கியத்தை எவ்வாறு பரப்புவேன்?" என்று அவன் மனம் நொந்து போனான்.

"மனிதர்களுக்கு அமைதி இல்லை."

மேலும் எதையோ எழுத விரும்பினான். அவன் உட்கார்ந்திருந்த மலைப்பிரதேசம் பூராவும் இச்சமயம் 'கிடு கிடு' என்று ஆடிற்று. அவனது அமைதி கலையவில்லை.

"பூமி ஆடுகிறது. அண்டகோளங்கள் நடுங்குகின்றன. இறைவனின் படைப்பு அனைத்தையும் பூமாதேவி தன்னுள் இழுத்துக் கொள்ளுகிறாள்"—இப்படி அவன் எழுதிக் கொண்டிருக்கும்போது, அவனும் அவனுடைய ஏடுகளும் பூமிக்குள் புதைந்தனர்.

* *

நரேந்திரன் பிரும்ம லோகத்தில் நின்றான்.

கலைவாணி அவனை அன்பு ததும்பப் பார்த்தாள்.

"உன் வேலையை முடித்துவிட்டு வந்தாயா?"

"ஆம், தாயே! ஆனால் அதை ரஸிப்பவர்கள் யாரும் இல்லாமல், அது பாதாளத்தில் புதைந்து கிடக்கிறது" என்றான் நரேந்திரன்.

"அங்கே ஒரு பெரிய நகரம் உண்டாகப் போகிறது. அந்தக் காலத்தில் உன் கவிதைகளை உலகமே புகழப் போகிறது. அவைகளில் உன் பெயரை எழுதினாயா?"

"கவிதை பூர்ணமாக வில்லை. அதற்குள் இயற்கையின் கோர தாண்டவம் ஆரம்பித்து விட்டது."

"அடடா! என்ன உங்களது சிருஷ்டியின் மகிமை! வேலை முடிவதற்குள் பூகம்பம் ஏற்படும் என்று உங்களுக்குத் தெரியாதா?" என்று நாதனைப் பார்த்துக் கேட்டாள் கலைவாணி.

"ஈசுவர சங்கல்பத்தை யார் தான் மீற முடியும்" என்றார் பிரும்மா.

"அழகு! நீங்களும், உங்கள் சிருஷ்டித் தொழிலும்—என்ன அழகு!" என்று கூறியவாறு தன் வீணையுடன் 'மந்தாஸர' லோக்குப் புறப்பட்டாள் கலைவாணி.

"தாயே! நானும் வருகிறேன். தங்கள் வீணாகானத்தை விட்டுப் பிரியாமல், அனவரதமும் தங்களுடன் இருக்க எனக்கு அனுமதி அளியுங்கள்" என்றான் நரேந்திரன்.

பரிவுடன் அவனைக் கலைவாணி அழைத்துச் சென்றாள்.

"அட நன்றி கெட்டவனே! மனிதப் பிறவியின் அற்ப குணத்தைக் காட்டி விட்டாயே! உன்னைச் சிருஷ்டித்த என்னைக்கூட மதியாமல், அவள் பின்னாலா போகிறாய்?" என்று கடிந்தார் பிரும்மா. கலைவாணியும், நரேந்திரனும் மறைந்து விட்டார்கள். பிரும்மா ஒரு பெருமூச்சுடன், தமது ஓய்வொழிவில்லாத சிருஷ்டித் தொழிலில் தொடர்ந்து ஈடுபட்டார்.

பேசும் பைபிள்

ஐக்கிய அமெரிக்காவில் திடீரென்று இப்போது மத பக்தி கொஞ்சம் அதிகரித்திருக்கிறது. அதற்கு ஓர் உதாரணமாகச் சொல்லலாம் இந்த விஷயத்தை.

பைபிள் முழுவதையும் கிராமபோன் பிளேட்டுகளாகவே எடுத்து வைத்துவிட, அமெரிக்க பைபிள் நிலயத்தார் முயன்று வருகிறார்கள். படியாத பாமரர், குருடர் இவர்களெல்லாம் எழுத்து பைபிளைப் படித்து விஷயம் தெரிந்துகொள்ள முடியா தல்லவா? அதற்குப் பரிகாரங் காணவே இந்த நூதன ஏற்பாடு. இப்போது இங்கும் அங்குமாக, பைபிளின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள சில வாசகங்களை 52 பிளேட்டுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆதியோடந்தமாக, ரோமன் கதலிக், பிராடஸ்டண்டு இருவித பைபிள்களையும் பூராவும் அப்படியே பிளேட்டுகள் எடுக்கப்போகிறார்களாம். ஆனால், அதற்கு அநேக வருஷங்கள் ஆகுமாம். இங்கிலீஷில் மாத்திரமன்றிப் பிற பாஷைகளிலும் பைபிள் பிளேட்டுகள் எடுக்கலாமா என்ற யோசனையும் இருந்து வருகிறதாம்.

* * *

வியாபார தந்திரம்

இப்போது நாஜிகள் வசமுள்ள டென்மார்க்கின் தலைநகரான கோபென்ஹாஜனில், ஒரு புத்தகக் கடைக்காரன் "**50 மணி நேரத்தில் ஆங்கிலம் கற்கும் வழி:** (டாம்மிகள் பிரிட்டிஷ் சோல்ஜர்கள்) வருமுன் ஆங்கிலங் கற்றுவிடுங்கள்" என்று ஒரு புத்தக விளம்பரத்தை ஒட்டியிருந்தானாம். இதை ஜெர்மன் அதிகாரிகள் ஆட்சேபித்து, எடுத்து விடச் செய்தார்கள்.

மறுநாள் அதே இடத்தில் அந்தக் கடைக்காரர் மற்றொரு புத்தக விளம்பரத்தை ஒட்டிவைத்தார். அதாவது: "**50 மணி நேரத்தில் ஜெர்மன் கற்கும் வழி:** நமது நண்பர்களான ஜெர்மானியர் ஓடுமுன் ஜெர்மன் கற்று விடுங்கள்."

விநோத அரசர்கள்

[செல்லம்மாள்]

உண்மை சில சமயம் கட்டுக் கதைகளைவிட ஆச்சர்யமா யிருப்பதுண்டு. பூர்வத்திலே அம்மாதிரி அதிசயங்கள் அநேகம் நிகழ்ந்திருக்கின்றன. உலக சரித்திரத்தில் ஏறிய சில விசித்திரப் பிரக்ருதிகளை இங்கே காணுங்கள்.

ரோமாபுரியில் கி. பி. முதலாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் நீரோ என்ற ஓர் அரசனிருந்தான். நெருப்புப்பற்றி யெரியும் ஏதாவ தொரு காட்சியைப் பார்க்கவேண்டு மென்று ஓர் ஆசை அவனுக்கு ஒரு நாள் திடீரென்று வந்து விட்டதாம். தன் வேலையாட்களை அனுப்பி நகர் முழுதும் தீ மூட்டச் சொன்னான். மாடமாளிகைகளுக்கும் கூட கோபுரங்களுக்கும் ரோமாபுரி பேர் போன நகர மல்லவா? பிரமாதமான 'லங்கா தகனம்' நடைபெற்றது. உயிருக்கும் உடைமைக்கும் பயந்து, நகரவாசிகள் அல்லோலகல்லோலப் பட்டார்கள். மிருகங்களும் பறவைகளும் வெந்து சாம்பலாயின. அற்புதமான சிற்பங்கள் உடைந்து வீழ்ந்தன. இந்தக் கோரக் காட்சியைப் பார்த்த அரசன், மனங்குளிர்ந்த தோடு, தன் பிடிலைச் சுருதிமீட்டி வாசித்து ஆனந்தமும் கொண்டானாம்!

இப்படிப்பட்ட அற்புத ஜன்மங்கள் பல தேசங்களில் பல காலங்களில் ஆட்சி செய்து வந்ததாகச் சரித்திரம் கூறுகிறது.

முஸ்லீம் அரசனொருவன் ஒரு காலத்தில் எகிப்தின்மீது படையெடுத்துச் சென்றான். கல்விக்கும் கலைக்கும் எகிப்து முன் காலத்தில் கீர்த்தி பெற்ற நாடு. அங்கே பிரம்மாண்டமான பல புத்தகாலயங்கள் இருந்தன. அந்தப் புத்தகாலயங்களில் ஒன்றை அரசன் உறுத்துப் பார்த்தான். தன் ஏவலாளர்களை விட்டு அதற்கு நெருப்பு மூட்டச் சொன்னான். பக்கத்திலிருந்த அறிஞரொருவருக்கு இந்தச் செயல் பிடிக்கவில்லை. விலைமதிக்க முடியாத கலைப் பொக்கிஷத்தை அக்கினி பகவானிடம் ஒப்படைக்கலாமா என்று தயங்கினார். மன்னனிடமும் அவர் வேண்டுகோள் செய்தார். "நம் குர்ஆனி லில்லாத அறிவுப் பொக்கிஷம் இதிலென்ன இருந்துவிடப் போகிறது? குர்ஆனி லில்லாதது எதுவேனும் இங்கே இருக்குமானால், அதைக் கண்டிப்பாய்த் தொலைக்க வேண்டியதுதான். ஒருகால் இதிலுள்ளதெல்லாம் குர்ஆனி லிருக்குமானால், இதற்குத் தேவையே கிடையாது. மூட்டுங்கள் தீயை!" என்று மன்னன் முழங்கினான். புத்தகங்கள் சாம்பராயின!

வேறொரு வேந்தன் கி. பி. நாலாவது நூற்றாண்டில் கிழக்கு ரோம சாம்ராஜ்யத்தை ஆண்டு கொண் டிருந்தான். அவனது பெயர் தியோடோஸியஸ். ஜாதியில் ரோமன். மதத்தால் கிறிஸ்தவன்; கிறிஸ்தவனிலும் வெறி பிடித்த கிறிஸ்தவன். இவனுக்குக் கிரேக்கர்களின் அருங்கலை நூல்களெல்லாம் மிலேச்ச சாஸ்திரங்களாய்த் தோன்றின. அருமையான புராணங்கள், இதிகாசங்கள் அனைத்தும், அர்த்தமற்ற குப்பையாய்த் தோன்றின. ஆதலால், தன்னிடம் கிடைத்த அந்த ஏடுகளை யெல்லாம் தன் ஸ்நான அறையில் குவித்து, தினசரி தான் குளிக்கும் வெந்நீரைச் சுட எரிக்கும் விறகாக உபயோகித்தான்!

அக்பரைப்பற்றி நீங்கள் கேள்விப்பட் டிருக்கலாம். மகா பெரிய சக்ரவர்த்தி அவர். 1552-ஆம்ஆண்டு முதல் 1605-ஆம்ஆண்டு வரையிலும் டில்லியில் ஆட்சி புரிந்தார். அவருக்குக்கூட ஒரு சிறு பைத்தியம் உண்டு. தம் அரண்மனையில் சும்மா கிடக்கும் யானைகளுக்குள் பகையை மூட்டி, அவற்றைச் சண்டைக்கு விட்டுப் பார்த்துக் களிப்பார். போர் புரியும் யானைகள் ஒன்றை யொன்று குத்திக் கீறிப் பிளந்து ரத்தப்பெருக் கெடுக்கிற்கும். அக்பர் பார்த்து மகிழ்வார்!

இதே மாதிரி மற்றொரு யானை விநோதனிருந்தான். அவனது விநோதம் இன்னும் கொஞ்சம் பெரிய ரகம். அவன் பெயர் மிஹிரகுலன். ஹிட்லர் இனத்தைச் சேர்ந்த ஹூன் ஜாதியான். ஹூன் ஜாதியார்கள் ஒரு காலத்தில் வட இந்தியாவின்மீது படை யெடுத்து வந்து, சிறியராஜ்யமொன்றை நிறுவினார்கள். அதில் முளைத்த ஓர் அரசன்தான் மிஹிரகுலன். இந்தப் புண்யாத்மா, பெரிய பெரிய யானைகளை உயர்ந்த மலைமேல் ஏற்றிச் சென்று, செங்குத்தான இடங்களிலிருந்து கீழே உருட்டி விடுவான். அவை உருண்டு புரண்டு மாண்டு மடிவதைக் கண்டு, மிஹிரகுலன் களிப்படைவான்!

செங்கிஸ்கான் என்ற வீரனைப் பற்றி நீங்கள் அறிந்திருக்கலாம். அவன் மங்கோலிய வம்சத்தைச் சேர்ந்தவன்; பசிபிக் மகா சமுத்திரம் முதல் மத்தியதரைக் கடல் வரையிலு முள்ள பெரிய பூபாகத்தை ஏக சக்ராதிபதியாக அடக்கி ஆண்டவன். அவனைப் போல் மற்றொரு பெரிய சக்ரவர்த்தி இதுவரையிலும் உலகத்தில் தோன்றியதே இல்லை. இந்தப் புண்ணிய புருஷனுடைய ஜாதியார், தேசாந்திரியாய் அலைவது வழக்கம்; நிலையாக ஓரிடத்தில் வீடு கட்டிப் பயிர் செய்து வாழ்வது கிடையாது. ஆதலால், பட்டணங்களோ நகரங்களோ, மங்கோலியர் போன திசையிலும் முளைப்பதில்லை. ஆனால், இவன் கீழடங்கிய சீனாவிலோ எண்ணிறந்த பட்டணங்கள் இருந்தன. ஆதலால், ஒரு தரம் ஓர் ஏற்பாடு செய்தான். சீனாவிலுள்ள எல்லாப் பட்டணங்களையும் அழித்து விடுமாறு உத்தரவிட்டான். நல்ல வேளையாக உத்தரவு நிறைவேற வில்லை.

இந்தச் செங்கிஸ்கானிடம் மற்றொரு 'விசேஷம்' உண்டு. இவனுக்கு எழுத்து வாசனை கிடையாது. எழுத்து என்னும் ஒரு 'சாமான்' இருப்பதாகவே, இவன் கேள்விப்பட்ட தில்லையாம்! பல வருஷங்களுக்குப் பிறகு, யாரோ எழுத்துக்களைப் பற்றி இவனிடம் கூறினார்களாம். அதன்மேல்தான் தனது அரண்மனையி லுள்ளவர்களைப் படிக்கத் தூண்டினானாம். என்றாலும், தான் படிக்க முயல

வில்லை! அக்பரும் கிட்டத்தட்ட இந்த ரகத்தைச் சேர்ந்தவர்தான்!

பன்னிரண்டாவது நூற்றாண்டில் தார்த்தாரிகள் என்ற ஒரு ஜாதியார் மத்திய ஆசியாவில் ஊக்கமுற்றெழுந்தார்கள். இவர்களின் தலைவ னொருவன் பெரும் படை திரட்டி மேல் திசையை நோக்கிப் பாய்ந்தான். ருஷ்யாவில் கடும் போர் நடத்தினான். தார்த்தாரிகள் எல்லோரும் கொடிய ஜனங்கள்; வெறியர்கள். போர்க்களத்தில் புகுந்தால், காலதூதர் மாதிரி போரிடுவார்கள். சுமார் இரண்டு நாள் வரை ஏறிய குதிரையிலிருந்து இறங்காமல் யுத்தம் செய்வார்கள். அவர்களுக்குப் பசி தாகம்கூடத் தெரியாதாம். ஒரு கால் அளவு கடந்த பசி வந்துவிட்டால், தங்கள் குதிரைகளின் உடம்பில் ஒரு நரம்பை அறுத்து, அதன் ரத்தத்தை உறிஞ்சிக் குடிப்பார்களாம். இவர்கள் நடத்தும் அமரின் ஆரவாரத்தையும் அதிர்ச்சியையும் ஆர்ப்பாட்டத்தையும் எழுதி முடியாது. இத்தகைய அசுரர்கள், தங்களிடம் தோற்று அகப்பட்டுக்கொண்ட எதிரிகளை எப்படி நடத்துவார்களாம், தெரியுமா? எல்லோரையும் சதுரமாக நிறுத்தி, தலைக்குமேலே கனமான பலகைகளைப் பரப்பி, அவற்றின் மீது தங்களுடைய வெற்றிப் படையை உட்கார வைத்து நசுக்குவார்களாம்!

பதினோராம் நூற்றாண்டிலே எருசலேமில் ஐரோப்பியக் கிறிஸ்தவர்களுக்கும் அராபிய முஸல்மான்களுக்கும் நீண்டதொரு மதப்போர் நடைபெற்றது. எருசலேம், இயேசுநாதர் சிலுவையிலறையப்பட்ட இடம்; எனவே, கிறிஸ்தவர்களுக்குப் புனித பூமி. அதை ஆண்டு வந்தவர்களோ அராபியர். ஒரு மதத்தினரின் புண்ணிய பூமியை இன்னொரு மதத்தினர் ஆளுவதென்றால், அடங்குமா மதபக்தி? இரு சாராரும் போர் புரிந்தார்கள். 1099-ஆம் ௵ போயிலன் நகரத்தின் காட்பிரே என்ற கிறிஸ்தவ அரசர் எருசலேமைப் பிடித்துக் கொண்டார். கடுமையான யுத்தத்தின் பிறகே வெற்றி ஏற்பட்டதால், ஏழுநாள் வரையிலும் வெற்றிக் கொண்டாட்டம் நடைபெற்றது. ஏழு நாளும் என்ன தமாஷ் நடந்தது, தெரியுமா? ஆண் பெண், குழந்தை குட்டி என்ற பேதம் பாராமல், கையி லகப்பட்ட எல்லா அராபியரையும் கிறிஸ்தவர்கள் வெட்டிக் கொன்றார்களாம். எருசலேம் வீதிகளில் ரத்த ஆறு ஓடியதாம். அதில் இயங்கிய குதிரைகளின் கடிவாளம் வரை இரத்தம் பெருகிய தென்று ஒரு சரித்திராசிரியர் கூறுகிறார்.

இப்படிப்பட்ட ஆர்ப்பாட்டத்தைத்தான் இந்தியாவில் நடத்த நினைத்தானோ என்னவோ ஷாஹப்-உத்-தீன் என்ற கோரி நகரப் பட்டாணிய அரசன்; ஆனால், நடைபெறவில்லை. 12-ஆம் நூற்றாண்டில் அவன் வட இந்தியாமீது ஒரு பெருஞ் சேனையை அனுப்பினான். பிரித்விராஜ் போன்ற ரஜபுத்திர அரசர்கள் ஒன்று சேர்ந்து அவனுக்கு நல்ல பாடம் கற்பித்தனுப்பி விட்டார்கள். அதனால் ஏமாற்றமும் எரிச்சலும் அடைந்த ஷாஹப் உத்தீன், தோற்று வந்த தன் சேனையைப் பிடித்து, ஒவ்வொரு சிப்பாயின் வாயிலும் கொள்ளுக் கூடை யொன்றைக் கட்டித் தெருத்தெருவாய்த் துரத்தியடித்தானாம்!

கி. மு. நாலாவது நூற்றாண்டில் இரான் தேசத்தில் ஒரு சக்கரவர்த்தி யிருந்தான். ஜெர்க்ஸிஸ் என்பது அவனது பெயர். அநேகமாக மேற்கு ஆசியா முழுவதையும் அவன் ஆண்டு வந்தான். அவனுக்கும் கிரீஸ்தேசத்துக்கும் பகை மூண்டது. கிரேக்கர்கள் மிகச் சிறிய தேசத்தைப் பெற்றிருந்தார்களானாலும், ஜெர்க்ஸிஸைப் பொருட்படுத்த வில்லை. கி. மு. 480-ஆம் ஆண்டில் ஜெர்க்ஸிஸ் மிகப் பெரிய சேனை யொன்றைத் திரட்டிக் கிரீசுக் கெதிராக நடத்தினான். அந்தச் சேனை எவ்வளவு பெரிய தென்பதை அளவிட்டுச் சொல்ல முடியாது. வழியில், ஓர் ஆற்றில் ஒருநாள் எல்லாச் சிப்பாய்களும் தண்ணீர் பருகினார்களாம். சில மணி நேரத்தில் அந்த ஆறு வற்றிப்போய் விட்டதாம்! இவ்வளவு பெரிய சேனையின் தலைவனாய்ப் போவதென்றால், ஜெர்க்ஸிஸ் எந்த அளவுக்கு மமதை கொண்டிருக்க வேண்டும்? பாஸ்பொரஸ் என்ற இடத்தை அவன் அடைந்ததும், பரந்த கடல் குறுக்கிட்டது. சேனை, படகிலேறி மறுகரை போகவேண்டிய தாயிற்று. இதைப் பார்த்த அரசன் தனக்கு வணங்கி வழி விடாத கடலை லேசாக விடக்கூடாதென்று கருதிச் சவுக்கினால் அடிக்க உத்தர விட்டான். பல சோல்ஜர்கள் நீண்ட சவுக்குகளினால் கடலை ஓயாமல் அடித்தார்கள்! அதுவோ தன் அலைகளை வீசி வீசி அடித்துக்கொண் டிருந்ததே யல்லாமல், மகாராஜாவுக்கு வழி விடக் காணோம். இவைகளெல்லாம் பழங்கதைகள்; ஆனால், நிஜமான சரித்திரக் கதைகள்.

நாணயத்தைக் காண யுக்தி

அப்பொழுதுதான் போனகிராப் புதிதாக வந்தது. தற்போது ஜீவியவந்தராய் அமெரிக்கக் காங்கிரஸில் ஓர் அங்கத்தினரா யிருக்கும் ஸால் புளூம் என்பவர், அந்நாளில் போனகிராப் வியாபாரம் தொடங்கினார்.

"யார் கடிதம் எழுதினாலும், போனகிராப் ஒன்று அனுப்பப்படும். மனதுக்குப் பிடித்தால் பணம் அனுப்பவும். இல்லாவிட்டால், மெஷினை உடனே திருப்பி அனுப்பி விடலாம்" என்று அவர் விளம்பரம் செய்தார்.

ஏராளமான கடிதங்கள் வந்தன. ஆனால், மெஷின் வாங்கிக் கொண்ட பலர், அதைத் திருப்பியும் அனுப்பாமல், பணமும் அனுப்பாமல் மோசம் செய்தார்கள்.

பார்த்தார் புளூம். அதற்குப் பிறகு, மெஷின் கேட்டவர்களுக்கெல்லாம் ஒரு கடிதம் எழுதினார்: "உங்கள் குடும்ப வைத்தியரின் பெயரும் விலாசமும் தெரிவித்தால், அவரை விசாரித்துக் கொண்டு, உடனே மெஷின் அனுப்புகிறோம்."

குடும்ப வைத்தியர் சரி என்றோருக் கெல்லாம் உடனே மெஷினை புளூம் அனுப்பினார். வியாபாரமும் ஒழுங்காய் நடந்தது.

"இதன் ரகஸ்ய மென்ன?" என்று புளூமை அவருடைய ஒரு நண்பர் கேட்டார்.

"யாரும் தங்கள் குடும்ப வைத்தியரின் கடனைத்தான் கடைசி வரையில் பாக்கி போடுவது வழக்கம். அவர் கடனை ஒழுங்காய்த் தீர்ப்பவன் கடனே யில்லாத நாணயஸ்தனாய்த்தான் இருப்பான்" என்று விளக்கினார் புளூம்.

சேலைகளுக்கு
— சிறந்த இடம் —
N. C. B.
—கார்னர் ஷாப்—
N. C. பாலுசாமி ஐயர் & சன்
84, நயினியப்ப நாய்க்கன் தெரு,
மதராஸ்.



Shoe Specialists
CHROMECO AGENCY
NEXT TO GOKHALE HALL

எழுதுவதில் இணையற்றது
பார்க்கர் பேனு

கனி & சன்ஸ்
ராட்டன் பஜார், மதராஸ்

அதன் வாசனையிலிருந்தே
அதன் பெயரைச் சொல்லட்டுமா?
அதுதான்
நரஸூஸ்
காபி
எந்தத் தரத்திலும் எவ்வளவு வேண்டுமானுலும் இந்தியா, பர்மா, சிலோனில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும்.
ீழ்க்கண்ட இடங்களில் கிளை ஆபீசுகள் சீக்கிரம் ஆரம்பிக்கப்படும் :—பம்பாய், டெல்லி, ரங்கூன், கொளும்பு.
நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி
பாக்டரிகள் :—
சென்னை, சேலம்.
MNCK.8.TM.

அமிர்தாஞ்சனம் லிமிடெட்
தற்சமயமிருக்கும் யுத்தகால தகரக் கட்டுப்பாட்டின் காரணமாக 'கார்ட் போர்டி'ஞல் இப்பொழுது அமிர்தாஞ்சன மருந்து பெட்டி தயாராக வேண்டியிருக்கிற தென்பதையும், ஆனல் உள்ளிருக்கும் மருந்தின் தன்மையில் கொஞ்சங்கூட மாறுதல் இல்லை என்பதையும் எண்ணிக்கையற்ற அமிர்தாஞ்சன் அன்பர்களுக்கு அறிவித்துக் கொள்வதுடன், வலிகளைக் குணப்படுத்தும் அமிர்தாஞ்சனுக்கு தொடர்ந்து இனியும் ஆதரவு அளிக்க வேண்டுமென்று கோருகிருர்கள்.

ஸி. ஏ. க்யூ.

உங்களுக்கு எப்போதும் பாதுகாப்பளிக்க

நோய்கள் நம்மை அணுகாமல் தடுப்பதில் ஸி. ஏ. க்யூ. எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதைச் சென்ற 30 வருஷங்களுக்கு மேலாக இதற்கு இருந்துவரும் பிராபல்யம் நிரூபிக்கிறது. இன்ப்ளுயன்ஸா, டிங்கி ஜுரம், ஜலதோஷம், மார்சளி முதலிய உபாதைகளைக் குணமாக்குவதில் இன்று ஸி. ஏ. க்யூ. தலை சிறந்து விளங்குகிறது. இதில் ஒரு டோஸ் சாப்பிட்டதுமே குணமேற்படுகிறது. டாக்டர்கள் எல்லோரும் க்ஷேமமான, நிச்சய குணமளிக்கும் மருந்தென்று இதை சிபார்சு செய்கிறார்கள். ஜலதோஷம், மார்சளி, இன்ப்ளுயன்ஸா முதலியவைகளைத் தடுப்பதில் ஸ்பென்ஸர் கம்பெனியாரின் ஸி. ஏ. க்யூ. நிகரற்றது.

ஒரு புட்டி விலை ரூ. 1
மாத்திரைகள் ஒரு டப்பா அணா 14

ஸ்பென்ஸர் & கோ., லிமிடெட்,
சென்னை
மருந்து தயாரிப்பவர்கள்



" ஸி. ஏ. க்யூ." இது ஒன்றேதான். அதைத் தயாரிப்பது ஸ்பென்ஸர் கம்பெனியார்தான்.

" இசை உலகில் ஒரு புதிய நக்ஷத்திரம் "

ஓடியன் வெளியீடு !

பழனி குமாரி விஜயலக்ஷ்மி
பாடிய

C.A. 1453 { களி மயிலாட
ஆதி பரம்பொருளே

(புதுக்கோட்டை குகன் இயற்றியது)

★

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்
மதராஸ்

வாழ்க்கைச் சித்திரம் :

ஜவுளிக் கடையிலே

[ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.]

பார்க்கப் போனால், 'புடவைச் சமாசாரம்' தான். ஆனால் அதிலே பிரதிபலிப்பது என்ன? அவளுடைய வாழ்வும் தாழ்வும், அங்கே பிறந்ததோரு மனோதத்துவம் அத்தனையும் அல்லவா? அதைப் பற்றி இந்தத் தத்துவ சாஸ்திரிகள் விசாரணை செய்து தருக்கிக்கிறார்கள். வாழ்க்கை, தர்க்க சாஸ்திரத்துக்குள் கட்டுப்படுமோ?

"மழை இடைவிடாமல் கொட்டுகிறதே; இந்த மழையில் எங்கே போவாள் அந்த அம்மாள்? ஏன் அவன் கடுமையான வார்த்தைகளைச் சொல்ல வேண்டும்? வாங்குகிறார்களோ, வாங்க வில்லையோ, புடவைகளைக் கண்ணால் பார்த்துவிட்டுப் போனால், என்ன முழுகிப் போய் விட்டது"—என்ற எண்ணங்கள் வந்தன. சரி, கடையில் பார்த்தது என் சிறிய தாயாரின் பெண்தானா? முகம் அவளது முகம் போலிருந்ததே, அவள் என்னைக் குறிப்பாய் நோக்கினாளே—என்ற எண்ணமும் மற்றச் சிந்தனைகளோடு கலந்து என் மனத்திலே பாய்ந்தது.

பல எண்ணங்கள் குறுக்கும் நெடுக்குமாய் ஓடிக்கொண்டிருக்க, படிப்பறையில் என் நாற்காலியில், மேகஞ் சூழ்ந்த வானத்தைப் பார்த்துப் படுத்திருந்தேன்.

மழை இடைவிடாமல் பெய்தது; பகலும் இருண்டு விட்டது. எங்கே பார்த்தாலும் சீறி அடிக்கிற காற்று; கண்களைப் பறிக்கிற மின்னல்கள்; பூமியை நடுங்கச் செய்கிற இடி முழக்கங்கள்!

திடீரென்று கதவை 'லொட்', 'லொட்' என்று யாரோ இடிக்கிற சத்தங் கேட்டது.

"யார்?" என்றேன்.

"நான்தான் கோபாலன்" என்று, உரத்த குரலில் பதில் வந்தது.

"வாருங்கள்."

அவர் மெல்ல உள்ளே நுழைந்தார். ஜலம் கடகட வென்று வழிகிற குடை ஒரு கையில்; மற்றொரு கையில், அப்பொழுதுதான் புதிதாய் வாங்கியதொரு புத்தகம். வந்ததுமே என்னைக் கூர்ந்து நோக்கினார். "என்ன சமாசாரம்? எங்களைப்போலப் பகல் கனவு காணும் வேதாந்திகளின் மேல் தொடுக்கப் புதிதாய்ப் பாணங்கள் தயார் பண்ணிக் கொண்டு வந்திருக்கிறீர்களா? கையிலே புதிதாய்ப் புத்தகமொன்று வைத்திருக்கிறீர்களே, என்ன புத்தகம்?"

"அதெல்லாம் உங்களுக்கென்ன? 'நாயினும் கடையேன்' என்று பாடிக்கொண்டிருங்களேன். இப்படிப் பாடிப் பாடித்தான் எல்லாவற்றிலும் சரணாகதி வந்துவிட்டது" என்று அவர் பல்லைக் கடித்தார்.

"புத்தகம் என்ன? சொல்லுங்களேன்."

"சொல்ல முடியாது."

"சொல்ல முடியாதா?" என்று, அவர் கையிலிருந்து புத்தகத்தை வெடுக்கென்று பிடுங்கினேன்.

பார்த்தால் **பௌதிகமும் சமயமும்** என்ற புத்தகம். "ஓஹோ, மதத்தைப் பற்றி ஏதாயினும் வேகமான ஒரு தாக்குதல் இருக்கிறதுபோலிருக்கிறது. அதற்காகக் கொண்டு வந்திருக்கிறீர்களா இந்தப் புத்தகத்தை? இந்தக் கடும் மழையில் வந்ததன் காரணம் தெரிந்துபோய் விட்டது. அதிருக்கட்டும்; 'நாயினும் கடையேன்' என்று எப்பொழுதுமே அடியார்களும் ஆழ்வார்களும் பாடிக் கொண்டிருக்கிறார்களா? 'எனக்கார் நிகர்', 'பொலிக, பொலிக, பொலிக! போயிற்று வல்லுயிர்ச் சாபம்', 'நாமார்க்கும் குடியல்லேம்'...... இம்மாதிரி கம்பீரமான அடிகளுக்கு என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கூறி, அப்பர் தேவாரத்தையும் திருவாய்மொழியையும் அவர் கையில் கொடுத்தேன்.

"புத்தகங்களைப் புரட்டிக் கொண்டே, இத்தனை நாளாய் எனக்குத் தெரியவில்லையே!" என்றார். மேலும் தொடர்ந்து, "இ



'நாளைக்கு வறேன்' என்று சொல்லிவிட்டு அகன்றாள்.

படிச் சொன்னவர்கள் ஏன் 'நாயினும் கடையேன்' என்கிறார்கள்? அந்த வார்த்தை மனிதத் தன்மைக்கு ஏற்றதாயில்லையே" என்று சொல்லிய அவர், "நாயினுங் கடையேன்! நாயினுங் கடையேன்!" என்று அதைப் பரிகசித்துப் பாடினார்.

"அவர்கள் அப்படிச் சொன்னதன் காரணத்தை நான் சொல்லட்டுமா?"

"செல்லுங்களேன்,"

"தங்களுடைய ஆத்மா தூய நிலையில் இல்லாதபொழுது, தங்களை வெறுத்துப் பேசுகிறார்கள். பரமாத்மாவை ஆத்மா அறிகிறபொழுது வருகிற ஆனந்தத்தைப் பருகி உலகத்தை அலட்சியமாகப் பேசுகிறார்கள்."

"ஆத்மாவாவது, பரமாத்மாவாவது! என்ன பிரம்மாண்டமான கதையாயிருக்கிறது! அதெல்லாம் கனவு காண்கிற சமாசாரமில்லையா?"

"கதையோ கதையில்லையோ, அநேகம் பேர்களுக்கு அதில் ஆறுதலிருக்கிறது. ஏதோ ஒருவனிருக்கிறான், அவன் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கை எவ்வளவு சாந்தத்தைக் கொடுக்கிறது! ஒவ்வொரு விஷயத்தையும் சர்ச்சை பண்ணிக்கொண்டே போனால், உள்ளிப் பூண்டு உரிந்த கதையாய் முடிந்து விடும். உங்கள் கலையென்ன? உங்கள் ஓவியமென்ன? உங்கள் நாட்டியமென்ன? உங்கள் சங்கீதமென்ன? எல்லாம் பிரமைதான். இன்பத்தைக் கொடுக்கிற பிரமை எதுவும் பாதகமில்லை. அதிருக்கட்டும்; நீங்கள் எதுதான் உண்மை என்று நினைக்கிறீர்கள்?"

"இரண்டு சிநேகிதர்கள் சேர்ந்து கலகலவென்று சிரிக்கிறோமே, குழந்தைகளைக் கண்டு சந்தோஷிக்கிறோமே, ஏதோ நம் அநுபவத்தில் வருகிற ஞானத்தைக் கண்டு திருப்தி அடைகிறோமே இவைகள்தான் உண்மை."

"இவைகள்தான் என்ன? பார்க்கப்போனால், எல்லாம் பிரமைதான். ஒவ்வொன்றிலும் ஒருத்தருக்குப் பிரமை. ஒருவருக்குக் கலையிலே; மற்றொருவருக்குப் பணத்திலே, நகையிலே, புடவையிலே" என்று அடுக்கிக்கொண்டே போனேன்.

"அவரோகணம் நன்றாயிருக்கிறது—ஆத்மாவிலிருந்து ஆடை, சிற்றாடை! பேஷ்! புடவை வரையில் வந்துவிட்டது."

"புடவைச் சமாசாரந்தான் இன்றைக்கு நடந்தது."

"அதென்ன?" என்றார் கோபால சர்மா.

மழை கொட்டிக்கொண்டிருந்தது.

இதற்குள் இன்னொருவர் வந்து கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. அதோடு ஒரு கனைப்பும் வந்தது.

"யார் அங்கே?"

"கனைக்கிறதிலிருந்து தெரியவில்லையா? நம்ம கிருஷ்ண ராவ்தான்" என்றார் கோபால சர்மா.

"வாருங்கள், வாருங்கள் கிருஷ்ண ராவ்! என்ன இந்த மழையிலே?"

வந்த வேகத்தில் கோபால சர்மா இருப்பதைக் கூடக் கவனிக்காமல், "இன்றைக்கு ஒரு சம்பவம் நடந்தது. அதை ஒரு சிறு கதையில் போடலாம்னு நினைக்கிறேன்" என்றார் கிருஷ்ண ராவ்.

"ஏதோ ஒரு கனவுதானே! பிரத்தியட்சத்தைத் தான் நாம் கவனிக்கிறதில்லையே!" என்று குரல் கொடுத்தார் சர்மா.

"ஓஹோ! கோபால சர்மா அவர்களா?—கவனிக்கவில்லை" என்றார் கிருஷ்ண ராவ்.

"கவனிப்பீர்களா? இந்த லோகத்தில் இருந்தால்தானே!" என்று கண்ணைச் சிமிட்டிக்கொண்டு பேசினார் சர்மா.

"அப்படித்தான் கோபால சர்மா பேசுவார். புத்தியின் வேகம் அதிகம். ஆயிரம் தந்தியில் பேசும் அவரது உள்ளம். உங்கள் சமாசாரத்தைச் சொல்லுங்கள்."

கோபால சர்மா சிரித்துக்கொண்டே, "என்னைக் காலை வாரி விடும் வேலையா இது!" என்றார்.

கிருஷ்ண ராவ் பேசத் தொடங்கினார். நாங்களிருவரும் கவனித்துக் கேட்டோம்.

"நான் ஒரு வீட்டுக்கு ஒரு காரியமாகப் போக நேர்ந்தது. வீட்டில் ஒருவருமில்லை. அங்கே போடப்பட்டிருந்த ஒரு நாற்காலியிலே உட்கார்ந்ததும், கண்கள் நாலா பக்கங்களிலும் சுழல ஆரம்பித்தன. மேலே ஒரு மூங்கில் கம்பிலே ஓர் அழகான புடவை உலர்த்தப்பட்டிருந்தது. இத்தனை அழகான புடவையை உடுத்திக் கொள்ளுகிறவள் எப்படி இருப்பாளோ என்று யோசிக்கலானேன். அப்படி நினைத்தது தப்போ என்னவோ? என் மனமோ என்னையறியாமலே பலவிதமாகச் சித்தரிக்க ஆரம்பித்தது."

"தப்பென்ன? இது சகஜந்தான்" என்றார் சர்மா.

சற்றுத் தயங்கினார் கிருஷ்ண ராவ்.

"மேலே சொல்லுங்களேன், சங்கோஜமென்ன?" என்றேன் நான்.

"சிறிது நேரங் கழித்து, அந்த வீட்டுக்கார அம்மாமி வந்தாள். இடுங்கின கண்கள்; முன்னால் வெளியிலே பல் நீண்டிருந்தது; முகத்தில் ஹநுமாரின் சாயை அடித்தது; கொக்குப்போல உயரம். அப்படித் தூஷிக்கக்கூடாது. அந்த அம்மாளும் ஈச்வர சிருஷ்டியில் ஒன்றில்லையா? அவள் அங்கே வராமலிருந்தால், நான் பின்னும் இன்பக் கனவு கண்டுகொண்டே இருப்பேன்" என்று முடித்தார் கிருஷ்ண ராவ்.

"கனவு காண்கிறவர்களின் கதி இதுதான்" என்று சொடுக்கினார் சர்மா.

"நான் ஆரம்பித்ததைத் தொடங்கட்டுமா?" என்று கேட்டேன்.

"என்னால் தடை ஏற்பட்டு விட்டதோ?" என்றார் கிருஷ்ண ராவ்.

"இல்லை. அதுவும் ஒரு புடவைச் சமாசாரந்தான்."

"அப்படியானால் ஆரம்பியுங்களேன்" என்று ஒப்பமிட்டார் கிருஷ்ண ராவ்.

"இன்று நடந்ததைச் சொல்லி விடுகிறேன், கேளுங்கள்" என்று

என் கதையைக் கூறலானேன். இருவரும் அமரிக்கையோடு கேட்டார்கள்.

மழை கொட்டிக்கொண் டிருந்தது.

"சாயங்காலம் சுமார் மூன்று மணி யிருக்கும். மேகங்கள் எங்கே பார்த்தாலும் ஆகாயத்தில் சூழ்ந்து கொண் டிருந்தன; இடியும் கேட்டது. மழை வரும் பயத்தில் பைக்கிராப்ட்ஸ் ரோட்டில் ஜனங்கள் விரைவாய் நடமாடிக் கொண் டிருந்தார்கள்—இப்பொழுது மணி என்ன இருக்கும்?"

"மணி ஏழாகி விட்டது" என்று, கைக்கடிகாரத்தைப் பார்த்துச் சொன்னார் கோபால சர்மா.

"அப்பொழுதே இதைப் போல இருண்டு விட்டது. குழந்தைகளுக்குத் துணிகள் வாங்க, ஒரு ஜவுளிக்கடைக்குள் புகுந்தேன். பகலானாலும் உள்ளே மின்சார விளக்குகள் எரிந்து கொண் டிருந்தன. கண்ணாடி பீரோக்களில் அநேக விதமான ஜவுளிகள் தென்பட்டன. பலவிதப் புடவைகள்; ரவிக்கைச் சீட்டிகள்; வாயில்கள்; கவுன்கள்; ஷர்ட்டுத் துணிகள்; ஊதா, கறுப்பு, நீலம், பச்சை, கட்டம் போட்டது, ஜரிகை போட்டது இம்மாதிரி பல விதப் பட்டுக்கள்—வான வில்கள் பலவற்றை அடுக்கி வைத்தது போன்ற காட்சிகள்!"

"'என்ன, குழந்தைக்கு இதை எடுத்தால் நன்னாயிருக்குமே' என்றாள் ஒரு தாயார். 'அதுதான் உத்தேசம்' என்றான் ஒரு தகப்பன் ஒரு மூலையில்.

"'இந்தக் கறுப்பை எடுத்துக்கட்டுமா, சொல்லுங்களேன்' என்று இளநகை முகத்திலரும்ப ஒரு காதலி ஒரு காதலனைக் கேட்டாள். 'உன் சிவப்பு உடம்புக்கு அது நன்றாயிருக்கும்' என்றான் காதலன். 'உங்களுக்கு எப்பொழுதும் கேலிதான்; மெதுவாய்ப் பேசுங்கள்' என்றாள் அவள் மற்றொரு மூலையில்.

"மற்றோரிடத்தில் ஒரு ஸ்திரீ நின்று கொண்டிருந்தாள். வயது இருபத்தைந்து இருக்கும். வாடித் தேய்ந்த அவளது முகத்தில், அழகு குன்றவில்லை. நல்ல செயலிலிருந்து இப்பொழுது இறக்கம் போலத் தோன்றியது. இடுப்பிலே உயர்ந்த புடவைதான்; ஆனால், வர்ணம் மாத்திரம் சற்று மங்கி யிருந்தது. நான் போனதும், அவள் என்னை உற்றுக் கவனித்தாள். என் சிறிய தாயாரின் பெண் மாதிரி இருந்தது. அவளைக் கேட்பதற்கு எனக்கு ஸங்கோஜம்."

"சிறிய தாயாரின் பெண்ணைக் கூடவா, அடையாளம் புரியவில்லை? வெகு நன்றாயிருக்கிறது!" என்றார் கோபால சர்மா.

"அடையாளம் புரியவில்லை என்று சொன்னால், பொய்போலப் படும். நான் அவளைப் பார்த்துப் பத்து வருஷத்துக்கு மேலிருக்கும். என் சிறிய தாயாருக்கே கடிதம் வந்து ஆறு மாசத்துக்கு மேலே ஆகப் போகிறது. அவளுக்குப் பிடித்த சில புடவைகளை அவளிடம் சேர்ப்பதற்காக என்னிடத்தில் கொடுத்திருக்கிறாள். பழைய விலாசத்தில் விசாரித்தேன். அந்த வீட்டிலிருந்து போய் ஆறு மாதத்துக்கு மேலாகி விட்டது என்று வீட்டுக்காரர்கள் சொன்னார்கள்."

"கடையிலே வந்த ஸ்திரீ உங்கள் சிறிய தாயாரின் பெண்தான் என்று எப்படி ஊகித்தீர்கள்?" என்று கேட்டார் கிருஷ்ண ராவ்.

"முகச்சாயை அப்படியிருந்தது. குரலும் அவள் குரல்தான். புடவைப் பைத்தியம் அந்தப் பெண்ணுக்கு ரொம்ப உண்டு; ஆயிரம் தினிசு போட்டால்தான், ஒன்று பிடிக்கும் அவளுக்கு என்று என் தாயார் அடிக்கடி சொல்லுவாள். எங்கள் அகத்துக்கு இரண்டு தரம் அவள் வந்திருக்கிறாள். வந்த ஒரே நாளில், மூன்று புடவைகள் மாற்றிவிட்டாள். பாவம்! புருஷன் பணத்தைத் தொலைத்து விட்டான், ரேசிலும் விலைமகள் வீட்டிலும். என்னவோ பழைய ஞாபகங்கள் வருகின்றன. அது இருக்கட்டும், மேலே சொல்லுகிறேன். அந்த அம்மாளின் முன்பு பல புடவைகளை விரித்துப் போட்டான் கடைக்காரன்.

"'இதுதான் காஞ்சிபுரம் தினிசு; இதுதான் கொள்ளேகால் சில்கு; இதுதான் ஆரணி; இதுதான் பாண்டிச்சேரி; இது பங்களூர்; இது பூனா. எது பிடித்ததோ அதை எடுத்துக் கொள்ளுங்கள். லுங்கிக் கட்டம் போட்டது இருக்கிறது. அதை எடுத்து வரலாமா?' என்றான் அவன்.

"'ஆஹா!' என்று தலையை அசைத்தாள் பெண். லுங்கிப் புடவையை அவன் எடுத்து வருவதற்குள், அவளுடைய கண்களும் கைகளும் பக்கத்தில் இருந்த ஜவுளிகளைப் பரிசோதித்தன. அவன் திரும்பி வந்ததும், 'தஞ்சாவூர்ச் சரக்கு ஏதானும் வந்திருக்கோ?' என்று கேட்டாள்: 'தலைப்பிலே நல்ல சரிகைப் பட்டு, நடுவில் நட்சத்திரம்போலப் பொட்டுப் பொட்டாயிருக்கும். அது இருக்கோ? பெயர் வரமாட்டேன் என்கிறதே!'

"'நக்ஷத்திரவாணியா?'

"'ஆமாம், அதிருக்கோ?'

"'முன்னே இருந்தது; எல்லாம் ஆகிவிட்டது. வர இன்னும் ஒரு வாரம் ஆகும்.'

"இப்படி உரையாடிக்கொண் டிருக்கிற சமயத்தில், நாலைந்து கடைகளுக்கு அப்பாலுள்ள மற்றொரு கடைக்காரன் வந்தான். வந்தவன் சும்மா இல்லை. 'என்ன கூத்தையா இது! என் இந்த அம்மாளைக் கடைக்குள் விட்டீர்கள்? போன வாரம் என் கடை பரிசோதனை ஆகிவிட்டது; அதற்கு முந்திக் கிருஷ்ணன் செட்டியார் கடை பரிசோதனை ஆயிற்று. இப்பொழுது உங்கள் கடையா?—வெகு நன்றாயிருக்கிறது!' என்று கேலியாகக் கூறினான்.

"இதுவரையில் தனித்தனி தன் தன் அலுவல்களைக் கவனித்துக் கொண் டிருந்த பல கண்கள், இவளை ஒரு மிக்க கவனித்தன. இந்த அம்மாளின் முகம் சுண்டி விட்டது. 'நாளைக்கு வறேன்' என்று சொல்லி விட்டு அகன்றாள். மழைகொட்ட ஆரம்பித்தது. அப்பொழுது பிடித்த மழை இன்னும் நின்ற பாடில்லை."

"புடவையை ஒருத்தி பார்த்துக் கொண் டிருந்தால் என்ன மோசம் வந்துவிட்டது?" என்றார் கிருஷ்ண ராவ்.

"அந்த ஸ்திரீக்குப் பரிந்து பேசுகிறீர்களே. கடைக்காரனின் சமாசாரம் என்ன?" என்றார் கோபால சர்மா.

மழை கொட்டிக்கொண் டிருந்தது.

என் நண்பர்கள் அகன்றார்கள். என் மனம், கொட்டுகிற மழையில் சொட்டச் சொட்ட நனைந்து கொண்டு போகிற பெண்ணை நோக்கிச் சென்றுகொண் டிருந்தது.

அன்றிருந்து ஜவுளிக்கடைகளுக்குப் போகும்பொழுதெல்லாம் நான் சுற்றிப் பார்க்கிறதுண்டு; ஆனால், அந்த முகத்தைக் காணோம்.

ஜப்பானியப் பிரதம மந்திரி டோஜோ.

இன்று ஜப்பான் துராக்ரமணப் போர் தொடுத்திருக்கிறது. இந்த ஜப்பானுக்குச் சில வருஷங்களுக்கு முன் நண்பர் ஏ. கே. செட்டியார் பிரயாணம் செய்து நேரிலே கண்ட பல விவரங்களை அழகாக ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். அது 'சக்தி' மலராக வெளி வந்துள்ளது. மிக ரஸமான பிரயாண அநுபவங்களை அந்தப் புத்தகத்தில் காணலாம். அதில் காணப்படும், ஜப்பான் சம்பந்தமான சில முக்கியமான தகவல்களும் புள்ளி விவரங்களும் மட்டில் இங்கே கொய்து தரப்பட்டிருக்கின்றன.

ஜப்பானியச் சக்கரவர்த்தி மிக்காடோ.

ஜப்பான்

[ஏ. கே. செட்டியார்]

சரித்திர வரலாறு: சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே மத்திய ஆசியாவிலிருந்தும் தெற்குத் தீவுகளிலிருந்தும் பல ஜனங்கள் புறப்பட்டு, ஜப்பானில் குடியேறினார்கள். மத்திய ஆசியாவிலிருந்து வந்தவர்கள் மஞ்சள் நிறத்தவர்கள். தெற்குத் தீவுகளிலிருந்து வந்தவர்கள் வெள்ளை நிறத்தவர்கள். அவர்கள் கடற்கரையோரங்களில் குடியேறினார்கள். ஜப்பானின் சீதோஷ்ண நிலை அவர்களுக்கு ஏற்றதாயிருந்தது. எனவே, அங்கேயே தங்கியிருக்க ஆரம்பித்தார்கள்.

அவர்கள் குகைகளிலே வசித்தார்கள். கல்லினால் செய்த ஆயுதங்களையே உபயோகித்தார்கள். மீன் முதலியவைகளைச் சாப்பிட்டார்கள். சில காலத்துக்குப் பின்னால், இந்தோ-சைனாவிலிருந்து இங்கே குடியேறிய சிலர், பயிரிடும் விதத்தை இந்த ஆதிக் குடிகளுக்குக் கற்பித்தார்கள்.

பின்காலத்தில் இவர்கள் பலவித மான ஆடை அணிய ஆரம்பித்தார்கள். சிலர் ஆடையின்றியும் திரிந்தார்கள். இவர்கள் பூஜித்த பழைய விக்கிரகங்களைக்கொண்டு பார்க்கும்பொழுது, இவர்களில் ஆண்கள், இடையிலும் மேலேயும் ஆடை யணிந்திருந்ததாகத் தெரிகிறது; பெண்கள், இடையில் மட்டும் ஆடை அணிந்திருந்தார்களென்று ஊகிக்க வேண்டியிருக்கிறது.

வரவர மஞ்சள் நிறத்தவருக்கும் வெள்ளை நிறத்தவருக்கும் சம்பந்தங்கள் உண்டாயின. இவர்களுக்குப் பிறந்தவர்கள்தான் ஜப்பானியர்கள். இவர்கள் ஆரம்பத்தில் நூற்றுக்கணக்கான குடும்பங்களாகச் சேர்ந்து சேர்ந்து வாழ்ந்தார்கள். இவர்களிடையே அடிக்கடி சண்டை சச்சரவுகள் நேர்ந்தன. சட்ட ரீதியான அரசியல் ஸ்தாபனம் அக்காலத்தில் கிடையாது. இவர்கள் நாளடைவில் ஜப்பானின் வடமேற்கிலும், தென் கிழக்கிலும் குடியேறத் தொடங்கினார்கள்.

அரசியல் அமைப்பு: ஜப்பான் ஒரு சக்ரவர்த்தியின் ஆளுகைக்குட்பட்ட நாடாகும். ஜப்பானின் அரசியல் சட்டப்படி 2594 வருஷங்களாக அரசாண்டு வரும் இதே அரச குடும்பத்தினர்தான் இனியும் ஆண்டு வர வேண்டும். சக்ரவர்த்தியின் பெயராலேதான் எல்லாக் காரியங்களும் நடைபெற்று வரும்.

தேச நன்மையை முன்னிட்டு மேல்சபை கீழ்ச்சபை என இரண்டு சபைகளிருக்கும். (இவைகளைத்தான் இம்பீரியல் டயட் என்று கூறுகிறார்கள்.) மேல் சபை அங்கத்தினர்களில் பெரும்பாலோர், சக்ரவர்த்தியால் நியமிக்கப்படுவார்கள். கீழ்ச்சபையிலுள்ளவர்களில் பெரும்பாலோர், ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் படுபவர்கள். தற்பொழுது மேல்சபையில் 502 அங்கத்தினர்களும் கீழ்ச்சபையில் 426 அங்கத்தினர்களும் இருப்பதாகத் தெரிகிறது. 30 வயதுக்குக் குறைந்தவர்கள் இந்தச் சபைகளில் அங்கம் பெற முடியாது.

இந்தச் சபைகளுக்குச் சக்ரவர்த்தியை நீக்கவோ அல்லது சக்ரவர்த்தி குடும்பத்தாருக்குக் கொடுக்கப்பட்டு வரும் படித்தரத்தைக் குறைக்கவோ அதிகாரம் கிடையாது. சக்ரவர்த்தி 'புனித' மானவராதலால், அவர் எத்தகைய குறையுமில்லாதவர் என்று கருதப்படவேண்டும். அவர்மீது குற்றம் சுமத்த, யாருக்கும் உரிமையில்லை. மொத்தம் பதின்மூன்று மந்திரிகள் இருப்பார்கள். அவர்களில் பிரதம மந்திரி ஒருவர். பன்னிருவர் மற்ற மந்திரிகள். மந்திரிகள் தங்கள் தங்

கள் இலாக்காக்களுக்குத் தலைவர்களாக இருப்பதோடு சக்ரவர்த்திக்குப் பொறுப்புள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

இருபத்து நான்கு அங்கத்தினர்கள் கொண்ட 'பிரிவி கவுன்சில்' ஒன்றிருக்கிறது. பிரதம மந்திரியைக் கலந்துகொண்டு சக்ரவர்த்தி இந்த அங்கத்தினர்களை நியமிப்பார். அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் உயர்ந்த அதிகாரிகளும் சில மந்திரிகளுமே இந்தச் சபையில் பதவி வகிக்கத் தகுதி யுடையவர்கள். இவர்கள் சக்ரவர்த்திக்கு யோசனை கூறுவார்கள்.

ஜப்பானில் உள்ள மிக உயர்ந்த மலையான *வுஜியாமா* : 12367 அடி உயரம்.

சக்ரவர்த்திக்குச் சில தனி அதிகாரங்கள் உண்டு. தேசத்தின் நெருக்கடியான நிலையில் சபைகள் கூட்டப்பட முடியாம லிருக்கும் பொழுது, சில உத்தரவுகளை அவர் பிறப்பிக்கலாம். பின்னல் இந்தச் சபைகள் சக்ரவர்த்தியின் உத்தரவுகளை ஆதரிக்காவிட்டால், அந்த உத்தரவுகள் ரத்து செய்யப்படும். யுத்தங்களைத் தொடங்குவதற்கோ அல்லது நிறுத்துவதற்கோ அல்லது உடன்படிக்கை செய்து கொள்வதற்கோ, சக்ரவர்த்திக்குத்தான் அதிகாரம் உண்டு.

மதங்கள் : ஜப்பானில் முக்கியமாகவுள்ள மதங்கள் மூன்று. பௌத்த மதத்தை, சுமார் நான்கு கோடி ஜனங்கள் தழுவி யிருக்கிருர்கள். ஷிண்டோ மதத்தை மதமென்று கூறுவதற் கில்லை. மத நூல்களும் கோட்பாடுகளும் அதற்குக் கிடையாது. இயற்கையையும் முன்னேர்களையும் பூசிப்பதே அந்த மதமாகும். சுமார் இரண்டு கோடி ஜனங்கள் இதைச் சேர்ந்தவர்கள். மற்றவர் கிறிஸ்தவர்.

ஏ. கே. செட்டியார்

ஜப்பான் முழுதும் லட்சத்துக்கு மேற்பட்ட புத்தக் கோயில்களும், அதே எண்ணிக்கை ஷிண்டோ ஆலயங்களும் இருக்கின்றன. ஷிண்டோ மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஏராளமான கடவுள்களும் அடியார்களும் உண்டு. சோறு, பழம், காய்கறி, அரிசிச் சாராயம் முதலியவைகளை அவர்கள் சாமிக்குப் படைக்கிருர்கள். மும்முறை கைதட்டி, சிறிய நாணயமொன்றை உண்டியல் பெட்டியில் போட்ட பின்பு, மண்டியிட்டு வணங்குகிருர்கள்.

ஜப்பானிய நாணயம் : நூறு சென் கொண்டது ஒரு யென். ஒரு சென் செம்பு. ஐந்து, பத்து சென் நிக்கல். ஐம்பது சென் வெள்ளி. ஒரு யென் நோட்டு. ஒரு யென் மதிப்பு சுமார் 12 அணு.

வாழ்க்கை : ஜப்பானியரின் சராசரி வயது 43. பொதுவாக, ஜப்பானிய இளைஞர்களுக்கு 25 வயதுக்கு மேல்தான் திருமணம் நடைபெறுகிறது. பெண்களுக்கு 22 அல்லது 23 வயதில் திருமணம் நடைபெறும். தரகர்கள் தான் திருமணத்தை முடித்து வைப்பார்கள். தற்பொழுது, கல்யாணம் ஆவதற்கு முன்னதாகவே மாப்பிள்ளையும் பெண்ணும் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து அவர்கள் விருப்பமறிந்து திருமணம் செய்ய முற்படுகிருர்கள். கல்யாணச் சடங்குகள் மிகவும் சொற்பம். சில சடங்குகளுக்குப் பின்பு, பெண் வீட்டாரும் மாப்பிள்ளை வீட்டாரும் எதிர் எதிரே இருந்து உணவருந்துவார்கள். மிகச் சுருங்கிய செலவில் இந்தத் திருமணங்கள் முடிந்து விடும்.

ஜப்பானியக் கடவுள்கள் :

1. **எபிஸு** :— வியாபாரிகளின் தேவதை.

2. **டைகோகூ** : — செல்வத்துக்குரிய கடவுள்.

3. **பென்டேன்** :—ஜப்பானிய 'சரஸ்வதி'

4. **பிஷாமோன்** :—இராணுவக் கடவுள்.

5. **வுகுரோகுஜின்** : — தத்துவ சாஸ்திரங்களை நன்குணர்ந்த ஓர் அடியார்.

6. **ஜூரோஜான்** :—சாராயம் விரும்பும் தெய்வம்.

7. **ஷோதே** :—புத்த மதத்தைச் சேர்ந்த ஓர் அடியார்.

ஜப்பான் :—பசிபிக் மகாசமுத்திரத்திலுள்ள ஆறு பெரிய தீவுகளும் வேறு சில சிறு தீவுகளும் கொண்டது.

விஸ்தீர்ணம் :—

ஜப்பான் பிரதம தீவு	238946	சதுர மைல்
ஹொன்ஸு	143938	,,
ஷிகோகூ	11734	,,
கியூஸு	26299	,,
ஹொக்கைடோ	55484	,,
ரியூகியூ	1441	,,

சரித்திரக் கதை :

கின்னரகிரி சுந்தரவதி

[எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்]

> வீர மாது போர்க்களத்திலே வெற்றி கொள்ளும் தருணம். பகைவனிடம் பரிதாபமுற்று, ‘இன்று போய் நாளைவா’ என்றாள். ஆனால், அந்தக் காமுகனின் சூழ்ச்சியை என்னென்பது! என்றாலும், இறுதியிலே, அவன் சூழ்ச்சிக்கு எதிர்ச் சூழ்ச்சியே சரியான பதிலாயிற்று.

அடிதடியில் அன்பு பிறக்குமோ? கத்தி முனையில் காதல் உதிக்குமோ? ஆம், பிறக்கும், உதிக்கும் என்று ஆர்ப்பரிக்கிறான் முகம்மதுகான். அளப்பரிய சேனையுடன் செல்லுகிறான். அருஞ் சமரும் செய்கிறான். சுந்தரவதியை மடக்குகிறான். மணக்கோலமும் பூணுகிறான். மறுகணமே மரித்து வீழ்கிறான். சுந்தரவதியும் நருமதை நதியில் குதிக்கிறாள். நானிலத்தைத் துறக்கிறாள். இரு திறத்து வீரரும் திகைத்து நிற்கின்றனர். இச் சரித்திர சம்பவம் பேசுவோம்.

இந்தியாவின் சமஸ்தானங்கள் ஒன்றா, இரண்டா? ஐந்நூற்று அறுபத்திரண்டு! அவற்றில் ஒன்று போபால். பூபாலம் என்பதே எற்கும். போபாலின் மூல புருஷன் முகம்மதுகான். அவன் ஓர் ஆப்கானியன். பிழைப்பை நாடி இங்கே வந்தான். டில்லி பாதுஷாவிடம் மெய்காப்பாளனாக வேலை பார்த்தான். அரிமாக்கள் இருந்து ஆண்மை செலுத்திய பீடம். நரிமா குந்திக் கிடந்தது. மொகலாய வல்லரசைக் காக்க, பகதூர் ஷாவினால் ஆகவில்லை. பேதுற்றுக் கிடந்தான் அப் பாதுஷா. அதுவே சமயமென முகம்மதுகான் தெற்கு நோக்கினான்; மத்திய இந்தியா சேர்ந்தான். தானே அரசன் என்றான்.

கேட்பார் யாருமில்லை. தலைக்குத் தலை அம்பலம். அகப்பட்டதைச் சுருட்டும் காலம். முகம்மதுகான் மன்னன் ஆனான். இஸ்லாம் நகரம் கண்டான். பூபாலம் எனும் நகரும் நிருமித்தான். [அதனைச் சுற்றிய பிரதேசமே தற்கால போபால் சமஸ்தானம்.] நாற்றிசையும் கொடி தூக்கினான். பல இடங்கள் வசமாயின. பூசிப்பு வழிந்தோடியது. புத்தியும் தடுமாறியது.

பூபாலத்துக்கு அப்பால் ஒரு குறுநாடு. அதன் பெயர் கின்னரகிரி. ரஜபுத்திர வீரரின் இருப்பிடம். பரம்பரைப் பெருமை வாய்ந்தது. வடக்கே மொகலாய வல்லரசு. தெற்கிலோ தக்காண முகம்மதிய வரசுகள். எந்த அரசும் எட்டிப் பார்க்கவில்லை. கின்னரகிரியும் தலை வணங்கவில்லை; தருக்கியே நின்றது.

பரம்பரைப் பெருமையை உணர்ந்தான் முகம்மதுகான். கின்னரகிரிக்கு இவ்வளவு எடுப்பா என்றான். போதாக்குறைக்கு அவனிடம் மையலும் மூண்டது. கின்னரகிரியின் தலைவி மகா ரூபவதி. பெயரோ சுந்தரவதி. அது, காரணச் சிறப்புப் பெயர். கம்பர் சொல்லிய வண்ணம், வில்லொக்கும் நுதல், வேலொக்கும் விழி, பல்லொக்கும் முத்தம், பவழமே அதரம் என்றால், சொல்லொக்கும்; பொருள் ஒவ்வாது.

இராவணனுக்குச் சூர்ப்பனகை தூபம் போட்டாள். அங்ஙனமே தோழரும் முகம்மது கானுக்குத் தூபம் போட்டனர். மூண்டது காதல். விண்டது மனம். எழுந்தனர் வீரர். ஒலித்தன முரசம். ஓங்கின தூளி. உறுத்தான் முகம்மது. எழுந்தான் சேனையுடன்.

அறிந்தாள் சுந்தரவதி. ஆண் உடை தரித்தாள். அருங்கவசம் பூண்டாள். படைக்கலம் பலவும் தாங்கினாள். ஆவேசம் கொண்டாள். வாகை மாலை, இன்றேல் வீரச்சாவு என்றாள். அரசியின் கோலம் கண்டனர் வீரர். ஆண் சிங்கமே போல் கிளம்பினர். போர் முனையில் குதித்தனர்.

துர் நிமித்தங்கள் நிகழ்ந்தன. சோதிட வல்லுநர் திகைத்தனர். சுந்தரவதி சளைக்கவில்லை. “எந் நிமித்தம் நிகழினுமென்? வெற்றி கிட்டாது போகலாம். வீரத்துக்கும் அழிவு உண்டோ? மாற்றானை முதுகு காண முயலுவோம். முடியாதாயின், வீரமே விளைப்போம். வீறாக வீழ்வோம். முன்வந்தோம், பின் வாங்கோம். இதுவே ஆணை” என்றாள்.

வீரர் வாய்திறக்கவில்லை. வருவது வருக என்று வாளை உருவினர். கின்னரகிரியின் எல்லையிலே கொடுஞ் சண்டை. ஆசை நோய் முகம்மது கானை ஆட்டியது. மானமே ரஜபுத்திரரை ஊக்கியது. பகல் முழுதும் ஓயாச்சண்டை, ஒழியாச்சண்டை. அந்தி வேளை வந்தணுகியது. பூபாலப் படைஞர் பெரிதும் களைத்துப் போயினர். கருத்தழிந்தும் நின்றனர்.

பார்த்தாள் சுந்தரவதி. பெரிதும் இரக்கம் கொண்டாள். நிறுத்தினாள் போரை. நாளை வருக என்று தூது போக்கினாள். முகம்மதுகான் அது கேட்டான், ஆறுதல் கொண்டான்; ஆபத்து அகன்றதெனக் களித்தான். நங்கையின் நேர்மையே நேர்மை என்று நவின்றான்.

இரவு புகுந்தது. இரு திறத்தினரும் பாசறை சேர்ந்தனர். களைப்பு ஆறினர். கண்ணுறக்கமும் கொண்டனர். சுந்தரவதி நித்திரை கொள்ளவில்லை. மறுதினம் போருக்குத் திட்டம் வகுத்தாள். தளகர்த்தருக்குத் தனித்தனி ஆணை சொன்னாள். நடுநிசி ஆழ்ந்தது. பேயும் உறங்கும் நேரம். ரஜபுத்திர வீரர் கண்ணை மூடினர். கின்னர ராணியும் சற்றே மஞ்சத்தில் சாயலானாள்.

பகைவெறியிலும் சரி, படைமுகத்திலும் சரி, காதல் நினைவிலும் சரி, காமவிளைவிலும் சரி, ரஜபுத்திரரிடம் பெருந் தன்மையே தோன்றும், அருந்தர்மமே தலைகாட்டும், ஆன்ற அறிவே பிரதி பலிக்கும். முகம்மதுகான் அப் பெருங் குணத்தை மதித்தானில்லை; பேராண்மையுங் கொண்டானில்லை. வஞ்சமே விளைக்க நினைத்தான்; அதர்மமே இழைக்க முயன்றான்; அக்கிரமமே காட்ட முனைந்தான். பல சொல்லி என்ன! மேல் விளைவை மொழிவோம்.

முகம்மதுகான் கண்மூடவில்லை. மாதின் கையில் பட்ட தோல்வி

வாட்டியது. மங்கையின் தோற்றமும் மனத்தைக் கவ்வியது. துணைவரை அழைத்தான். யாது செய்வதென உசாவினான். சகுனிமாமனைப் போன்ற நேசர் சதியே சொல்லினர். உறக்கவேளையில், போர் முறுக்கத் தூண்டினர். கானின் வீரர் பூனைபோல் எழுந்தனர். ரஜபுத்திரர்மீது பாய்ந்தனர்.

மாற்றானை அம் மாதராள் மதித்தறியவில்லை. போர்நெறியில் பிறழான் என்றே எண்ணினள். நடுநிசியில் சதிப்போரை எதிர்பார்க்கவில்லை. ஏமாந்து போய்விட்டாள். தன் வீரரை வீணே பலிகொடுக்க விரும்பவில்லை. எனவே, வீரருடன் பின் வாங்கினாள். அசைலகிரி எனும் கோட்டை சேர்ந்தாள்.

ஆசைவெறி ஒரு பக்கம். வெற்றிவெறியும் ஒரு பக்கம். இரண்டும் கூடிக்கொண்டன. முன்னேறினான் முகம்மதுகான். அசைலகிரியை நாற்புறமும் சூழ்ந்துகொண்டான். ஒரு மாதகாலம் முற்றுகை நீடித்தது. துணைவலி கிட்டவில்லை. உணவுப் பண்டங்களும் தட்டிப்போயின. வீரரும் களைத்துப் போயினர். பசிநோயும் பரிபவம் இழைத்தது. அக்கோட்டையிலே நிலைக்க முடியவில்லை. வேறு வழியுமில்லை.

வேதகிரி எனும் கோட்டை குறுகினாள் சுந்தரவதி. அங்கே பகைவனை எதிர்த்து நின்றாள். உக்கிரமான சண்டை மூண்டது. உயிர்ச் சேதமோ சொல்லி முடியாது. முகம்மதுகானும் பலரையிழந்தான்; பரிதபித்தான். முடிவைக்குறித்தும் மனம் உளைந்தான். ரஜபுத்திரரின் வீராவேசங் கண்டு வேசாறினான். ஆயினும் என்ன? பாக்கியம் அவன் பக்கமே நின்றது. முகம்மதிய வீரர் கைமேலாயினர்.

நிலையை நோக்கினாள் கின்னரகிரி சுந்தரவதி. போர்நூலின் முறைமைக் கேற்பப் பின்வாங்கினாள். கூடகிரி எனும் கோட்டை சேர்ந்தாள். வைரம் மிகுந்து, வாளமர் புரிந்தாள். ரஜபுத்திரரும் வாள்வரிசை யெல்லாம் காட்டினர். ஒன்றும் பலிக்கவில்லை. கூடகிரியிலிருந்தும் அக் கோதை பின் வாங்கினள்.

வேறொரு கோட்டை புகுந்தாள் அவ் வீரமாது. அதனையும் கைவிட நேர்ந்தது. மற்றொரு கோட்டையில் நின்று பார்த்தாள். புற்றீசல் போல் பகைவர் வந்துகொண்டேயிருந்தனர். வைரியை வாட்ட முடியவில்லை. முடிவிலே கின்னரகிரியில் தஞ்சம் கொண்டாள். ஆயினும் மனம் உடையவில்லை. வீரரின் வாட்டத்தை நோக்கினாள். விழுமிய போதம் புகட்டினாள்:

“வென்றவர் தோற்பர். தோற்றோர் வெல்குவர். எவர்க்கும் மேலாய் நின்றவர் தாழ்வர். தாழ்ந்தோர் உயர்குவர். இதுவே இயற்கை. கடைசி முறையாக முயன்று பார்ப்போம். முடியாதாயின், வீர சுவர்க்கம் புகுவோம். வீரர்க்கு வேறுவகை ஏது?”

வீரவாசகங் கேட்ட ரஜபுத்திரர் வெகுண்டெழுந்தனர். வைரியை வெட்டிச் சாய்த்தனர். பின்பு வீர சுவர்க்கமும் புகுந்தனர். தனியே நின்றாள் அத்தணியா மாது. தளர்வு கொண்டாளில்லை. குருளையை இழந்த பெண்சிங்கமேபோல் சமர் செய்தாள். வீச் சொன்றுக்குப் பத்தெட்டாக விரோதிகளை வீசித் தள்ளினாள்.

எட்ட நின்று முகம்மதுகான் பார்த்தானந்தித்தான். பரவசமுங் கொண்டான். வீரமாதுக்கு ஊறு செய்யவேண்டாமென ஆக்கினையிட்டான். முகம்மதியரும் சுந்தரவதியை அணுகவில்லை. கையும் மெய்யும் சலித்தாள் அக் காரிகை. களைப்பு மிகுந்துவிட்டது. இரவும் வந்து புகுந்தது. சற்றே கண்ணயர்ந்தாள் கின்னரகிரியின் அரண்மனையிலே.

உளவர் வந்து உற்றது உரைத்தனர். முகம்மதுகான் நூலேணி கொண்டான். மதிள்மீது ஏறினான். மாளிகையின் வாயில் குறுகினான். சுந்தரவதிக்குத் தூதும் போக்கினான்.

“மங்கையர் திலகமே! மாதர் அணிகலமே! வீரத்தின் விளக்கே! வீறாப்பின் இருப்பிடமே! உனது உடல் எனது உடல். உனது உயிர் எனது உயிர். இரண்டும் எனக்குத் தாரகம். உனக்கு ஓர் ஊனமும் இழைக்கேன். உனது நாட்டுடன் எனது நாட்டையும் கைக்கொள்க. எனது உயிரையும் காத்தருள்க. எனக்கும் அரசியாக விளங்குக!”

தூதின் வாசகங்கேட்டாள் சுந்தரவதி. தனது நிலையையும் உணர்ந்தாள். நகரின் தளர்வையும் நோக்கினாள். வஞ்சனையின் விளைவையும் ஓர்ந்தாள். பின்னர், சிறிதும் தயங்கவில்லை; சிந்தனையும் செய்யவில்லை. பதில் தூது விடுத்தாள்.

“வெற்றி வீர! உன் போர்த்திறனே திறன். நெஞ்சுறுதியே உறுதி. இரண்டையும் எங்ஙனம் புகழ்வேன்! உன் பேராண்மை பேசப்போமோ? போர் விளைவும் பகருந்தரமோ? பலபேசி என்ன! மணவினைக்கு முயலுவோம். எல்லாம் ஆயத்தம் செய்கிறேன். இரண்டு முகூர்த்த நேரம் காத்திருப்பாயாக!”

அம்மொழி கேட்டான் முகம்மதுகான். களிப்பில் ஆழ்ந்தான். விநாடிகளை விரல் விட்டு எண்ணினான். ஒவ்வொரு கணமும் ஒரு யுகம்போல் வளர்ந்தது. மாளிகையின் வாயிலிலே மயங்கிக் கிடந்தான். கிட்டிய கனியை அருந்தவும் அடங்கா ஆவல் கொண்டான்.

மாளிகையின் மேல்தளம் மணக்கோலம் தாங்கியது. மங்கை நல்லாளும் ஆண் உடை களைந்தாள். நல்லாடை பூண்டாள்; பேரணி பலவும் தரித்தாள். தலையை வாரி முடிந்தாள்; நெற்றியில் திலகம் தீட்டிக்கொண்டாள். மணப்பறைகள் கல்லென ஒலிக்கத் தலைப்பட்டன.

முகம்மதுகான் மட்டிலா மகிழ்ச்சி கொண்டான். அவன் தோழரும் ஆனந்த சாகரத்தில் ஆழ்ந்தனர்.

வேதியரும் மெய்காவலரும் மணப்பறை கேட்டனர். ஈதென்ன விபரீதம் என்றனர். நம் வேந்தனது காதல் கிழத்தியாயினும், கடிமணங் கொண்ட கன்னியினும் கற்புடையளாகத் துலங்கினளே. வேந்தன் மைந்தன் வயது எய்தும் வரையில், உயிர் தாங்கி நிற்க ஒருப்பட்டவள் அன்றோ? மாற்றானுக்கு மாலை யிடுவளோ? மற்றொருவனைக் கண்ணெடுத்தும் பார்ப்பளோ? என்ன விபரீதம் இது? மங்கையரின் நெஞ்சாழம் கண்டார் யார்? நிமலன் நினைத்தபடியே நடக்கும். நம்மால் என்ன ஆகும்? என்று எண்ணி, ஏங்கி, இடிந்து நின்றனர்.

சிறிது நேரம் சென்றது. மாளிகையின் மீதிருந்து இருவர் கீழே விரைந்து வந்தனர். முகம்மது

கானை யடைந்தனர். சலாம் ஆலிகும் சலாம் என்றனர். எல்லாம் ஆயத்தம் என்றனர். மணவினையே பாக்கி என்றனர். அரசி அளித்த ஆடை இவை, அணிகலன்கள் இவை என்றனர். அழகு மிகப் புனைந்து கொள்க என்றனர். தனிமையில் தளத்தின்மீது வருக என்றனர்.

அனைவரும் அது கேட்டு அதிசயித்தனர். முகம்மதுகானோ மெய்ம்மறந்தான். மகிழ்ச்சி வலையில் பட்டான். தனது ஆடை அணிகளைக் கழற்றினான். சுந்தரவதி அனுப்பிய ஆடை அணிகளைப் பூண்டு கொண்டான். நிலைக் கண்ணாடியின் நேர் நின்று அலங்காரத்தை நோக்கினான். அரசிக்கு உகப்பாகும் என்று மனம் பூரித்தான்.

அரசி குறித்த இரு முகூர்த்த நேரம் கழிந்தது. மண முகூர்த்த வேளையும் நெருங்கியது. வேதியரும் மதியமைச்சரும் விரைந்து வந்தனர். முகம்மதுகானைக் கண்டு மலர்முகம் கொண்டனர். கைலாகு கொடுத்தனர். மாளிகையின்மீது இட்டுச் சென்றனர். மணம் முடிந்ததும், தோழரும் பிறரும் மேல்தளம் வரலாம் என்றனர்.

புன்னகை பூத்த முகத்துடன் முகம்மதுகான் படிப்படியாக ஏறினான். புதையல் கிடைக்கப்பெற்ற பரம ஏழையேபோல் மகிழ்ந்தான். மேல்தளம் நண்ணியதும், சுந்தரவதியின் சேடியை நோக்கினான். பிரமித்தான். பேதுற்றான். மரம் போல் நின்றான். மந்தகாசம் கொண்டான். மனக்கொள்கை கூடியது என்றான்.

உடனே ரமணியின் சேடியொருத்தி எதிர்வந்தாள். மணியாசனம் ஒன்றைச் சுட்டிக் காட்டினாள். எங்கள் மன்னவனே, இதில் வீற்றிருக்க என்றியம்பினாள். வேதபாரகர் வருவர், மணவறைக்கு அழைத்துச் செல்லுவர் என்றாள்.

பரம பூரிப்புடன் பொன்னாசனத்தில் அமர்ந்தான் முகம்மதுகான். சுற்று முற்றும் பார்த்தான். சோபான அறை இதுவோ என்றான். ஆம் என்றாள் சேடி. என் ராணி எங்கே என்றான் அவன். இதோ வந்தாள் என்றாள் சேடி. எழுந்து நிற்க இச்சித்தான் முகம்மதுகான். இடம் விட்டுப் பெயர இயலவில்லை. என்ன இது என்று வினவினான்.

இதற்குள் அவன் வதனம் வாடியது. மேனி துவண்டது. உள்ளூர வெம்மை பரவியது. உடல் சிலிர்த்தது. உள்ளம் ஓய்ந்தது. உரையும் சிறிதே குழறியது. எல்லாம் மணவறைக்குள் புகுமுன் நேரும் துடிப்பு என்றே கருதினான்!

அருகே யிருந்த சேடி ஓடிச் சென்றாள். மயில் விசிறி கொணர்ந்தாள். மெல்லென விசிறினாள். உபசாரம் பலவும் புரிந்தாள்.

உள்ளே ஊறிய வெம்மை வேகம் கொண்டது. "அந்தோ! என் உள்ளம் சோர்கின்றது. உயிர் துடிக்கின்றது. உடலம் எரிகின்றது. என்றும் காணா வெம்மை இது; வாடி வதங்குகின்றேன். என் செய்வேன் ஏழையேன்? என்ன பிழை செய்தேன்? நேரிழை என் கண் முன்னே தோன்றி மறைந்தனளே. அம் மாதராள் எங்கே? மணவறையில் எப்போது புகுவது? சுந்தரவதீ! என் பிழையைப் பொறுத்தருள். என்மீது இரக்கங்கொள். என் அரசும் வாழ்வும் உயிரும் உடலும் உன் அடைக்கலம். உன்னைப் பகைத்து வாழ இயலுமோ? வீண்வர்மம் வேண்டாம். விடுக வைரம். கொள்க கருணை!" என்று புலம்பலானான்.

அருகே நின்ற சேடி சொல்வாள்:—"வெற்றிவீர! போபால பூபதீ! புத்தி கெட்டாய். மடமாதொருத்திமீது படையேந்தி வந்தாய். காதலைக் கத்தி முனையில் காண விழைந்தாய். கத்தி முனையில் காதல் பிறக்குமோ? அடிதடியில் அன்பு உதிக்குமோ? என்ன பேதைமை இது! முன்பின் யோசியாது வந்தாய். மணம்பேச முற்பட்டாய். மணப்பறைகள் கல்லென்று ஒலித்தன. உண்மை! அம்மணப்பறையே பிணப் பறையாய் ஒலிப்பது பார். வீரமாதின் சித்தமதைக் குலைக்கக் கருதினாய். உன் சித்தம் சலித்தாய், சீர்கெட்டாய். உனது உடலை மூடியிருக்கும் ஆடை உன்னைச் சும்மா விடாது. ஒரு முகூர்த்த நேரத்தில் உன் உயிரைப் பறிக்கும். மயிர்க்கால் தோறும் நஞ்சு ஏறுகின்றது. உடலில் ஊறுகின்றது. எங்கள் சுந்தரவதியை வெல்ல உன்னால் ஒண்ணுமோ? அவள் காலும் உனக்குக் கிட்டுமோ? கின்னரகிரிக் காவலுடன் அன்றே சதியாயிருப்பாள். பச்சைக் குழந்தையைக் கருதிப் பாரில் வாழ்ந்தாள். அவனுக்காகவே போர் புரிந்தாள். இனி, பரமன் பாதம் சேரப்போகின்றாள். அவளும் பிழைத்திராள். நீயும் பிழைத்திராய். நீ கண்மூடும் தருணம் கிட்டிவிட்டது. ஆண்டவன் அல்லாவைத் துதி. மாதர் மயக்குடன் மாயாதே. நாயகனை நினைந்து கண்ணைமூடு. பிறரை நோவதில் பயனில்லை. உன் செயலையும் விதியையுமே நோதல் வேண்டும்."

அங்ஙனம் சேடி செப்பி நின்றாள். முகம்மதுகான் உண்மை உணர்ந்தான். மேலாடையைக் கழற்றினான், அணிகலன்களையும் அகற்றினான். ஆண்டவனே என்று அலறினான்.

ஆடையணிகளைக் களைந்தெறிந்தும் என்ன? விஷமோ நன்கு ஊறிவிட்டது. தலைக்கும் ஏறிவிட்டது. சித்திரவதைக்கு ஆளானவன்போல் பதைத்தான். விம்மினான். வெய்துயிர்த்தான். விழுந்தழுதான். உடனே உயிரும் ஓடிவிட்டது.

சுந்தரவதி என்னாயினாள்? சேடியை முகம்மதுகானிடம் அனுப்பினாள். உடனே "அம்மை பவானியே! இனி யான் உனது அடைக்கலம். நருமதையில் குதித்து உன் பாதம் சேர்கிறேன். என்னை மாற்றான் இச்சித்தபின், இம்மண்ணுலகில் இரேன்" என்று கூறினாள்.

அவ்வளவுதான் தாமதம். மாளிகையின் மதில் சுவர் சேர்ந்தாள். அதன்மீது சரசரவென ஏறினாள். உச்சியில் நின்று கின்னரகிரியை நோக்கினாள்; பவானியம்மை காப்பாள் என்று கூறினாள். பழம்பதியே! போய் வருகிறேன் என்று கைகூப்பினாள். தொப்பென்று நருமதை யாற்றில் குதித்தாள். அருவியும் அவ்வீரமாதைத் தன் வயிற்றகத்தே அணைத்துக் கொண்டது.

பூபால நகருக்குப் போகும் பாதையிலே முகம்மதிய விதிப்படி முகம்மதுகானை ரஜபுத்திரர் அடக்கஞ் செய்தனர். காதலும் கற்பும் இருந்தவாறு என்னே!

உங்கள் வதனம்
வசீகர எழில் வாய்ப்பது எங்ஙனம் ?

வசீகர எழில் அனேகமாக எல்லா மாதர்களும் பெறமுடியும். உங்கள் முகத்தை சரியாக பராமரித்து வராவிடில் உங்கள் சௌந்தரியத்தின் ஒரு பாகம் நீங்கள் இழக்க நேரும்.

மாதர்கள் தங்களது சௌந்தரியத்தை விருத்தி செய்ய பண்டு பண்டையிலிருந்தே கையாண்டுவரும் சிங்காரிப்பு வித்தைகள் பற்பல உள்ளன. ஆனால் முகம் பருபருத்து காந்தி குன்றி யிருக்குமாகில் எப்படி சிங்காரித்தும் யாது பயன்? மாசற்று பட்டுப்போன்ற வதனம் ஸ்திரீகளின் வனப்பிற்கு இன்றியமையாததல்லோ! முகத்தை விகாரப்படுத்தும் கோடுகள், கரும் புள்ளிகள் முதலியன வியர்வை காரணம் உள்ளிருந்து கழியும் மலமும் அழுக்கும் சருமத்துவாரங்களில் படிதலினாலேயாம். முகம் பருபருத்து காந்தி குறைவது கடும்வெயிலும் சூடான வரண்ட காற்றும் அடிக்கடி படுவதின் பயன்தான். பாண்ட்ஸ் க்ரீம் இடைவிடாது உபயோகிக்கில் உங்கள் முகம் ரோஜா இதழ்போன்று மிருதுத்துவமும் புதுமையும் வாய்க்கும். அதிலடங்கியுள்ள அரிய தைலங்கள் மயிர்க் கண்களினுட் சென்று அன்றாடம் படியும் அசுத்தங்களை யெல்லாம் போக்குவதோடு வெயிலும் காற்றும் பட்டு சருமம் வரண்டு போகாமல் போஷணை யளித்துக் காப்பாற்றவும் செய்கிறது. பிரதி காலையிலும் இரவிலும் பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம் கொஞ்சமெடுத்து விரல் நுனியால் முகத்திலும் கழுத்திலும் தேய்க்கவும். சொற்ப நேரம் அப்படியே யிருக்கட்டும். அது மயிர்க் கண்களினுட் சென்று எண்ணெய் அழுக்குகளை கரைக்கும். பின்பு துடைத்துக் களையுங்கள். பகலில் பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகியுங்கள். அது எண்ணெய்ப் பற்றுள்ளதன்று. அது சருமத்தை வெயிலும் காற்றும் புழுதியும் படாத படி நிச்சயம் பாதுகாக்கிறது.

உடனேயே பாண்ட்ஸ் க்ரீம் உபயோகிக்கத் தொடங்குங்கள். சொற்ப வாரங்களுள் உங்கள் முகம் மிகவும் மிருதுத்துவம் வாய்ந்து நவயௌவன காந்தியோங்க விளங்கும்.

★ பாண்ட்ஸ் க்ரீம் ★

Your EASTERN BUSINESS

is safe with us. We transact every description of Banking & Exchange business. We offer Special facilities for Collection on Malaya. Promptness & Service are our watchwords.

INDIAN OVERSEAS BANK LTD.

ஹெட் ஆபீஸ் :

மதராஸ்

பிராஞ்சுகள் :

கன்னனூர்	சிங்கப்பூர்
கோயம்புத்தூர்	புதுக்கோட்டை
தேவகோட்டை	ரங்கூன்
காரைக்குடி	சிவகங்கா
குலாலம்பூர்	மேட்டூர் டாம்
பினங்கு	தலைச்சேரி (சப் ஆபீஸ்)

மேல்நாட்டு ஏஜண்டுகள்

தி சேஸ் நேஷனல் பாங்க் ஆப்
தி ஸிடி ஆப் நியூயார்க்
லண்டன் & நியூயார்க்

உங்கள் விலை யுயர்ந்த சாமான்களை
Safe Deposit Vault-இல்
பத்திரப் படுத்துங்கள்

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கு

லிமிடெட்

எஸ்ப்ளனேட் : : மதராஸ்

தந்தி : 'GOODWILL' — தபால் பெட்டி நெ. 113 — டெலிபோன் : நெ. 2724

ஸௌத் இந்தியா கார்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்

80, செம்புதாஸ் தெரு, ஜி.டி. சென்னை

பிராஞ்சுகள் :

கல்கத்தா, காரைக்குடி, கோயமுத்தூர், திருச்சி

எம்மிடம் திரணை, சதுரம், பட்டா, இரும்புத் தகடு, கலாய்த் தகடு, கர்டர், கலாய்ப் பைப்பு, கலாய்க் கம்பி, ஆணி வகைகள், பெயிண்டு, சிமெண்டு முதலிய எல்லா விதமான, இரும்பு சாமான்களும் கட்டிட சாமான்களும் கிடைக் - கும் -

●

சினிமா பிடிப்பதற்கு வேண்டிய 2000 பவர் முதல் 5000 பவர் வரையில் பிரகாசமான பல்புகளும் அதைச் சேர்ந்த லைட் பிட்டிங்குகளும் எலெக்டிரிக் வொயரிங் சாமான்கள், வொயர், பல்பு, விசிறி, எலெக்டிரிக் மோட்டார், பம்பு முதலிய எல்லா எலெக்டிரிக் சாமான்களும் கைவசமிருக்கின்றன.

Sole Distributors for Madras Presidency and States

BLOOD VITA

பிளட் விட்டா என்பது கல்கத்தா மெடிகல் ரிசர்ச் லபாரட்டரியில் டாக்டர் அத்யக்ஷ மாதுர் பாபு என்பவரால் தயாரிக்கப் பட்ட உயர்ந்த இரத்த விருத்தி டானிக்

8 அவுன்ஸ் பாட்டில் விலை ரூ. 1-4-0

ASCU WOOD PRESERVATIVE

ஆஸ்கூ

இது மரப்பலகை, உத்தரம், விட்டம், டெலிபோன், எலெக்டிரிக் கம்பங்கள் முதலிய எல்லாவிதமான மரச் சாமான்களும் உளு, கறையான், மண் இவைகளால் பாதிக்கப் படாமல் இருப்பதற்கென்று, இந்திய சர்க்கார் காட்டு இலாகா ஆபீஸராக இருந்த டாக்டர் காமேசம் அவர்களால் கண்டு பிடிக்கப்பெற்ற, ஒரு ரசாயனப் பொருள். உபயோகப்படுத்தும் முறை இவைகளுக்கு, நேரிலோ, கடிதமெழுதியோ தெரிந்து கொள்ளலாம்.

ஜில்லா ஏஜண்டுகள் தேவை

பிராடியூஸ் டிபார்ட்டுமெண்ட்

நெ. 207, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்

டெலிபோன் நெ. 2991.

கிராம்பு, மிளகாய், பூண்டு, கொத்தமல்லி, சணல், சூடம் முதலிய மளிகை சாமான்கள் மொத்த வியாபாரம்

உங்களுக்குத் தேவையான எல்லா சாமான்களுக்கும் கடிதம் எழுதக் கோருகிறோம்

134194
JL
211, N36, S
M42.6.1

தொடர் கதை:

ஆசிரியர்: சரத்சந்திர சட்டர்ஜி—மொழிபெயர்த்தவர்: ஆர். ஷண்முகசுந்தரம்

காசிநாதன் வேறு ஒன்றும் கேட்காமல், உள்ளே சென்று விட்டான். ஓர் அறையில் திரைக்கு முன்னால் விஜய பாபு நின்றுகொண்டிருப்பதையும் திரைக்குப்பின்னால் நின்றவண்ணம் யாரோ மெதுவான குரலில் பேசிக்கொண்டிருப்பதையும், அவன் கண்டான். அவர்கள் எதைப் பற்றிப் பேசுகிறார்கள் என்பதைக் காசிநாதன் அறிந்து கொண்டான். ஆனால், ஒன்றும் கேட்காமல், அந்தப் பக்கம் திரும்பியே பார்க்காமல், தன் பாட்டுக்கு அவன் சென்றுவிட்டான்.

மத்தியானம் கமலாவை மறுபடியும் காசிநாதன் சந்தித்தான். அவள் கம்பீரமாக, "உடம்பு நன்றாய்த்தானே இருக்கிறது?" என்று கேட்டாள். காசிநாதன் அப்படியே தலையைத் திருப்பிக் கொண்டு, "நன்றாய்த் தான் இருக்கிறது" என்று பதில் அளித்தான்.

கமலா வேறு ஒன்றும் பேசாமல் அகன்றுவிட்டாள். நின்று பேசுவதற்குஅவளுக்கு இப்போது நேரமில்லை. எத்தனையோ வேலைகளிருக்கின்றன; தானே ஜமீன் பொறுப்புக்களை எடுத்துக்கொண்டதால், அவளுக்கு மூச்சுவிடக் கூட ஒழிவில்லை.

ஒருநாள் காலையில் மானேஜரைக் காசிநாதன் அழைத்துவரச் சொன்னான். "இப்பொழுது நேரமில்லை; நேரம் கிடைத்தால் வருகிறேன்" என்று வேலைக்காரனின் மூலமே அவர் சொல்லி அனுப்பி விட்டார். அதன்பேரில் காசிநாதன் தானே கச்சேரிக்குச் சென்று, விஜய பாபுவைத் தனியாக அழைத்து, "உங்களுக்கு நேரமில்லைப்போல் இருக்கிறது. ஆகையால், நானே புறப்பட்டு வந்தேன். இன்று எனக்கு ஐந்நூறு ரூபாய் வேண்டும். ஓய்வு கிடைத்ததும், மேலே அனுப்பிவையுங்கள்" என்றான்.

"எதற்காக வேண்டும்?"

"இது உங்களுக்குத் தெரிய வேண்டிய தில்லை"

"வேண்டிய தில்லைதான். ஆனால், எஜமானியின் உத்திர வில்லாமல் நான் எப்படிக் கொடுக்கமுடியும்?" என்றார் விஜய பாபு.

விஷயம் வேறு மாதிரி யாகிவிட்டது என்று இப்போதுதான் காசிநாதன் தெரிந்து கொண்டான்: "நான் சொன்னாலே போதும். இன்னொருவர் உத்திரவுகூட வேண்டுமா?" என்று கேட்டான்.

விஜய பாபு உறுதியான குரலில், "அல்ல. எதற்குப் பணம் கொடுப்பதையும் எஜமானி தடுத்திருக்கிறார்கள்" என்றார்.

காசிநாதன் இதன்மேல் கமலாவைச் சந்தித்து, "புதிய மானேஜரை விலக்கிவிடு" என்றான்.

"யாரை?"

"புதிதாய் மானேஜர் வேலை பார்ப்பவனை."

"ஏன்? அவர் என்ன குற்றம் செய்தார்?"

"என்னிடம் சரியாய் நடந்து கொள்ளவில்லை"

"என்ன செய்தார்?"

"நான் கூப்பிட்டும் வராமல், வேலைக்காரன் மூலம் நேரமில்லை என்று சொல்லி அனுப்பிவிட்டான்."

கமலா சிரித்துக்கொண்டு, "வாஸ்தவமாகவே நேர மில்லாதிருந்திருக்கும். நேரமில்லா விட்டால் எப்படி வருவது?" என்றாள்.

மனைவியின் முகத்தைப் பார்த்தான் காசிநாதன். "அதுகூடப் பரவாயில்லை. அதன்பின், நானே நேரில் போய்ப் பணம் கேட்டதற்கு, 'எஜமானியின் உத்திரவில்லாமல் கொடுக்கமுடியாது' என்று முகத்தி லடித்தாற்போல் சொல்லி விட்டான்" என்றான்.

கமலா இன்னும் சிரித்துக் கொண்டே, "எத்தனை ரூபாய் கேட்டீர்கள்?" என்றாள்.

"ஐந்நூறு."

"கொடுக்க வில்லையா?"

"இல்லை. எனக்குப் பணம் கொடுக்க வேண்டாம் என்று நீ சொல்லி யிருக்கிறாயா?"

"ஆமாம், இவ்விதம் பணத்தை வீணாகச் செலவழிப்பது எனக்குப் பிடிக்கவில்லை."

காசிநாதன் கல் மனம் படைத்தவன்தான். ஆனாலும், உள்ளுக்குள் ரொம்பத் துக்கப்பட்டான். கமலாவின் இம்மாதிரி நடத்தையையோ அல்லது பேச்சையோ அவன் இதற்குமுன் ஒரு போதும் கண்டதில்லை. இதைக் கண்டதும், மிகுந்த சஞ்சலமடைந்த அவன், "எனக்குக் கொடுப்பது வீண் செலவா?" என்று கேட்டான்.

"கண்டபடி ஊதாரித்தனமாய்ச் செலவழிப்பதற்குத்தான் வீண் செலவு என்று பெயர்.'

"அவசியமான செலவுதான் செய்கிறேன். ஊதாரித்தனமாய்ச் செலவழிக்க வில்லை."

"என்ன அவசியச் செலவு?"

"ஒருவருக்குக் கொடுக்க வேண்டும்."

"கொடுத்துக்கொண்டே யிருந்தால் வாங்குகிற தெங்கே? உங்களிடம் பணம் இருந்தால், கொடுத்துக் கொள்ளுங்கள்—நான் தடுக்கவில்லை."

காசிநாதன் பேசாம லிருந்துவிட்டான். இந்த வார்த்தைகள் அவன் காதில் நாராசம்போல் பாய்ந்தன. அவன் வெளியில் வந்து, தனது கடிகாரம், மோதிரம் முதலியவைகளை யெல்லாம் ஐந்நூறு ரூபாய்க்கு விற்று, வைத்யநாத் நகரத்துக்கு அனுப்பினான். மேலும், கடிதத்துக்கு அடியில், "தங்கையே! இனிப் பணம் கேட்காதே. என்னிடத்தில் இதற்கு மேல் ஒன்றும் கிடையாது" என்றும் எழுதிவிட்டான்!

அன்றிருந்து அவன் உள்ளே செல்லவில்லை; கமலாவும் ஏனென்று கேட்கவில்லை. இவ்விதம் அநேக நாட்கள் சென்றன. ஒருநாள் வேலைக்காரன் வந்து, "உங்களை ஒரு பிராமணன் பார்க்க வேணு மென்கிறார்" என்றான்.

காசிநாதன் ஆச்சரியத்துடன் வெளியே சென்று பார்த்தான். ஒரு கிழப்பிராமணன் தூணருகில் வந்து நின்று கொண்டிருந்தான். "தாங்களோ கீர்த்தி வாய்ந்தவர்கள். பிராமண சொத்தை அபகரிக்காதீர்கள்" என்று திடுதிப்பென்று அவன் புலம்பினான்.

காசிநாதன் பயந்து, "என்ன விஷயம்?" என்று கேட்டான்.

பிராமணன், "தங்களுக்குப் பரமாத்மா சகல பாக்கியமும் கொடுத்திருக்கிறார். ஆனால், என்னிடம் அந்தச் சிறு துண்டு நிலத்தைத் தவிர, வேறு ஒன்றுமில்லை; அதையும் நீங்கள் பிடுங்கிக் கொள்ளாதீர்கள்" என்றான். இதைச் சொல்லிக்கொண்டு வரும்போதே, அவன் கண்ணீர்விடத் தொடங்கினான்.

காசிநாதன் வியாகூலமடைந்து, பிராமணனின் கையைப் பிடித்து, அவனைத் தன்னருகில் உட்கார வைத்துக்கொண்டான். "எல்லா விஷயத்தையும் விவரமாகச் சொல்லுங்கள்" என்றான்.

பிராமணன் அழுதுகொண்டே, "நீங்கள் தர்மப்பிரபு. பூமி என்னுடைய தல்ல என்று உங்கள் வாயால் சத்தியம் செய்தால் போதும்; நிலத்தை விட்டு விடுகிறேன்" என்றான்.

"உங்களுடைய தல்ல என்று யார் சொல்லுகிறார்கள்?"

"இல்லையானால், பின்னே ஏன் விஜய பாபு—உங்களுடைய புதிய மானேஜர்—என் பேரில் வியாஜ்யம் தொடுத்திருக்கிறார்?"

"வியாஜ்யம் தொடுத்திருக்கிறாரா? அது எனக்குத் தெரியாது."

பிராமணன் தனக்கு வந்த சம்மனைக் காட்டி, "எப்போது வழக்குத் தொடுத்தாயிற்றோ, அப்போது நானும் எதிர் வழக்காட வேண்டியதுதான். உங்களையே சாட்சி போடப் போகிறேன். எனக்கு வேறே சாட்சி கிடையாது. நான் ஏழை; தங்களோடு வழக்காடுவது எனக்கு நல்ல தல்ல. என்றாலும் கூட, நான் ஒரு பிச்சைக்காரனாயிருந்தாலும், வந்த வழக்கை நடத்தாமல் விடமாட்டேன்" என்று சொல்லி, வெளியே புறப்பட்டான்.

பிராமணன் கோபத்தோடு, போவதைப் பார்த்த காசிநாதன், அவனுடைய கைகளை பிடித்து உட்கார வைத்து, "உங்களுக்குச் சாதகமான வழியில் சமாதானத்துக்கு நான் முயற்சிக்கிறேன். அது பயன்படாவிட்டால், பிறகு உங்களிஷ்டம் போல் செய்யுங்கள்?" என்றான்.

பிராமணனுக்குக் காசிநாதன் விடை கொடுத்தனுப்பி விட்டு, விஜய பாபுவைக் கூப்பிட்டு, "அந்த நிலம் நம்முடைய தல்ல; அப்படி யிருக்க பிராம்மணனை ஏன் வீணைத் தொந்திரவு செய்கிறீர்?" என்று கேட்டான்.

"அது எஜமானியின் உத்திரவு."

காசிநாதன் கோபமுற்று, "எஜமானி என்ன பிறர் பொருளைப் பிடுங்கிக் கொள்ளவா உத்திரவிட்டாள்?" என்றான்.

"நிலம் நமக்குச் சொந்தம்."

"இல்லை; நம்முடைய தல்ல."

விஜய பாபு சிறிது நேரம் பேசாமலிருந்தான்; பிறகு "நான் வேலைக்காரன். உத்திரவுப்படி செய்தேன்; இன்னும் செய்வேன்" என்றான்.

இந்த விஷயத்தைக் கமலாவிடம் சொல்ல, காசிநாதனுக்கு வெட்கமாயிருந்தது. ஆனாலும், அவன், வெட்கத்தை விட்டு, அவளிடம் சென்று, "அந்த நிலம் உன்னுடைய தல்ல. பிரம்ம சொத்தைப் பிடுங்கிக் கொள்ளாதே" என்றான்.

"நான் அதை அபகரிக்கிறேன் என்று யார் சொன்னது?"

"யாரோ சொன்னார்கள்; யாராயிருந்தா லென்ன? அந்த நிலம் உன்னுடைய தல்ல; அவ்வளவுதானே. ஆகையால், பொய் வழக்குத் தொடுக்க வேண்டா மென்று விஜய பாபுவைத் தடுத்துவிடு."

கமலா சலிப்புடன், "விஜயபாபு நம் முடைய வேலைக்காரர். தமது வேலை என்ன வென்று அவருக்குத் தெரியும். அவருடைய காரியத்தில் நீங்கள் குறுக்கிட வேண்டியதில்லை" என்றாள்.

பல நாட்களுக்குப் பிறகு, அந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. சாட்சிக் கூண்டில் நின்று கொண்டு, காசிநாதன், "காலஞ்சென்ற என் மாமனார் பிரிய பாபுவின் காலத்திலிருந்து ஜமீன் காரியங்களை நான் பார்த்து வந்திருக்கிறேன். அவருக்குப் பிறகுகூட நான் வெகுகாலம் நிர்வாகம் செய்திருக்கிறேன்—அந்த நிலம் கமலாதேவி யுடையது அல்ல என்பது எனக்குத் தெரியும்" என்றான்.

தங்களுடைய வழக்கு தோல்வி அடைந்த வருத்தத்துடன், விஜய பாபு வீடு திரும்பினார். பிரதிவாதிப் பிராம்மணன் தன் இரு கைகளையும் தூக்கி, காசிநாதனை ஆசீர்வாதம் செய்துவிட்டு, தனது வீட்டுக்குச் சென்றான்.

அத்தியாயம் 9

திரைக்கு எதிரில் நின்றபடி, வழக்கு விவரங்களை, தமது சொந்த அபிப்பிராயங்களையும் கலந்து, எஜமானிக்கு விஜய பாபு வியாக்கியானம் செய்யலானார்: "சின்ன எஜமானரால்தான் நமது வழக்கு தோல்வி அடைந்தது" என்று அவர் திட்டமாய்க் கூறினார். இதனால் திரைக்குள்ளே யிருந்த தாமரைக் கண்கள் அகன்று மலர்ந்தன. வெகு நேரத்துக்கப்புறம் "நீங்கள் உள்ளே வாருங்கள்; எவ்வளவோ பேச வேண்டியிருக்கிறது" என்று அவரைக் கமலா அழைத்தாள். விஜய பாபுவும் அப்படியே உள்ளே சென்றார். இரண்டு பேரும் வெகு நேரம் வரையில் மிக மெதுவாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

பிறகு, விஜயபாபு வெளியே வந்து விட்டார்.

அநேக நாளைக் கப்புறம், காசிநாதன் இன்று தினம் சாப்பிடும் போது, அவன் அருகில் வந்து கமலா உட்கார்ந்தாள். இப்பொழுது, அவள் முன்போல உக்கிரத்துடன் இருக்கவில்லை. பூரண சாந்தத்துடனும் அமைதியுடனும் இருந்தாள். கொஞ்சநேரம் கழிந்த பிறகு, கமலா மெல்ல, "உள் ரகசியம் அறிந்த விபீஷணனால் தான் சொர்ண மயமான லங்காபுரி சாம்பலாயிற்று—உங்களுக்குத் தெரியுமா?" என்றாள்.

காசிநாதன் சாப்பிட்டுக் கொண்டே, "தெரியும்" என்றான்.

"தெரியாம லிருக்குமா? அவனும் மற்றவர்களின் அன்னத்தினால்தான் ஆளானான்" என்றாள் கமலா.

காசிநாதன் ஒன்றும் பேசவில்லை.

கமலா சிறிது நேரம் வரையில் பேசாம லிருந்துவிட்டு, "பிறரது சோற்றை உண்டு இவ்வளவு பெரியவர் ஆனவருக்கு—இப்பொழுதுகூட அங்கியர் இடும் உணவு இல்லாவிட்டால் பட்டினி கிடக்க வேண்டியவருக்கு—உண்மை பேசும் விருப்பம் எதற்கு? இத்தனை கர்வம் எதற்கு? இதுதான் என் சந்தேகம்" என்றாள்.

காசிநாதன் பேசாமல் ஒவ்வொரு கவளமாக எடுத்து வாயில் போட்டுக் கொண்டிருந்தான்.

"கசாப்புக்காரன்கூட, உண விட்டவன் கழுத்தில் கத்திவைக்க, கொஞ்சம் யோசிப்பான்."

"கமலா!"

"தம்முடைய பெண்டாட்டியின் அன்னத்தால் வாழ்கிறவருக்கு இத்தனை வீர தீரம் வேண்டியதில்லை. தினம் தினம் உங்களுடைய இந்த நடத்தைகளை எல்லாம் நான் பார்க்காதிருந்தால்—"

காசிநாதன் சிரித்துக்கொண்டு, "என்னை வீட்டை விட்டுத் துரத்துகிறாயா?" என்று கேட்டான்.

"ஆம்; அப்படித்தான் செய்கிறேன்" என்று திடமாய்க் கூறினாள் கமலா.

தான் சாப்பிட்டுக் கொண்டிருந்த தட்டைத் தள்ளி வைத்து விட்டு, கமலாவின் முகத்தை உற்றுப் பார்த்த காசிநாதன், "கமலா! நான் ஒருபோதும் உன்னிடத்தில் கோப மடைந்த தில்லை; ஒரு போதும் உன்னிடம் கடுமையான வார்த்தைகளையும் சொன்ன தில்லை; நீ சொல்கிறதுபோல, இதற்கு முந்தி யாரும் என்னிடம் இம்மாதிரி சொன்ன தில்லை. இன்றிருந்து நான் உன்னுடைய சாப்பாட்டைச் சாப்பிடுவ தில்லை. இதனால் நீ சுகமடைய முடியுமானல், மகராஜியாய்ச் சுகப்படு" என்று சொல்லிவிட்டு, எழுந்து நின்று கொண்டான்.

கமலாவும் கர்வத்துடன் நின்று கொண்டு, "உண்மை பேசுகிறவரானால், தமது சபதத்தை நிறைவேற்ற வேண்டும்" என்றாள்.

"அவசியம் நிறைவேற்றுவேன். நீ சொன்ன வார்த்தைகளே உன் ஜன்ம சத்துருவா யிருக்கும். நான் உன்னை மன்னித்து விட்டேன். ஆனல், ஆண்டவன் உன்னை மன்னிப்பானு?"

கமலா இன்னும் அதிகக் கோப மடைந்தாள். "உமது சாபம் என்னை ஒன்றும் செய்து விடாது" என்றாள்.

"அப்படியே போகட்டும். எல்லாம் கடவுளுக்குத் தெரியும். உனக்கு நான் சாபம் கொடுக்கவில்லை. தர்மத்தை அனுசரித்து நீ சுகமா யிரு என்றே ஆசீர்வதிக்கிறேன்" என்று சொல்லி, காசிநாதன் வெளியேறினன்.

வெளியில் வந்ததும், தன் வியாகரணம், சாகித்யம், தர்சன், ஸ்மிருதி முதலிய எல்லாப் புத்தகங்களையும் ஒவ்வொன்ருக அவன் கிழித்தெறிந்தான்; தன்னிடம் இருந்த பண்டங்களை எல்லாம் வேலைக்காரர்களுக்குப் பகிர்ந்தளித்தான். அப்புறம் ராத்திரியானதும், கமலாவின் அறைக் கதவைத் தட்டிக் கூப்பிட்டான். கமலா விழித்துக் கொண்டுதா னிருந்தாள். ஆனல், அவள் பேசவில்லை. கதவு திறந்துதா னிருந்தது. காசிநாதன் உள்ளே பிரவேசித்தான். கமலா கண்ணை மூடிக்கொண்டு கட்டிலின் மேல் படுத்திருப்பதைக் கண்டான். அருகில்சென்று நெற்றியின் மேல் கை வைத்து "கமலா" என்று மறுபடியும் அழைத்தான். ஒரு பதிலும் இல்லை. "போகிறபோது மீண்டும் உன்னை ஆசீர்வதித்து விட்டுப் போகிறேன்" என்று சொல்லி, பேசாமல் வெளியில் வந்தான். காசிநாதன் சென்ற பிறகு, கமலா படுக்கையிலிருந்து எழுந்து ஜன்னலருகில் போய் உட்கார்ந்தாள். உட்கார்ந்தவளுக்குப் பொழுது விடிந்ததே தெரியவில்லை. அவள் மறுபடியும் விரிப்பில் வந்து படுத்துக்கொண்டாள். மீண்டும் விழித்துக் கொண்ட போது, பொழுது கிளம்பி யிருந்தது; வீட்டில் ஒரே கலவரமா யிருந்தது. அவள் நன்கு விழிப்படைய வில்லை; அதற்குள் ஒரு வேலைக்காரி ஓடிவந்து, "அம்மா! என்ன ஆபத்து வந்து விட்டது! சின்ன எஜமானரை யாரோ கொலை செய்து விட்டார்களே!" என்று பரபரப்புடன் புலம்பினள்.

கொதிக்கும் எண்ணெயைக் கொணர்ந்து யாராவது தன் மேலே கொட்டினல் எப்படித் துள்ளுவார்களோ, அப்படியே கமலாவும் துள்ளி எழுந்தாள். கீழே ஓடிவந்து, "கொன்றுவிட்டார்களா? சின்ன எஜமானரையா?" என்று துடி துடிப்புடன் கேட்டாள்.

"ஆம்" என்று யாரோ பதில் அளித்தார்கள்.

(தொடரும்)

ஆசை வலை

வண்ணத்திப் புழு, தான் கட்டும் கூண்டுக்குள்ளேயே சிக்கிக் கொள்கிறது. அதேபோல, உலகப்பற்றுள்ள ஆத்மா தனது ஆசைகளாகிய வலையில் சிக்கிக்கொள்கிறது. ஆனல், அந்தப் புழு ஓர் அழகிய வண்ணத்திப் பூச்சியாகப் பரிணமிக்கும்போது, கூட்டை உடைத்துக்கொண்டு வெளியே வந்து வெளிச்சத்தையும் காற்றையும் ஆனந்தமாய் அனுபவிக்கிறது. அதைப்போலவே, உலகப்பற்றில் உழலும் ஆத்மாவும், விவேகம், வைராக்கியம் என்ற இரண்டு சிறகுகளால், மாயையாகிய வலையைக் கிழித்துக்கொண்டு வெளிப்படக்கூடும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

பிரஞ்சுக் கதை மொழி பெயர்ப்பு:

காதல் கன்னிகை

[வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.]

அவன் கலைஞன். அவள் ஒரு மௌனக் கவி. இயற்கையின் மனமோகன வனப்பில், இருவர் ஆத்மாவும் சந்திக்கிறது. ஆனால், அவன்தான் ஒரு தேனீயாயிற்றே. மலருக்கு மலர் தாவி மதுவில் மயங்குவதல்லவா அது? முடிவு என்ன? எப்பொழுதும் போலத்தான்! ‘குருவி’ பறந்து விடுகிறது.

என்னுடைய இருபத்தைந்தாவது வயதில், நான் எங்கும் அலைந்து, இயற்கையின் இன்பங்களைக் கண்டு, ஓவியங்கள் தீட்டுவதற்காக, சித்திரக் கருவிகளுடன் சுற்றித் திரிவேன். சித்திரக் கலைக்கு வேண்டிய சாமான்கள் அடங்கிய ஒரு பையை முதுகில் தொங்கவிட்டுக் கொண்டு, இப்படி அலைவதில் எனக்கு ஓர் ஆனந்தம். இன்றைய இன்பத்தில் மூழ்குவேன்; நாளை என்ன வருமென்று சிந்திக்கவே மாட்டேன். எந்தத் துணையுமின்றி, கண்டதே காட்சி, கொண்டதே கோலமாய் அலைவேன்—மனம் போனபடியெல்லாம்! கிராமத்தில் உள்ள பெண்கள் இயற்கை எழில் நிறைந்தவர்கள்; அவர்களைக் கண்டு நான் மோஹிப்பதுண்டு. இது உண்மை. என்னைக் கண்டால், அவர்களுடைய இதயமுந்தான் இன்பத்தால் துடிக்கும்; நான் பிரிந்தால், வருத்த மிகுந்து அவர்களுடைய கண் துடித்து நீர் துளிக்கும்.

கிராம வாழ்க்கையில், இயற்கையே என்னுடைய காதலியாக மாறி விடுகிறாள். சூரியனும் சந்திரனும் காடும் அந்திமாலையும் என் மனதை மயக்கி விடுகின்றன. காட்டு மரத்தின் அடியில் ஓர் ஊற்றின் தெள்ளிய நீரைக் குடிக்கும்போது, எவ்வளவு அமைதி! எவ்வளவு இனிமை! ஸ்படிகம் போன்ற ஊற்றில் நமது தாடியும் மூக்கும் நனைந்து வெளிவரும்போது, அடடா! என்ன பேரின்பம்! சூரியன் அஸ்தமிக்கும்போது, மேகங்களை ரத்தத்தில் மூழ்கடித்து, ரத்தச்சுடர்களை ஆற்றின் இதயத்தில் வாரிக் கொட்டி, என்ன அற்புதச் சித்திரம் தீட்டித் தருகிறது! இரவின் அமைதியில், தாவள்யமான நிலவின் கீழ், எவ்வளவு அருமையான சிந்தனைகள் பகலைத் தாண்டி உதயமாகின்றன!

நான் ஒரு தடவை மலை நிறைந்ததொரு கிராமத்துக்குச் சென்றேன். அந்த மலை வெண்ணிறம் கொண்டு, நன்குயர்ந்து, செங்குத்தாக, கடலின் ஆழத்தில் பாதம் பாய்ந்திருந்தது. காலையில் பட்டுப் போன்ற இளம்புல்லின் மேல் நடந்தேன். இன்ப உச்சியில், பாடவும் ஆரம்பித்துவிட்டேன். அரைநாள் சுற்றிவிட்டு, கிராமத்தில் பிரயாணிகள் தங்குமிடத்துக்குப் போனேன். அங்கே லெகாஷியூர் என்பவளுடைய ஜாகையில், ஓர் இடம் வாடகைக்குக் கிடைத்தது. ஆனால், அதில் ஏற்கனவே பல பிரயாணிகள் தங்கியிருந்ததால், மிகுந்த சிரமத்துடன், இருண்டு புகை படிந்த சமையல் அறைக்குப் பக்கத்தில்தான், எனக்கு இடம் கிடைத்தது.

வீட்டுக்காரியைப் பார்த்து; நான் கேட்டேன்: “இங்கே பிரயாணிகள் அதிகமா, என்ன?”

சினந்த முகத்துடன் அவள் சொன்னாள்: “உன் அறைக்குப் பக்கத்து அறையில், மலர்ந்த முகமுடைய ஓர் ஆங்கிலப் பெண் இருக்கிறாள்.”

கூடக் கொஞ்சம் பணம் கொடுத்து, திறந்த முற்றத்தில் தனிமையில் எனக்கு உணவளிக்கும்படி ஏற்பாடு செய்துகொண்டேன். பழைய ரொட்டியும் கோழிக்குஞ்சு சூப்பும், தனியாக அருந்தினேன். அப்போது, மரக் கதவைத் திறந்துகொண்டு, ஒரு புதுமைப் பெண் வந்தாள்: நல்ல உயரம்; சன்னக் கம்பி போன்ற உடல்; கம்பளி போர்த்த மேனி; உயரத்தால், கையில்லாமல் நடப்பதுபோல் தோன்றினாள். ஆனால், அவளுடைய நெடிய கையில், வெள்ளைக் குடையொன்று முதுகுப் பக்கம் தொங்கியது. அவளது வெண்மையான தலை மயிர், முகத்தைச் சுற்றி வெண்கிரணங்கள் போல் அலைந்து கொண்டிருந்தது.

நான் முன் ஒரு நாள் இயற்கைப் படம் வரைந்து வர்ணம் இழைத்துக் கொண்டிருந்தபோது, மலையின் உயரத்தில் ஓர் உருவம் தெரிந்தது; ஒரு நீண்ட கம்பத்தில் பறந்து கொண்டிருந்த கொடி போல் அது தோன்றிற்று. இந்தப் பெண்ணின் உருவமே அது என்று இப்போது கண்டேன். இவளே அந்த ஆங்கில மாது மிஸ் ஹாரியட். மறுநாள், ஜாகையில், பொது மேஜையில், மற்றவர்களுடன் நான் உணவெடுத்துக் கொண்டபோது, இந்தப் பெண் என் அருகிலிருந்தாள். தண்ணீரும் தட்டும், அடிக்கடி, மேஜையின் மேல் அவளுக்கு உதவியாக நான் அளித்தேன். அவள் எனக்கு நன்றியளிப்பதாக ஏதோ முணுமுணுத்தாள்; ஆனால், எனக்கு அவன் சொன்ன ஒன்றும் புரியவில்லை.

அடுத்த மூன்று தினங்களில், நான் அந்தப் பெண்ணைப் பற்றி நிறைந்த விவரங்களைத் தெரிந்து கொண்டேன். ஆறு மாதங்களாக இந்தக் கிராமத்தில் அவள் தங்கியிருக்கிறாளாம். மேஜையில் யாருடனும் பேசுவதில்லை; வேகமாய்த் தின்பாள்; புராட்டஸ்டன்ட் மதப் பிரசார நூல் ஒன்றை ஸதா படித்துக் கொண்டிருப்பாள்; அந்தச் சிறு நூலின் பிரதிகளைப் பலருக்கும் தானம் கொடுப்பாள்; தான் ஏசுநாதரை நம்புவதாகவும் நேசிப்பதாகவும் இயற்கையின் விளக்கத்தில் அவரையே காண்பதாகவும் தன் இதயத்தில் ஏசுநாதரையே வைத்திருப்பதாகவும், வீட்டுக்காரி லெகாஷியூரிடம் இவள் சொல்லிக் கொண்டிருப்பாள். ஹாரியட் தன் கிராமத்தை விட்டுத் துரத்தப் பட்டவள். ‘அவள் கடவுளை நம்பாதவள்’ என்று பள்ளிக்கூட உபாத்தியாயினி ஒருத்தி சொன்னதை நம்பி, கிராமத்தில் எல்லாரும் சந்தேகப்பட்டு, அவளைச் சமூகத்தை விட்டும் ஊரை விட்டும் வெளியேற்றி விட்டார்களாம். அவள் அன்று முதல் உலக முழுதும் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டு விட்டாள். இப்படிப்பட்ட ஆங்கிலப் பெண்கள், தங்களுடைய அலங்காரங்களுடன் உலகத்திலுள்ள பல ஹோட்டல்களிலும் தங்கி, ஒய்யாரமாய்ப் பிறர் மனதைக் கலங்கவைக்கும் வண்ணம் அழகுபடுத்திக் கொண்டு மினுக்கு

இவ்வருட - - அபிவிருத்தியின் புள்ளி விவரங்கள்:

- புதிய பாலிஸிகள் சுமார்
  ரூ. 3,00,00,000
- அமுலிலிருக்கும் பாலிஸிகள்
  ரூ. 18,16,00,000 க்குமேல்
- க்ஷேம நிதி
  ரூ. 3,57,00,000 ,,
- மொத்த சொத்துகள்
  ரூ. 4,05,00,000 ,,
- கொடுபட்ட உரிமைத் தொகை
  ரூ. 2,25,00,000 ,,

நம்பிக்கையான சேவையினலே பிரக்யாதி வாய்ந்தது

ஹிந்துஸ்தான்
கோவாப்பரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் சொஸைட்டி லிமிடெட்

ஹெட் ஆபீஸ்:
“ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்”
6-ஏ, சுரேந்திரநாத் பானர்ஜி ரோடு, கல்கத்தா

சென்னை பிராஞ்சு:
“ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்”
107, அரண்மனைக்காரத் தெரு, சென்னை

‘டோவர்’ ரேடியோக்கள்
(பிரிட்டிஷ் மேக்)



5 VALVES
MODEL 'DOVER'
3 WAVE BANDS
Rs. 230/-

நீங்கள் ஏன் ‘டோவர்’ ரேடியோவையே வாங்கவேண்டும்?

உயர்தரமான வேலைப்பாடுகளுடன் கூடியவை. —‘முல்லார்ட்’ வால்வுகள் பிட்டப் செய்யப்பட்டுள்ளவை.

அழகும் வனப்பும் வாய்ந்தவை.

குறைந்த விலை உள்ளவை.

A. C மெயின்களிலும் 6 வால்ட் பேட்டரிகளிலும் வேலை செய்யப்படுபவை—‘WINDSOR’

சிக்கன முடையவர்களுக்குக் குறைந்த விலை மாடல்கள்—‘DOVER’

மீட்டர்கள் 16 to 65—60 to 115—195 to 550.



5 VALVES MODEL 'DOVER' IN WOODEN CABINET
3 WAVE BANDS Rs. 270/-

Stockists & Sole Distributors for
Madras Presidency including Native States :—

‘ஜயபோன் கம்பெனி’
1—8, பிராட்வே, — மதராஸ்

புத்தகங்கள்

சக்தி மலர்கள்

இனி நாம் செய்ய வேண்டுவது யாது ? ரூ. 1 0

இந்நூல் மஹாத்மா காந்தியடிகள் தமது குருவெனப் போற்றும் ருஷ்யப் பெரியார் லியோ டால்ஸ்டாய் எழுதிய 'What then must we do?' என்னும் அரிய நூலின் இனிய மொழிபெயர்ப்பு. இரண்டாம் பதிப்பு.

கமலா முதலிய சிறு கதைகள் ரூ. 1 0

இப்புத்தகத்தில் அடங்கியுள்ள கதைகளில் தமிழ்ப் பண்பு வீசுகிறது. இலக்கிய ரஸிகர்களுக்கு நல்விருந்து. ஆர். திருஞானசம்பந்தம் எழுதியது. ('ஹிந்துஸ்தான்' — உதவி ஆசிரியர்)

ஜப்பான் ரூ. 1 0

'உலகஞ் சுற்றும் தமிழன்' ஆசிரியர் திரு. ஏ. கே. செட்டியார் தமது ஜப்பான் யாத்திரையில் தாம் நேரில் கண்டவைகளை இதில் விவரமாய் எழுதியுள்ளார். இரண்டாம் பதிப்பு.

கல்வி ரூ. 0 12

'ஒழுக்கம் அளிப்பது, மனோவலிமை தருவது, புத்தியை விசாலிக்கச் செய்வது, தன் வலிவைக் கொண்டு தன்னம்பிக்கையுடனிருக்கச் செய்வது — கல்வி': ஸ்வாமி விவேகாநந்தர் அருளிய பல அரிய கருத்துக்கள் இந்நூலில் அடங்கியுள்ளன.

தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரகம் ரூ. 1 0

உலகத்தில் நல்லதுள்ள தத்தனைக்கும் உறைவிடமாய், தேசபக்தர்களுக்கும், தெய்வ பக்தர்களுக்கும் சுடர்விளக்கெனத் தோன்றும் காந்தியடிகளால் எழுதப்பெற்ற 'தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரகம்' என்பதின் தமிழ் மொழிபெயர்ப்பு.

சிந்தனையும் மின்னொளியும் ரூ. 0 10

ஸ்ரீ அரவிந்த முனிவர், தமது உயர் சிந்தனையிலும் ஆத்மானுபவத்திலும் மின்னொளி போன்று உதித்த சீரிய கருத்துக்களைப் பொன்னே போன்ற எழுத்துக்களால் பொறித்துள்ளார். உலகு, உயிர், இறைவன் ஆகியவற்றின் தத்துவ ஞானமெல்லாமே இந்நூலின்கண் சாரமாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டிருக்கிறது.

பாரத நாட்டின் முப்பெருந் தலைவர் ரூ. 0 10

இந்நூலில் மூன்று கட்டுரைகள் அடங்கியுள்ளன—பங்கிம் சந்திரர், தயானந்தர், பாலகங்காதர திலகர். நமது நாட்டிற்கு இவர்கள் செய்த ஒப்பற்ற சேவையை இப்புத்தகத்தில் காணலாம்.

ஜவாஹர்லால் நேருவின் கடிதங்கள் ரூ. 1 8

அரசியல் உலகத்தில் இன்று இந்தியாவில் ஸ்ரீ ஜவாஹர்லால் நேருவைத் தெரியாதவர் எவரும் இல்லை. அவருடைய தூய வாழ்வும், தன்னலமற்ற தியாகமும், பெருந்தன்மையும் உலக முழுவதும் பாராட்டும் சிறப்பை உடையன. அவர் தம் செல்வ மகளாகிய ஸ்ரீமதி இந்திரா நேருவுக்கு எழுதிய கடிதங்கள் உலகத்திலுள்ள அனைவருக்கும் பயனளிக்கும். பூவுலகத்தின் இளம்பருவத்தை அழகாக முப்பத்தோரு கடிதங்களில் தொடர்ச்சியாக எடுத்துரைக்கிறார்.

குரு கோவிந்த சிங்கன் ரூ. 0 4

(சீக்கியர்களின் வீரத்தலைவர்.)

கீதா போதனை ரூ. 0 2

மகாத்மா காந்தி அருளியது. மொழிபெயர்ப்பு.

ஆறடி நிலம் ரூ. 0 4

ருஷ்ய ஞானி லியோ டால்ஸ்டாய் எழுதியதின் மொழிபெயர்ப்பு.

மது விலக்கு மங்கை ரூ. 0 8

அமெரிக்கன் நாவலாசிரியர் அப்டன் ஸிங்களேர் எழுதிய "வெட்பரேட்" என்னும் நூலைத் தழுவியது.

கண்ணன்—என் கவி ரூ. 0 8

பாரதியின் கவிதையைப் பற்றி சில கருத்துக்களைத் தொகுத்து சில தலைப்புகளின் கீழ் சுருக்கமாக விளக்கியும், பாரதியின் கவிதைக் கொள்கையை, ஷெல்லி, தாகூர் முதலியவர்களின் கவிதைக் கொள்கையுடன் ஒப்பிட்டு பாரதியார் மகாகவிதான் என்பதைக் கூடிய மட்டும் அவருடைய எழுத்துக்களி லிருந்தே எடுத்துக் காட்டியுள்ள நூல்.

கலைஞன் தியாகம் ரூ. 1 8

நடை அழகிலும், கதை ஒட்டத்திலும், இயற்கையான வர்ணனையிலும், அபூர்வமான சித்திரத்திலும் சிறந்தது. கதைகள் யாவும் கற்பனைத்திறன் வாய்ந்தவை.

சக்தி காரியாலயம், ஜி. டி., சென்னை

வதை யாரும் கண்டிருக்கலாம். இந்தப் பெண்களைக் கண்டால், இவர்களது வலையில் சிக்காமல் நான் ஓடி ஒளிந்து விடுவது வழக்கம்.

ஆனல், இந்த ஹாரியட் என் மனதைக் கவர்ந்து விட்டாள். நான் இவளுடைய அழகைக் கண்டேன்; வீட்டுக்காரி லெகாஷியூரோ, இவளைப் பிசாசு என்று கருதினள். ஹாரியட் ஒருநாள் கால் ஒடிந்த தவளை யொன்றை எடுத்துவந்து தொட்டியில் நனைத்துக் கழுவி, அதனுடைய ரணத்துக்கு மருந்திட்டுக் கட்டியது, லெகாஷியூருக்கு ஆச்சரிய மாக இருந்தது; ஏதோ மனிதனுக்கு வைத்தியம் செய்வதுபோல், ஒரு சிறு ஜந்துவுக்கு இவ்வளவு கவனித்து இவள் சிகிச்சை செய்தது எல்லாருக்குமே தான் அதிசயமாயிருந்தது. மறுபடி ஒரு சந்தர்ப்பத்தில், கடற்கரையில், ஒரு மீனை விலைக்கு வாங்கிய ஹாரியட், வெகு சிரத்தையோடு அதைத் தண்ணீரில் கொண்டுபோய் எறிந்து விட்டாள்! இந்த விநோத குணமுள்ள ஹாரியட்டைக் கண்டு, குதிரைக்காரப் பையன் சொன்னன்: "இவள், வாழ்க்கையை நன்ருய் அனுபவித்துவிட்டு வந்த கிழவியாக்கும்."

ஒரு நாள் நான் ஒரு புதரடியில் அமர்ந்து, செடியின் இலைகளை விலக்கிப் பார்த்துக் கொண்டிருந்த போது, ஹாரியட் அங்கே முழங்காலிட்டுப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்ததைக் கண்டேன். என்னைப் பார்த்ததும், அவள் எழுந்தாள். பகலில் சுழலும் ஆந்தைக் கண்கள்போல், தன்னுடைய பயந்த கண்களை என்மேல் வீசினள்.

சில சமயங்களில், மலையின் சிகரத்திலும் சமவெளிப் பசுமையிலும், வயலிலும் வரப்பிலும், இயற்கையின் சௌந்தரியத்தை அவள் பருகிக் கொண்டிருப்பாள். திரும்பிப் பார்த்தால், தீபஸ்தம்பம் போல மின்னிக்கொண்டு நிற்பாள். சூரிய ஜோதியின் விந்தையும் தங்க வர்ணத்தில் தோய்ந்து கிடக்கும் எல்லையற்ற வானத்தின் வனப்பும், அவளுடைய இதயத்தைக் கொள்ளை கொண்டன. சில சமயங்களில், இலந்தை மரத்தின் நிழலில், சமய நூல் ஒன்றை, இன்பமாய், அழகாய்ப் படித்துக் கொண்டிருப்பாள். மண்ணில் மலர்ந்து மணக்கும் கவிதையில் நானும் ஈடுபட்டவன்தான். ஆதலால், இப்படி அலையும் இந்த ஆங்கில நங்கையின் இதய அரங்கத்தில் இசைத்துக்கொண்டிருக்கும் ரகஸ்யங்களை யறிய, ஆர்வங் கொண்டேன்.

நான் ஓர் இயற்கைப் படம் எழுதினேன். எனது சித்திரத் திரையில், வலது பக்க முழுதும் ஒரு பாறை நிமிர்ந்து நின்றது. கடலின் அலைகள் பல வர்ணங்களுடன் அதை மின்னி மோதின. சிவப்பும் மஞ்சளும் பழுப்புமாய்ப் பலவித வர்ணங்கள் அதிலே பரவிக் கிடந்தன. சூரியன், தனது ஒளித்திரளை, எண்ணெயாருக அதன் மீது பொழிந்துகொண்டிருந்தான். இதுதான் எனது திரைச் சித்திரம். இதிலே இயற்கை மண்டிக் கிடந்தது. பதினைந்து வருஷங்கள் கழித்து, எனது இந்த வர்ணப் படத்துக்குப் பதினயிரம் பிரான்கள் பரிசு கிடைத்தது. தங்கியிருந்த ஜாகைக்கு இந்தப் படத்தைக் கொண்டுபோய், வீட்டுக்காரி லெகாஷியூரிடம் காட்டினேன். அவளுடைய மண்டுக் கண்களுக்கு, ஒன்றும் புலனகவில்லை. அதே சமயம், ஹாரியட் கவனித்து, படத்தைப் பார்த்து ஆனந்தமடைந்து, தன் இதயத்தையே அதன் இயற்கை எழிலில் பறிகொடுத்துச் சொக்கி நின்ருள்; என் படத்தில் உள்ள பாறை, தினமும் ஹாரியட் போய்க் கனவு காணும் அருமையான அதே பாறையல்லவா! உடனே, மிக அன்போடு ஹாரியட் "ஆஹா! இயற்கையை, உயிர் நிறைந்த தொரு வஸ்துவாக நீ உணர்ந்திருக்கிருய்!" என்று என்னிடம் சொன்னள். எனக்கு உடனே உச்சி குளிர்ந்தது; அவளுடைய இன்பப் பேச்சில், எனது இதயத்தைப் பறிகொடுத்தேன்; பெண்ணின் புகழ்ச்சியில், என் திறமையெல்லாம் தோற்றது போலத் தோன்றியது. எனது இன்ப முதிர்ச்சியில், அவளைத் தழுவிக்கொள்ள எண்ணங் கொண்டேன்; என் இருதயத்தில், காதல் புயலும் அடிக்கத் தொடங்கி விட்டது.

அவள் வழக்கமாய்ப் போகும் மலைக்கு மறுநாள் நான் போன போது, அவளும் என்னுடன் கூட வந்தாள். அந்தி நேரம். சூரியன் மறையும் தருணம். கப்பல் ஒன்று சமீபத்தில் தன் குழாயின் வழியாய்ப் புகை கக்கியது. அந்தப் புகை மேக மண்டலத்தை மண்டியது. சூரியன், தன் பல வர்ண ஒளிக்கதிர்களை மேகத்தின் மேல் விந்தையாக வீசிக்கொண்டு மறையும் போது, இயற்கை உலக எழிலை யெல்லாம் பருகுபவள் போல், அசைவற்று ஆழ்ந்த சிந்தனையுடன் ஹாரியட் நின்ருள்— கற்சிலையைப் போல. இயற்கையின் இதயத்தில் ஒன்றி, உள்ளம் பூரித்தாள். வானையும் கடலையும் அணைய, அவள் ஆவல் கொண்டாள்; "நான் காதலிக்கிறேன், காதலிக்கிறேன்" என்று, இயற்கையின் மனமோகன வனப்பில் பதுங்கிக் கதறினள். நான் எப்படித் திரையில் படம் எழுதுகிறேன் என்று பார்க்க ஆவல் கொண்டாள். அப்போது ஒரு கணம் என் பின் நின்று, எனது சித்திரக்கோலால் ஓவிய விந்தைகளை நான் எப்படி எழுப்புகிறேன் என்று கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருப்பாள்; மறு கணம் திடீர் என்று மறைந்துவிடுவாள். சித்திரக் கலையைப்பற்றி நான் அவளுடன் பேசும்போது, அதையறிந்தவள் போல், ஓர் இன்ப ஜ்வரத்துடன் அவள் கூச்சலிடுவவாள்.

இன்னெரு நாள், நான் ஒரு காதல் சித்திரம் வரைந்தேன். காதலன் காதலி இருவரும், இதயங் கலந்த நிலையில், கைகோத்த இணைப்பில், மலர்ந்த முகங்களுடன் நிற்கும் காட்சியைச் சித்தரித்தேன். இந்தப் படத்தைக் கண்டதும், ஹாரியட்டின் இதயம் மலர்ந்தது; அவளுடைய கண்கள் புலர்ந்தன; சிந்தனைப் புயலில் சிக்குண்டவளாய் அவள் தத்தளித்தாள். இந்த நிலையில், என் கையில் அவளுடைய கை தங்கி விரிந்தது; இன்பக் கேணியில் குளித்தவள் போல், உணர்ச்சிப் புயலில் உள்ளம் இழந்தாள். கொஞ்ச நேரம் சென்றதும், திடீரென்று மறைந்து விட்டாள். என் இதயமும் துடித்துக் குமுறியது.

அன்று இரவு.

நான் தங்கியிருந்த ஜாகையில் பதினெட்டு வயது வேலைக்காரி ஒருத்தி இருந்தாள்; செலஸ்டி என்று அவள் பெயர். வாட்டசாட்டமா யிருப்பாள். மேனி மினுக்கி. என்னுடன் எப்போ

தும் அவள் சரஸமாய் விளையாடுவாள். அந்த இரவில் கோழிக் குஞ்சுகளைத் திறந்து விட்டு அவள் வரும்போது, நான் என்னவோ மதிமோசம் போனேன். மோகமுங் கொண்டேன். அவளை இறுகத் தழுவி, அவளது முகத்தில் ஒரு முத்தம் கொடுத்து விட்டேன். என்ன துர்ப்பாக்கியம்! தற்செயலாய் அங்கே வந்த ஹாரியட், இதைக் கண்டுவிட்டாள். நான் திடுக்கிட்டேன்; அவளும் திகைத்து முகங்கறுத்தாள்.

மறு நாள் காலையில் ஹாரியட் சாப்பிட வரவில்லை.

கிணற்றில் தண்ணீர் இறைக்க வாளி கீழே இறங்கும்போது, அதை ஏதோ மோதியது. குதிரையோ என்று சந்தேகித்து, ஓர் ஆள் இறங்கிப் பார்த்தான். அது மிஸ் ஹாரியட்டின் பிரேதம்! வெளியே எடுத்து, கூர்மையாய்க் கவனித்தபோது, முகம் அடிபட்டு ரத்தக்கறை தோய்ந்திருந்தது. நானும் இன்னொரு வேலைக்காரனுமாக, இந்தப் பிணத்தைக் கழுவி, வேறு உடை உடுத்திப் புதைக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தபோது, அவள் உடையிலிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. தன்னை இந்தக் கிராமத்திலேயே புதைக்க வேண்டுமென்ற ஒரு குறிப்பு அதிலே இருந்தது. ஹாரியட்டின் பிரேத உடலைப் பார்த்தபோது, பழைய காதல் சிந்தனைகள் என் உள்ளத்திலே கொந்தளித்துக் குமுறின. அருமையான, எவரும் காதலிக்காத, அந்த இன்ப முகத்தைக் கண்டு, நான் பரவசமானேன்; வெளுத்த, உயிரற்ற அந்த முக மண்டலத்தில் எனது ஆர்வம் நிறைந்த முத்தங்களைப் பொழிந்து, துணையற்ற அந்த ஆத்மாவைச் சாந்தப்படுத்தினேன்.

வாஷிங்டனில், கலியாணமாகாத கன்னிகையாகவே வாழ்ந்த ஒரு மாது மாண்டாள். 5-லட்சம் டாலர் அவள் சொத்து, அதில் வாரிசுப் பாத்தியம் கொண்டாடி, 2,006 தாயாதிகள், மூலைமுடுக்கிலிருந்தெல்லாம் வந்து தோன்றியிருக்கிறார்களாம்.

* *

அமெரிக்காவில் உள்ள சுதந்திர தேவி சிலையின் கைவிரல் நகம் ஒவ்வொன்றும் நூறு பவுண்டு நிறையிருக்கிறதாம்!

ஓரங்க நாடகம்:

வீரன் கடமை

[சுவாமி சுத்தானந்த பாரதியார்]

அதோ போர் முரசம் அழைக்கிறது. இதோ கொஞ்சும் கிளி மனையாளின் உருக்கமான பிரார்த்தனை. பாரத புத்திரன் அபிமன்யுவின் நிலை என்ன? வீரன் கடமை என்ன? காதலை வீரத்தின் பரிசாகத்தானே பெற விரும்புவான்?

நாடகபாத்திரர்

அபிமன்யு :	வீர வாலிபன்
அருச்சுனன் :	தந்தை
சுபத்திரை :	தாய்
சுந்தரி :	மனைவி
தருமபுத்திரர்	
துரோணர்	
துரியோதனன்	
வீரர்	
இடம் :	குருக்ஷேத்திரம்
காலம் :	மாலை.

முதற்காட்சி

[பாரதப்போரில் பீஷ்மர் இறந்தார்.. துரியோதனன் வருந்துகிறான்... துரோணர் தேற்றுகிறார்.]

துரியோதனன்: பீஷ்மர் போன பிறகு, அரவக்கொடி சோர்ந்ததே... ஒரு பெரிய மலை பூகம்பத்தால் மறைந்தது போன்றதே... ஹா... மனம் தளர்ந்தது. தலை சுழல்கிறது.... நிலையறியேன்...... ஆசாரியரே!

துரோணர்: துரியோதனா! இனித் தளர்ந்தென்ன? கண்ணன் தூது வந்தபோதே, அந்தப் புத்தியிருக்க வேண்டும். போர்க்களத்தில் எதிரிகள் குமுறி வரும்போது, தலையில் கைவைத்துச் சிந்தித்தென்ன? நில் நிமிர்ந்து...

துரியோதனன்: ஆசாரியாரே! நான் நிற்கிறேன்... உள்ளே ஏதோ என் முதுகை வளைக்கிறதே... அந்தப் பீமத் தடியனை முதுகில் என் கதையால் அடித்து நொறுக்கமாட்டேனா? அந்த நொட்டாங்கை விஜயனை ஒரு நொடியில் மார்பிளக்க மாட்டேனா? அப்பாவித் தருமனை ஊமைக் குத்தாகக் குத்திக் கொன்று குழியில் போட்டுப் புதைக்க மாட்டேனா?... அந்தப் பாண்டவர் சேனையை மூட்டைப் பூச்சி மாதிரி நசுக்கமாட்டேனா... தேரோட்டும் அந்த இடையனைக் கீழே உருட்டித் தள்ளிச் சக்கரத்திலேயே வைத்து நசுக்கமாட்டேனா...

துரோணர்: துரியோதனா! இந்த விபரீத புத்தியை விட்டுவிடு... நீ அந்த வீரர் உடலை நசுக்கலாம், பிளக்கலாம்... ஆனால், அங்கே நிற்கும் தருமதேவதையை என்ன செய்யமுடியும்? அதர்மயுத்தம் தொடுத்தாய். சோற்றுக்கடனுக்காக, உன் பக்கம் நின்று நாங்கள் வாட்போர் செய்கிறோம்... போனது போகட்டும்...

துரியோதனன்: போகட்டுமா... குருநாதா! அந்தத் தர்மப் பூச்சிகள் நசுங்க ஒரு மந்திரம் போடுமே. அவர் குலம் வேரோடொழிய, அக்னியாஸ்திரத்தைப் பொழியுமே...

துரோணர்: துரியோதனா!... இந்தக் கெட்ட எண்ணத்தை விட்டுவிடு. அவர்கள் மேல் நீ கணை விடலாம்... வாளை வீசலாம். ஆனால் அவர்களைக் காத்துநிற்கும் தரும தேவதையை நாம் யாதும் செய்ய முடியாது... மூண்ட போரில் நமது வீரக்கடனைச் செய்வோம்... எழுந்திரு... பலனைப் பற்றிய கவலையைத் தரும தேவதைக்கே விட்டுவிடுவோம்...

துரியோதனன்: சரி... அதோ எதிரிகளின் பறை கேட்கிறது. இனிப் பேசியென்ன? செய்யவேண்டியதைச் சட்டென்று சொல்லுகிறேன். தருமப் பூச்சியை நசுக்க வேண்டும்... போம்...

துரோணர்: நானாயிற்று! இதோ! ஆனால், அருச்சுனன் அந்தப் பக்கம்

வராமல் நீ பார்த்துக்கொள்ள வேண்டும். அவன் பிள்ளை அபிமன்யுவை மெள்ள மனைவி மயக்கத்தில் ஆழ்த்தவேண்டும். காதல் கள்ளால், அவன் கத்தியை மறக்கச் செய்யவேண்டும். ஒற்றரை அனுப்பு. பிறகு, எனது வாளின் திறமை முழுதும் காட்டுகிறேன்...

துரியோதனன் : அப்படியே... நான் பார்த்துக்கொள்ளுகிறேன். ஏவுங்கள் வீரரை...

துரோணர் : வீரர்காள்! கட்டுங்கள் பத்மவ்யூகம்...எதிரிகள் யாரும் அந்த வ்யூகத்தைக் கலைக்க முடியாது. அபிமன்யு மட்டும் கிட்ட வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். அருகே வந்தவரை வெட்டித்தள்ளுங்கள். ஜயம் நமக்கே. வீரர்காள்! கொட்டுங்கள் ஜய பேரிகை...செல், வலது இடது... செல்...

வீரர் : பறை கொட்டி முன் செல்லல்.

முரசம்

படை திரண்டு வாருங்கள்
பறக்க நம் ஜயக்கொடி...
இடிமுரசம் கொட்டுங்கள்
இகலவர் நடுங்கவே...

[வீரர் செல்லல்...]

இரண்டாம் காட்சி
அபிமன்யு, சுந்தரி

அபிமன்யு : போர் முரசம் கேட்கிறது. கண்ணே! என் வீர வுள்ளம் துடிக்கிறது...உடனே விடை கொடு.

சுந்தரி : கண்ணாளா! உம்மை எப்படிப் பிரிந்திருப்பேன்? போர் முனை செல்லத் தங்கள் தந்தை இருக்கிறார்.

அபிமன்யு : சுந்தரீ! தந்தையிருந்தால் மைந்தன் உறங்குவதா? வீரத் தந்தையின் வீர மைந்தன், போர் முரசு கேட்டும் பள்ளியறையில் பதுங்குவதா ஆண்மை?

சுந்தரி : ஐயோ! இந்தப் போர் முரசம் என் வயிற்றைக் கலக்குகிறதே. நெஞ்சில் நெருப்பையள்ளிக் கொட்டுகிறதே. கண்ணா! தங்களை ஒரு நிமிஷமும் பிரியமாட்டேன். அன்றில் இணைபிரிந்தாலும் நான் பிரியேன். நாம் யுவர். வயதிற்கேற்ற சுகபோகங்களை அநுபவிக்க வேண்டியவர்கள். பாண்டு குலத்துக்குத் தாங்கள் இளவரசர்.



தாங்கள் அந்தக் கொடிய போரில் சிக்கி....ஐயோ.....நினைத்தாலும் பயமா யிருக்கிறதே...மனம் என்னென்னவோ நினைக்கிறதே......

அபிமன்யு : கண்ணே! நீ என் மனைவியா? வீரமற்ற பேடிகளின் பேதை மனைவியர்போலப் பிதற்றுகிறாயே. நான் க்ஷத்திரியன்; தனஞ்ஜயன் பிள்ளை; வீராங்கனையான சுபத்திரை மகன் என்பதை மறந்தாயா? எனது சுதர்மத்தைவிடப் பெண் சுகம் பெரிதா...உலகமே பெரிதா? அங்கே துரோணாசாரியார் காலன்போல் எழுந்து தருமபுத்திரரைக் கொல்லச் சபதம் பூண்டு போர் செய்கிறார். நமது படைகள் படுசேத மாகின்றன. தந்தை போர்க்களத்தில் தனி நின்று எதிரிகளை ஒரு கை பார்க்கிறார். பீமப் பெரியப்பா தமது வலியுள்ளமட்டும் கதையினால் துரியோதனக் கும்பலை நசுக்குகிறார்... இருந்தும் நிலைமை மோசமா யிருக்கிறது. இதோ துரோணர் தரும புத்திரரை வளைத்துக் கொள்ளப் போகிறார். நமது பாண்டவப் பூண்டையே அறுக்கப் பத்ம வ்யூகம் அமைத்திருக்கிறார். அதில் சென்று போராட எனக்கே முடியும். தருமரின் ஆசிபெற்றேன். பெண்ணே! என்னை உனது காதலா தடுக்க முடியும்? பெண்ணே! உனது புன்னகை, பவளவாய், முத்துப்பல், மலர் முகம், மோகனகாந்த வடிவு, குயில் மொழி...இவையெல்லாம் இப்போது என்னை வசப்படுத்துமா? இது அழகு பார்க்கும் வேளையன்று...காதலாடும் காலமன்று; முத்தமிடும் நேரமன்று. இது வாளேந்திப் பயங்கரமான போர்க்களத்தில் குதிக்கும் சமயம்.

சுந்தரி : கண்ணாளா! என்மேல் பிரியமில்லையா? என்னைவிடப் போர் பெரிதாகும்! என் மனப் போரை வெல்ல உங்கள் துணை வேண்டும்...ஐயோ! நான் தங்களை விடமாட்டேன்.

[தழுவிக் கொள்கிறாள்]

அபிமன்யு : சுந்தரி! விடு க்ஷத்ரியனுக்குப் புகழே முதல் மனைவி. புகழ் சுதர்மத்தால் வருவது. அது போனால் அவன் செத்த பிணத்திலும் கேடானவன். பிணத்தையா உன் கணவனென்பாய்? நான் வாகைசூடி வந்து உன்னைத் தழுவிக் கொள்ளும்போது, நமது காதல் புதிய வெற்றி பெறும்.

சுந்தரி : மணாளா!...நான் கண்ட கனவு என்னைச் சங்கடப்படுத்துகிறதே. துரோணரின் பத்ம வ்யூகத்தில் தாங்கள் புகவேண்டாம். கண்ணனுடன் மாமனார் சென்று அந்தக் காரியத்தைப் பார்க்கட்டும். தாங்கள் தள்ளியிருந்து...

அபிமன்யு : சை.....பேதையே! என்ன பேச்சிது? நான், அர்ச்சுனன் மைந்தன்...வாளும் தோளும் வீரமும் கூரம்பும் உடையவன்; போர்க்களம் சென்று தள்ளியிருந்து ஒரு கும்பிடு போட்டு வரச்சொல்லுகிறாயா? அல்லது படுத்துறங்கி வரச் சொல்லுகிறாயா? அசடே!...பத்மவ்யூகத்தை உடைத்து, எதிரிகளை எமகிங்கரன் போல் புடைத்து வீழ்த்தவே செல்கிறேன்...எனது தந்தையின் புகழை நிலைநாட்டவே போகிறேன். சாதுக்களான பாண்டவரைக் கொடுமைசெய்து, மாயச் சூதாடிக் காட்டுக்கு விரட்டி, ஊசி குத்தக்கூட இடம் தராமல் கொடுமைசெய்த அந்த அதர்மச் சுயோதனக் கும்பலை தரும தேவிக்குப் பலிவைக்கவே போகிறேன்... இது என் உறுதி...

சுந்தரி : தங்களது உறுதியைக் கேட்டுக் குடல் நடுங்குகிறதே. மணாளா! வியூகத்துக்குள் துரோணர் பல தந்திரங்கள் செய்து வைத்திருக்கிறாராம். அதை விட்டு வெளியே வர முடியாதாம். விதி எப்படி யாகுமோ...

அபிமன்யு : பெண்ணே! நான் போரில் புகுந்து மீள முடியாவிட்

டால், இருந்த இடத்திலிருந்தே எதிரிகளைப் புடைப்பேன். ஆயிரம் பேரையாவது வீழ்த்துவேன். எதிரிகள் பெருவாரியாக வந்து என்னை வளைத்துக்கொண்டாலும் அஞ்சேன். உயிர் உள்ளமட்டும், துளியிரத்தம் உள்ளமட்டும், பாம்புக் கொடியரைப் படுநாசம் செய்வேன்...கால் போனால், கையால் வெட்டுவேன். கை போனால், தலையால் முட்டுவேன். தலையே போனாலும், வாயால் அவர்களுடைய அதர்மத்தைப் பறைசாற்றி நெஞ்சில் வீரந்துடிக்கவே வீழ்வேன் ...இந்த உடல் போனால் இன்னொரு உடல் கொண்டுவந்து சமர் புரிவேன் .....பெண்ணே ! நான் உயிருடன் வந்தால், எனது வீரவுடலைத் தழுவிக்கொள். நான் இறந்தால், எனது வீரவுயிரைத் தழுவிக்கொள். அஞ்சாதே.

சுந்தரி : அந்த வார்த்தை சொல்லாதிர்களேன் ! ஐயோ ! தாங்கள் சென்று,நான் இருக்கவேண்டுமா? நானும் அதே போர்க்களத்துக்கு வந்து, தங்களது அருகே உயிர் விடுவேன்.

அபிமன்யு : எனக்கு முதலில் விடைகொடு. செல்கிறேன். பிறகு உன் மனப்படி நடக்கட்டும்.

[திரைக்குப் பின்னால் போர்முரசம்]

போரிலே புறங்கொடோம்—இப்
பொய்யுடலம் வீழினும்
பாரிலே புகழ் சிறந்து
பண்புடனே வாழுவோம்...

இனிப் பேச்சில்லை. சுந்தரி உன் கையால் வாளைக்கொடு...

சுந்தரி : ஒரு முத்தம் கொடுங்கள்...வாள் கொடுக்கிறேன்.

அபிமன்யு : இனி நான் கொடுக்கும் முத்தம் காதலுக் கன்று... கத்திக்கே...கொடு...வாளை...தைரியமா யிரு...வீரன் கடமை போர். கண்ணன் தந்தைக்குச் சொன்னது என்ன ? "போர் புரி...செய் கடமை...பலனைக் கருதாதே" என்பது...அந்தக் கீதோபதேசம் என்னை அழைக்கிறது... '**சென்றால் விண்ணாட்சி. வென்றால் மண்ணாட்சி. அதனால் போர் புரி ஆண் சிங்கமே...**'

[வருதல் அருச்சுனன், சுபத்திரை]

அருச்சுனன் : மகனே ! உன் வீரத்தை மெச்சினேன். நான்கூட நேற்றுக் கலங்கினேன். கண்ணன் என்னைத் தேற்றினான். அவன் செய்த உபதேசமே உருவாக உன்னைக் காண்கிறேன்.

அபிமன்யு : தந்தையே ! இன்று தாங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நான் பத்மவ்யூகத்தை உடைத்தெறிகிறேன்.

அருச்சுனன் : கண்மணி, அபிமன்யூ! எனக்கு ஓய்வேதடா ? அந்தக் கர்ணனை ஒழித்துக் கௌரவக் கும்பலைத் தரும தேவதைக்குப் பலிவைத்து, உலகில் அதர்மத்தை வேரோடு கல்லியெறிந்து, தரும ராஜ்யத்தை நாட்டினாலொழிய,ஓய்வேதடா கண்மணி...

அபிமன்யு : தந்தையே ! அப்படியானால் எனக்கும் இனி வேறு சிந்திக்க ஓய்வு கிடையாது...வாருங்கள், போரில் பாய்வோம். தாயே ! என் வாளை ஆசீர்வதி...நீ வீரப் பெண்மணி...

சுபத்திரை : மகனே ! உனது வயதைக் கண்டு கலங்கினேன். உன் வீரத்தைக் கண்டு மகிழ்ந்தேன். தருமதேவதை வீரரின் பக்கம் இருப்பாள் ; உன்னைக் காப்பாள். உனது வாளுக்கு அவள் பலம் பெருகுக...மகனே! சென்று வா...எதிரிகளை வென்று வா...

அருச்சுனன் : மகனே!...அதர்மப் படையைக் கொன்றுவா...இதோ எனது பிரம்மாஸ்திரத்தைத் தருகிறேன். துரோணருக்கு அது பதில்சொல்லும். நான் பாசுபதாஸ்திரத்தை வைத்துக்கொண்டு,அறப் போர் செய்கிறேன். நமது பக்கம் எப்போதும் இருக்கும் கண்ணனை வணங்கி, அவன் ஆசிபெற்றுச் செல்...மகனே !

[பின்னால் போர்ப்பறை]

நாட்டுக்காக நம்முயிர்
நாட்டுக்காக நம்முடல்
நாட்டு மானம் காத்திடவே
நம்முயிரை நல்குவோம்...

சுபத்திரை : முரசம் உபதேசிக்கிறது. ஆம்...நாட்டுக்கே உயிர்...நாட்டுக்கு அறவுயிர் தருவோம்...புறப்படு, மகனே !

அபிமன்யு :
துரும்புபோலத் துட்டரை—நாம்
தூக்கி மண்ணிற் போடுவோம்...
இரும்பு போன்ற நம் தசை
இறுகத்தாக்கி முன்செல்வோம்...

ஓம் ஜயசக்தி...

[செல்கின்றனர்]

பாவ விமோசனம்

ஒரு குடித்தனக்காரன், தன் அயல் வீட்டுக்காரனைப்பற்றி ஓர் அபாண்டப்பழி சொல்லி விட்டான். ஊராரும் அதை நம்பினார்கள்.

பின்னால், அவன் மனதே அவனை உறுத்தியது. இந்தப் பாவத்துக்கு என்ன பிராயச்சித்தம் என்று ஒரு சுவாமியாரிடம் போய்க் கேட்டான்.

"நாளைக் காலையில் விடியுமுன் எழுந்திரு. ஊரிலுள்ள ஒவ்வொரு வீட்டின் வாயிற்படியிலும் ஒரு சேர் பஞ்சைக் கொண்டுபோய்ப் போட்டுவிட்டு என்னிடம் வா" என்றார் சுவாமியார்.

குடித்தனக்காரன் அப்படியே செய்துவிட்டு, சுவாமியாரிடம் திரும்பவும் வந்து, "என் பாவம் போய்விட்டதா ?" என்று கேட்டான்.

"இன்னும் ஒரு வேலை யிருக்கிறது. நீ போட்ட பஞ்சை யெல்லாம் உடனே போய்த் திரட்டி என்னிடம் கொண்டு வா" என்றார் சுவாமியார்.

"சரிதான்" என்று சொல்லிப் போன அவன் வெறுங் கையோடு திரும்பி வந்தான்.

"என்ன சேதி ?" என்று கேட்டார் சுவாமியார்.

"அந்தப் பஞ்செல்லாம் பறந்து போய் விட்டதே !" என்று ஏங்கினான் குடித்தனக்காரன்.

"உன் பழிச்சொற்களும் அப்படித்தான். அவை இனித் திரும்பி வரமாட்டா. ஆகையால், உன் பாவத்துக்கு எவ்விதப் பிராயச் சித்தமும் சாத்தியமில்லை" என்றார் சுவாமியார் !

உமா பிக்சர்ஸ் தயாரிப்பு
தமிழறியும் பெருமாள்
டைரக்ஷன்
T.R.ரகுநாத்
ஸ்டுடியோ
நியூடோன்



ஒவ்வொரு தடவை பல் துலக்கும்போதும் உங்கள் தேகம் பூராவுமே நன்மை பெறுகிறது. கமகமவென்று வாசனை வீசி ஆனந்தமாய் நுரை கொடுக்கும் பற்பசை இதோ இருக்கிறது. பற்களின் சிறு இடுக்குகளிலெல்லாம் புகுந்து, பல்லை அது பாலிஷ் செய்கிறது. மேலும், அயோடின் சத்து அதில் இருப்பதால், அதை ஈறுகளும் வியர்வை உறுப்புகளும் கிரகித்துக்கொண்டு நன்மை செய்கின்றன.

'அயோடின்' பல் வியாதிகளைப் போக்கடிக்கும் சக்தியுடையது. ஆகையால் 'ஐடோகால்' பற் பசை, பையோரியா, ஸ்கார்புலா, கேடராக், காய்டர் முதலிய வியாதிக்காரர்களுக்கு அனுகூலம் செய்கிறது.

ஐடோகாலில் நமது முக்கிய அம்சங்களான (1) தைராய்ட் (2) அயோர்டா (3) லிவர் (4) வயிறு (5) முகஸ் மெம்ரேன் முதலியவைகளுக்கு அவசியமான அளவு அயோடின் சேர்ந்திருக்கிறது.

Idocol

AVAILABLE EVERYWHERE

Trade Enquiries to:—**EZRA BROS.,** Mustafa Bldg., Sir P. Mehta Road, Bombay 1.

FAMOUS IN INDIA AND ON THE CONTINENT

Madras Stockists :—LOANE SQUARE PHARMACY
160, BROADWAY, MADRAS

சுவாமி சுத்தானந்த பாரதியார் எழுதிய புதிய நூல்கள்

கல்விக் கதிர் ராப்பர்	1	8	0
,, காலிகோ	2	0	0
அன்பு வழி	0	6	0
கவிக்கனவு	0	10	0
அன்பு நிலயம் ராப்பர்	1	8	0
,, காலிகோ	2	0	0
காலத்தேர்	1	0	0
தமிழ்க் கனல்	0	8	0
குழந்தை யின்பம்	0	4	0
திருக்காட்சி	0	4	0
அரவிந்த யோக தீபிகை	0	8	0
உடலுறுதி	1	0	0
பராசக்தி அர்ச்சனை	0	3	0
அன்பின் அற்புதம்	0	10	0
சிவாஸ்திரம்	0	8	0
இளிச்சவாயன்	1	0	0
மகா கவி தாந்தே	1	0	0
திருமந்திர விளக்கம்	1	0	0
யோகத்தின் அடிப்படை	0	10	0
அருட்சுடர் வள்ளலார்	0	12	0
,, காலிகோ	1	0	0
இன்பமாலை	0	6	0
பொதுநெறி	0	2	0
திருக்குறளின்பம் ராப்பர்	1	4	0
,, காலிகோ	1	12	0
வரகவி தாகூர்	0	3	0

சக்தி காரியாலயம்
ஜார்ஜ் டௌன், சென்னை

கலர் ப்ளாக்குகள், கலர் லேபில்கள்,
கலர் பிரிண்டிங் செய்யுமிடம்

எம். ஸி. அப்பாசாமி
செட்டி & கம்பெனி,
14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி, மதராஸ்.

Fashion Insists
On Smartness !
FOR MODERN SAREES
SHOP AT
RANGOON HALL
RANGOON MERCHANT
KARAIKKUDI

அழகு செய்வது தற்கால நாகரீக ஆடைகளே!
உயர்தர ஜவுளிக்கு
உத்திரவாதமுள்ள இடம்

ரெங்கோன் ஹால்

கு. அ. அங்கமுத்து முதலியார்
பட்டு ஜவுளி வியாபாரம்
அம்மன் சன்னதி :: காரைக்குடி

குழந்தைகள் அறிவு :

உதவாக்கரைப் படிப்பு

(லியோ டால்ஸ்டாய்)

ஒரு காவல்காரன்.

நிக்கோலே : ஹைஸ்கூல் மாணவன், வயது 15

காட்யா : 7 வயதுச் சிறுமி.

அவர்களின் தாய்.

கதவுக் குமிழியைக் காவல்காரன் துடைத்துக்கொண் டிருக்கிறான். சின்னஞ் சிறு கற்களைக்கொண்டு, காட்யா ஒரு சிறு வீடு கட்டுகிறாள். நிக்கோலே பிரவேசித்துப் புத்தகங்களை விட்டெறிகிறான்.

நிக்கோலே : அவர்கள் நாசமாய்ப் போக! அவர்களது ஹைஸ்கூல் இடிந்து விழ!

காவல்காரன் : என்னப்பா சமாசாரம்?

நிக்கோலே : மறுபடியும் எனக்குச் சுழித்து விட்டார்கள். அவர்கள் பாழாய்ப் போக! மறுபடியும் தகரார்தான். அவர்களுடைய பூகோளம் என்னை என்ன பாடு படுத்துகிறது! அந்தக் கிலி போர்னியாவா மண்ணாங்கட்டியா, அது எங்கேயிருந்து தொலைந்தாலென்ன? எனக்கெதற்காகத் தெரிய வேண்டும்?

காவல்காரன் : இனி அவர்கள் உன்னை என்ன செய்வார்கள்?

நிக்கோலே : அதே வகுப்பில் என்னை மறுபடியும் நிறுத்தி விடுவார்கள்.

காவல்காரன் : நீ ஏன் உன் பாடங்களைப் படிப்பதில்லை?

நிக்கோலே : ஏனென்றால், உதவாக்கரைக் குப்பையையெல்லாம் என்னால் படிக்க முடியாது; அதனால்தான். அவர்களெல்லாரும் நாசமாய்ப் போக! [ஒரு நாற்காலியில் சாய்கிறான்.] அம்மாவிடம் சென்று, இனி என்னால் முடியாதென்று சொல்லுகிறேன்; இதோடு அதை ஒழிக்க வேண்டியதுதான். என்னை அவள் பள்ளிக்கூடத்தை விட்டு அகற்றா விட்டால், கடவுள் சாட்சியாய்ச் சொல்லுகிறேன் — நான் ஓடிவிடப் போகிறேன்!

காவல்காரன் : எங்கே ஓடுவாய்?

நிக்கோலே : வீட்டை விட்டு ஓடிவிடுவேன். ஒரு குதிரைக் காசாரி அல்லது காவல்காரனாக வேலை செய்கிறேன்! இந்தக் குப்பைப் படிப்பைவிட, வேறே எதுவாயிருந்தாலும் மேல்தான்.

காவல்காரன் : ஆனால், காவல்காரன் வேலை சுலபமல்ல, அப்பா! அதைத் தெரிந்துகொள். அதிகாலையிலே எழுந்திருக்க வேண்டும்; விறகு வெட்டவேண்டும்; அதைச் சுமந்து கொண்டுபோய், தீ மூட்டவேண்டும்.

நிக்கோலே: பூ! [சிட்டியடித்து] அது பெரிய தமாஷாவாயிற்றே! கட்டை உடைப்பது சுகமான வேலையல்லவா! இதைச் சொல்லி என்னை நீ மிரட்ட முடியாது. இது ரொம்ப ஸுகமான வேலை. நீ பூகோளம் கற்றுப் பார்த்தாயானால் தெரியும்.

காவல்காரன் : நிஜமாகவா? அப்படியானால், உன்னை ஏன் அவர்கள் அதைப் படிக்கச் செய்கிறார்கள்?

நிக்கோலே : அதுதான் நானும் கேட்கிறேன். அதற்குக் காரணமே கிடையாது. அது ஒரு வழக்கம்; அவ்வளவு தான். பூகோளம் தெரியாமல் மனிதர்கள் வாழ முடியாது என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

காவல்காரன் : நீ கற்றுத்தான் ஆக வேண்டும். இல்லையானால், உத்தியோகத்தில் நுழைய முடியாது: உன் அப்பா, மாமன் இருவரையும் போலப் பதவியும் சம்பளமும் உனக்குக் கிடைக்கமாட்டா.

நிக்கோலே : அவை எனக்கு வேண்டாமென்றால்—?

காட்யா : ஆமாம்; அவனுக்கு வேண்டாமென்றால்—?

ஒரு நறுக்கை எடுத்துக் கொண்டு, தாய் பிரவேசிக்கிறாள்.

தாய் : நீ மறுபடியும் சுழி வாங்கிவிட்டாயாமே! இதோ ஹெட்மாஸ்டர் எழுதியிருக்கிறார். இது சரிப்படாது, நிக்கொலென்கா. இரண்டிலொன்று தான் : ஒன்று, நீ படிக்கவேண்டும்; அல்லது, படிப்பை நிறுத்த வேண்டும்.

நிக்கோலே : இரண்டிலொன்று தான். என்னால் முடியாது, முடியாது, முடியாது! சுவாமிக்குப் பொதுவாய்க் கேட்டுக்கொள்கிறேன் : பள்ளிக்கூடத்தை விட்டு என்னை நிறுத்தி விடு, அம்மா! என்னால் படிக்கவே முடியாது.

தாய் : ஏன் முடியாது?

நிக்கோலே : என்னால் முடிந்தால்தானே! அது என் தலையில் நுழைய வில்லை.

தாய் : நீ கவனித்துப் படிப்பதில்லை; அதனால்தான் அது உன் தலையில் நுழையவில்லை. உதவாக்கரைக் குப்பையையெல்லாம் பற்றி யோசிப்பதை விடு; உன் பாடங்களில் கவனம் செலுத்து.

நிக்கோலே : கெஞ்சிக் கேட்கிறேன், அம்மா! என்னைப் பள்ளிக் கூடத்திலிருந்து நிறுத்திவிடு. எனக்கு வேறொன்றும் வேண்டாம். இந்தப் பயங்கரப் படிப்பிலிருந்து—இந்தத் தொழும்பி

விருந்து—என்னை விடுதலை செய். இது என்னால் தாளவில்லை.

தாய்: படிப்பை விட்டு என்ன செய்யப் போகிறாய்?

நிக்கோலே: அது என்னைப் பொறுத்த விஷயம்.

தாய்: இல்லை, அது உன்னைப் பொறுத்ததல்ல; என் பொறுப்பே யாகும். உனக்கு நான் செய்ய வேண்டிய கடமை பற்றி நான் அல்லவா கடவுளுக்குப் பதில் சொல்லவேண்டும்? உன்னைப் படிக்கவைக்க வேண்டியது என் கடமையாகும்.

நிக்கோலே: நான் படிக்காவிட்டால்—?

தாய்: (கோபமாக) என்ன பிதற்றுகிறாய்! நான் உன் தாயார் என்ற முறையில் கடைசித் தடவையாக வேண்டிக் கொள்ளுகிறேன்: குணந் திருந்தி, சொன்னதைச் செய். நான் கூறுவதை நீ கேட்காவிட்டால், வேறு முறைகளை நான் கையாள நேரும்.

நிக்கோலே: என்னால் படிக்க முடியாது, படிக்க மாட்டேன் என்றுதான் நான் உன்னிடம் சொல்லி விட்டேனே?

தாய்: உஷார், நிக்கொலே!

நிக்கோலே: எதற்கு உஷார்ப் படவேண்டும்? ஏன் என்னை நீ ஹிம்சிக்கிறாய்? ஏன் இப்படிப் புரியாமல் பேசுகிறாய்?

தாய்: இம்மாதிரி பேச உனக்கு என்ன துணிச்சல்! என்ன துணிச்சலடா! உடனே இந்த அறையை விட்டுத் தொலை! உஷார்!

நிக்கோலே: ரொம்ப நல்லது; நான் போகிறேன். எனக்கு எதற்கும் பயமில்லை; உன்னிடம் நான் எதையும் எதிர்பார்க்க வில்லை. [வெளியே ஓடி, கதவைப் படீர் என்று சாத்திக் கொள்கிறான்.]

தாய்: [தனக்குத்தானே] என்ன தொல்லை செய்து, என் உயிரை வாங்குகிறான்! இதற்கெல்லாம் காரணம் எனக்குத் தெரியும். அவசியமான விஷயங்களில் அவன் கவனம் செலுத்துவதில்லை; குப்பை கூளங்களை யெல்லாம் யோசிக்கிறான்—நாய்கள், கோழிகளைப் பற்றி யெல்லாம் யோசனை!

காட்யா: ஆனால், அம்மா! மூலையிலே நின்று கொண்டால், குருட்டு யோசனை யெல்லாம் வரத்தான் வரும்; அதைத் தடுக்க முடியாது என்று நீயே சொல்லியிருக்கிறாயே?

தாய்: அதைப்பற்றி நான் இப்போது பேசவில்லை. தனக்குச் சொன்ன பாடத்தை அவன் படிக்க வேண்டும் என்றே சொல்லுகிறேன்.

காட்யா: அவன்தான் தன்னால் முடியவில்லை என்கிறானே?

தாய்: அது வெறும் பிதற்றல்!

காட்யா: ஆனால், தான் ஒன்றுமே செய்யாம லிருக்க விருப்பமென்று அவன் சொல்லவில்லை. பூகோளம் மட்டில்தான் தனக்குப் பிடிக்கவில்லை யென்கிறான். வேலை செய்ய, அவனுக்கு விருப்பம்தான். குதிரைக் காசாரியாகவோ, காவல்காரனாகவோ வேலை பார்க்க, அவன் விரும்புகிறான்.

தாய்: அவன் ஒரு காவல்காரனின் மகனா யிருந்தால், தானும் ஒரு காவல்காரனாகலாம். உன் அப்பாவின் மகன் அல்லவா அவன்? ஆகையால், படித்தாக வேண்டும்.

காட்யா: ஆனால், அவனுக்கு இஷ்ட மில்லையே!

தாய்: அவனுக்கு இஷ்டமோ, இல்லையோ; எப்படியிருந்தாலும், அவன் படித்துத்தான் தீர வேண்டும்.

காட்யா: அவனால் முடியாவிட்டால்—?

தாய்: இந்தா, நீயும் அவன் மாதிரி ஆகிவிடாதே.

காட்யா: அவன் மாதிரியேதான் நானும் செய்யப் போகிறேன். எனக்குப் பிடிக்காத பாடத்தை எக்காரணத்தைக் கொண்டும் நான் படிக்கப் போவதில்லை.

தாய்: அப்படியானால், நீ ஒன்றும் தெரியாத தொரு மூடமாகி விடுவாய். (மௌனம்)

காட்யா: நான் பெரியவளாய்ப் போய், குழந்தைகள் பெறுவேனானால், எக்காரணத்தைக் கொண்டும் நிர்ப்பந்தப்படுத்தி அவர்களைப் படிக்கச் செய்யமாட்டேன். அவர்களுக்கு இஷ்டமானால் படிக்க விடுவேன்; இஷ்டமில்லாவிட்டால், படிக்கச் செய்ய மாட்டேன்.

தாய்: நீ வளர்ந்து பெரியவளானால், அப்படி யொன்றும் நடக்கமாட்டாய்.

காட்யா: நிச்சயம் அப்படித்தான் நடப்பேன்.

தாய்: கண்டிப்பாய் அப்படி நடக்கமாட்டாய்.

காட்யா: அப்படித்தான் நடப்பேன், நடப்பேன், நடப்பேன்!

தாய்: அவ்விதமானால், நீ ஒரு மூடமாவாய்.

காட்யா: மூடர்கள்தானே கடவுளுக்குத் தேவையாம், தாதி சொல்லுகிறாளே!

பத்திரிகை லாபம்

பத்திரிகைத் தொழிலுக்கு இது மகா கஷ்டமான காலம். காகித விலை விஷம்போல் ஏறுகிறது. என்ன விலையாயினும் கொடுப்போமென்றாலும், போதிய காகிதம் கிடைப்பதில்லை. சீமையில் பிரபல பத்திரிகைகளின் உறைவிடமான பிளீட் தெருவில் தோன்றிய பழங் கதை ஒன்றை ஆர்த்தர் மீ இச்சமயம் ஞாபகப்படுத்துகிறார்.

பத்திரிகைத் தொழில் சம்பந்தப்பட்ட நான்கு பேர் ஏக காலத்தில் மரித்தார்களாம். அவர்களுடைய உயில்களில் கண்ட சொத்து மதிப்பு பின்வருமாறு இருந்ததாம்:

ஆசிரியரின் உயிலில்	பவுன்	1
ஏஜெண்டு உயிலில்	,,	10
பிரசுரகர்த்தர் உயிலில்	,,	100
பழம் பத்திரிகை வியாபாரி உயிலில்	,,	1,00,000

பறித்த பூக்கள்

ஜப்பானின் பிரதமர் டோஜோ : ஜப்பானின் முதன் மந்திரியாகிய ஹிடெகி டோஜோ, போர் வெறியரின் புதல்வனாய்ப் பிறந்து, போர்த் துறையில் பழகி, ராணுவ மந்திரியாகவே இருந்தவராவார். அவரது யுத்த வெறியைப் பார்த்து ஜப்பானியரே 'க்ஷவரக் கத்தி' என்று அவருக்குப் பட்டப் பெயர் வைத்திருக்கிறார்கள். அவரது வரலாற்றை, 'டைம்' பத்திரிகையிலிருந்து, 'ஹிந்துஸ்தான்' எடுத்துத் தந்துள்ளது :

ஐவேட் பிரிபெச்சூர் என்ற இடத்தில் டோஜோ பிறந்தார். இப்போது வயது 56. தந்தையின் பெயர் ஹிடனோரி டோஜோ. 1905-ஆம் ௵ ருஷ்ய - ஜப்பான் யுத்தம் நடந்தபோது, ஹிடனோரி முக்கிய ராணுவ உத்யோகஸ்தராயிருந்தார். அந்த யுத்தம் முடிந்ததும், ஹிடனோரி, தம் குழந்தை டோஜோவை டோக்கியோ ராணுவக் கலாசாலையில் சேர்த்தார்.

சின்ன டோஜோவும் நன்றாக ராணுவக் கல்வி கற்று, தாமும் ஒரு சோல்ஜரானார். 29 வயது வரையிலும் அவரைப்பற்றி யாரும் எதுவும் கேள்விப்படவில்லை. 1935-ஆம் ௵ திடீரென அவர் ஒரு வேட்டு விட்டார். "ஜப்பானின் சர்வ தேசக் கஷ்டங்களைப் பார்த்துக்கொண்டு, அமெரிக்காவும் பிரிட்டனும் சீனாவும் சேர்ந்து போர் தொடுக்கப் போகின்றன" என்று முழங்கத் தொடங்கினார். அதற்கேற்றாற்போல, சீனாவில் யுத்தமும் ஆரம்பமாயிற்று. உடனே அவரை மஞ்சுகோவுக்கு அனுப்பினார்கள். அங்கே தளகர்த்தர்களான ஜுஸோ நிஷியோவுடனும் ஸிஷிரோ இடகாகியுடனும் தொண்டாற்றத் தொடங்கினார். அவரது முக்கிய சேவை நாடெங்கும் இரகசியப் போலீசாரைப் புகுத்துவதும், எதிரிகளைப் பற்றித் தகவல் சேகரிப்பதுமாகும். இதனால் அவர் பிரபலஸ்தராக இடமேற்பட்டது. 1937-ஆம் ௵ அதிர்ஷ்டவசமாக தாய்நாட்டுக்கு இடகாகி அழைக்கப்படவும், டோஜோ சீனாவிலுள்ள ஜப்பானியப் படையின் தலைவரானார்.

அடுத்த வருஷம் இடகாகிக்கு யுத்த மந்திரி பதவி நல்கப்பட்டது. அவர் டோஜோவிடம் அபிமானமுடையவர்; ஆகையினால், டோஜோவை உதவி மந்திரியாய்த் தேர்ந்தெடுத்துக் கொண்டார். அப்பால் விமானப் படையின் தலைவர் பதவியும், 1939-ஆம் ௵ விமானக் கலாசாலையின் தலைவர் பதவியும் டோஜோவுக்கு நல்கப்பட்டன. கோனோயி மந்திரி சபை ஏற்பட்டபோது, டோஜோவுக்கு யுத்த மந்திரி பதவி கிடைத்தது. கோனோயியின் ராஜிநாமாவுக்குப் பின், சென்ற அக்டோபர்௴ கடைசி வாரத்தில், டோஜோவே முதன் மந்திரியானார்; பதவி பெற்று 2 மாதமாகவில்லை; அதற்குமுன் யுத்தம் தொடங்கிவிட்டார்.

* *

ஜீரணநேரம் : நாம் உட்கொள்ளக்கூடிய சில உணவுப்பொருள்கள் ஜீரணமாகத் தேவைப்படும் கணக்கை 'நல்வழி' தருகிறது :

	மணி நிமிஷம்
சோறு	1. 00
பால், காய்ச்சினது	2. 00
,, காய்ச்சாதது	2. 15
நெய்	3. 30
உருளைக்கிழங்கு, வேக வைத்தது	3. 30
,, பொரித்தது	4. 00
முட்டைக் கோசு, பச்சை	2. 30
,, வேக வைத்தது	4. 30
புது முட்டை, நன்றாக அடித்தது	1. 30
,, பச்சை	2. 00
,, இலேசாக வேக வைத்தது	3. 00
புது முட்டை பொரித்தது	3. 30
,, நன்றாக வேக வைத்தது	3. 30
ஜவ்வரிசிக் கஞ்சி	1. 45
பார்லிக் கஞ்சி	2. 00
ஏழிலைக் கிழங்கு, வேகவைத்தது	2. 00
அவரை யினங்கள் ,,	2. 34
காரட்டுக் கிழங்கு ,,	3. 15
தர்னிப்புக் கிழங்கு ,,	3. 30
பீட்டுக் கிழங்கு ,,	3. 45
ஆப்பிள் பழம்	1. 30
ஆட்டிறைச்சி, வேகவைத்தது	3. 00
மாட்டிறைச்சி ,,	3. 00
கோழி யிறைச்சி ,,	4. 00
வான்கோழி யிறைச்சி ,,	2. 25
ரொட்டி	3. 15

* *

ஸங்கீத ஹாஸ்யம் : ஸங்கீதக் கச்சேரிகளில் எதிர்பாராத அநேக ஹாஸ்ய ஸம்பவங்கள் நேரும். அவைகளில் இதை 'ஆனந்தவிகட'னில் முசிரி சுப்பிரமணிய ஐயர் எழுதியிருக்கிறார் :

ஒரு சமயம் ஒரு பிரபல வித்வான் கச்சேரி செய்கையில், 'அபிமானமென்னடு கல்கு ராமா' என்ற பியாகடைக் கீர்த்தனையில், 'அன்னவஸ்த்ரமுனகேமி' என்ற சரணத்தின் முதலடியைப் பாடிக்கொண்டிருந்த பொழுது, முன்னால் உட்கார்ந்திருந்த ரஸிகர் ஒருவர் ஸ்வரம் பாடும்படி வேண்டிக்கொண்டார். அந்த வித்வான், பல்லவிக்கு ஸ்வரம் பாடுவதா அல்லது சரணத்துக்குப் பாடுவதா என்று கேட்பதற்குப் பதிலாக, கீர்த்தனத்தின் வார்த்தைகள் அந்தச் சமயத்துக்குப் பொருத்தமாய்ச் சொல்ல அனுகூலமாயிருந்தபடியால், "'அபிமான'த்துக்கு ஸ்வரம் பாடட்டுமா, அல்லது 'அன்னவஸ்தி'ரத்துக்குப் பாடட்டுமா?" என்று கேட்டார்!

* *

காலண்டர் விநோதம் : காலண்டர் வீட்டுக்கு ஓர் அலங்காரம். சில காலண்டர்களில் வரும் படங்களின் அழகுதான் என்ன! மஹரிஷியின் படம் முதல் நிர்வாண ஐரோப்பிய ஸ்திரீயின் படம் வரையில் எல்லாம் வருகின்றன. அவரவர்கள் ருசிக்குத் தக்கபடி வேண்டியதைப் பொறுக்கிக் கொள்ளலாம் என்கிறார் 'கல்கி'யில் ஸ்ரீமதி 'ஜயா' :

ஆனால், ராஜேஸ்வரியின் படமுள்ள காலண்டரில் ஒதுக்கக்கூடாத இடத்தில் 'மனோரஞ்சிதம் பொடி' என்று வியாபாரி அச்சடித்து வைக்கிறான். லக்ஷ்மி

படத்தில் ஸோப்புப் பெட்டியொன்று தலையை நீட்டிக் கொண்டு நிற்கிறது. மேனகா—விசுவாமித்திரர் படத்தில் 'மெல்லின்ஸ் புட்' என்று கொட்டையெழுத்தில் எழுதி வைத்திருக்கிறது. காலண்டர்களை அச்சிட்ட வியாபாரிகளுக்கு, ராஜேஸ்வரியின் ஆக்ரோஷத்துக்குக் காரணம் 'மனோரஞ்சிதம்' பொடி போட்டுக் கொண்டதுதான் என்றும், 'வினோலியா' ஸோப்புத் தேய்த்துக் கொண்டதனால்தான் லக்ஷ்மி அவ்வளவு அழகாய் இருக்கிறாள் என்றும், தாயில்லாக் குழந்தையான சகுந்தலை, கண்வர் ஆசிரமத்தில் 'மெல்லின்ஸ் புட்' தான் சாப்பிட்டு வளர்ந்தாள் என்றும் அபிப்பிராயம் இருந்திருக்கலாம். நமக்கு அவ்வளவு கற்பனை சக்தி இருப்பதில்லை. அழகான இந்தப் படங்களுக்குக் கண்ணாடி போடும்போது, கூடுமான வரையில் வேண்டாத விஷயத்தை மறைக்கப் பார்க்கிறோம்; முடியாவிட்டால் உள்ளபடியே கண்ணாடி போட்டு மனக் குறையுடன் மாட்டிக் கொள்கிறோம்.

* *

ராஜாஜீ வாழ்க்கை: *ராஜாஜீ 1879-ஆம் வருஷத்தில் பிறந்தவர். வடகலை வைஷ்ணவ சமூகத்தில் நல்லான் சக்கரவர்த்தி யென்னும் பெரியாரின் வழியில் வந்தவர். ஆனால், வாழ்க்கையில் 'எல்லோரும் ஒரு குலம்' என்னும் கொள்கையைத் தீவிரமாய்ப் பின்பற்றி, ஜாதி பேதங்களையும் தீண்டாமையையும் தகர்க்க உழைப்பவர். சேலம் ஜில்லாவில் ஹோசூர்த் தாலூக்காவிலுள்ள ஒரு சிறு கிராமந்தான் இவர் பிறந்த ஊர். முதலில் பங்களூரிலுள்ள சென்ட்ரல் காலேஜிலும், பின்பு, சென்னை ராஜதானிக் கலாசாலையிலும் இவர் தமது உயர்தரக் கல்வியைப் பயின்றார். பிறகு, சென்னைச் சட்டக் கலாசாலையில் சட்டப் படிப்புப் பயின்று, சேலத்தில் ஒரு வக்கீலாகத் தம் வாழ்க்கைப் போரைத் தொடங்கினர். அந்தத் தொழிலில் கூடிய சீக்கிரத்தில் முதன்மை ஸ்தானமும் பெருத்த வருவாயும் அடைந்தார் என்று 'பாரதமணி' யில் வே. ரா. சுந்தரராமன். எம்.ஏ. எழுதுகிறார்:*

அக்காலத்தில் சேலம் ஜில்லாவின் ஊர்களுள் ஒன்றில் தெருவின் வழியே இருவர் பேசிக்கொண்டிருக்கையில், ஒருவன் மற்றவனைப் பார்த்து, 'ஏலே, உன்னெ குத்திக் கொன்னு போட்டுடு வேண்டா' என்பானும். மற்றவன் அதற்கு, 'நீ அப்படிச் செஞ்சா ஒன்னேச் சர்க்கார்லே தூக்குப் போட்டுட மாட்டாங்களாடா?' என்று பதிலளிப்பான். 'அட போடா பைத்தியக்காரா! அரச மரத்தய்யிரு இருக்கச்சே எனக்கென்னடா பயம்?' என்பானும் கொலை செய்வதாக மிரட்டிய முதல் ஆசாமி. இந்தச் சம்பாஷணையில் 'அரச மரத்தய்யிரு' என்று குறிப்பிடப்பட்டவர் வக்கீல் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்தான்! கொலை வழக்குகளை வாதிப்பதில் ராஜாஜி அவ்வளவு நிபுணராம்.

வக்கீல் தொழிலை இவர் 1900 முதல் 1918-ஆம் ஆண்டு வரையிலுள்ள 18 வருஷங்கள் சேலத்தில் நடத்தியபின், 1919-ஆம் வருஷத்திலிருந்து சிறிது காலம் சென்னையிலும் நடத்தினர். 1920-ஆம் வருஷத்தில் மகாத்மா காந்தி வகுத்த பகிஷ்காரத் திட்டப்படி, இவர் தம் வக்கீல் தொழிலைத் துறந்தார். அப்படித் துறந்தவர் நாளது வரையில் அதை மீண்டும் தொடங்காமலே இருக்கிறார்.

* *

விவேகானந்தரின் தீரம்: ஒரு தடவை விவேகானந்த ஸ்வாமிகள் ஐரோப்பாவில் ஒரு நகரத்தில் சென்று கொண்டிருந்தார். இவருடன் அந்த நாட்டைச் சேர்ந்த ஒரு கனவானும் ஒரு சகோதரியும் சென்று கொண்டிருந்தார்கள். அச்சமயம் நடந்த ஒரு சம்பவத்தைக் 'கலைமகள்' ளில் தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார், பி.ஏ. பி.எல். சொல்லுகிறார்:

மதம்பிடித்த ஒரு மாடு கட்டுக்கு மீறி எதிர்ப்பவர் அனைவரையும் குத்தி எறிவதுபோல் சீறி வந்து கொண்டிருந்தது. மாடு தங்களை நோக்கி ஓடி வருவதைப் பார்த்த அம்மாது பயந்து மயங்கி விழுந்துவிட்டாள். அந்த மனிதர் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள, அருகில் இருந்த ஒரு மரத்தின்மேல் ஏறிக்கொண்டார். ஸ்வாமிகள் மாத்திரம் அதைச் சாவதானமாக எதிர்த்து நின்றார். வேகமாக வந்த மாடு சட்டென்று நின்றது; அதற்குமேல் திரும்பிச் சென்றது. மங்கையின் மயக்கம் தெளிவிக்கப்பட்டது. மரத்தின் மேல் இருந்த மனிதரும் இறங்கி வந்தார். "மாடு தங்களைக் குத்தி எறிந்துவிடுவதுபோல் வந்ததே; அச் சமயம் தங்கள் மனத்தில் என்ன எண்ணம் தோன்றிக் கொண்டிருந்தது?" என்று அவர்கள் கேட்டார்கள். "மாடு வந்த வேகத்தில் என்னைக் குத்தி எறிந்தால், என்னைப்போன்ற கனமான சரீரம், எவ்வளவு உயரத்துக்குப் போகும் என்று யோசனை செய்து கொண்டிருந்தேன்" என்று ஸ்வாமிகள் பதிலளித்தாராம்!

* *

தன் கையே தனக்குதவி: நெவின்ஸன் என்ற ஓர் ஆங்கில அறிஞன் கூறுகிறான்:—"அயலார், நமக்குப் புத்திசாலித் தனமாக வழி காட்டிக்கொண்டு செல்ல, அதைப் பின் பற்றி நாம் நாசூக்காக நடந்து செல்வதைக் காட்டிலும், நாமே நம்முடைய சுய சக்தியைக் கொண்டு, சுய பலத்தைக் கொண்டு முன்னுக்குவர, கண் மூடித்தனமாகவோ வீணாகவோ போராடுவதுதான் சிலாக்கியமானது. இந்த வாசகம், ஒரு மனிதனுக்கு எப்படிப் பொருந்துகிறதோ அப்படியே ஒரு ஜாதிக்கும் பொருந்தும்." இந்த வசனத்தைச் சுட்டிக் காட்டும் 'ஜோதி' பின்வருமாறு இடித்துரைக்கிறது:

அயலார் நமக்குச் சுதந்திரம் கொடுக்கவில்லையே யென்று எது வரையில் நாம் ஏங்கிக் கொண்டிருக்கிறோமோ, அயலாருடைய மனத்தைப் பண் படுத்துகிற முயற்சியிலே நாம் எது வரையில் ஈடுபட்டிருக்கிறோமோ, ஆளப் படுவோருடைய பலஹீனந்தான் ஆள்வோருடைய பலம் என்பதை நாம் எதுவரையில் உணராம லிருக்கிறோமோ அதுவரையில், நாம், அதாவது பாரதஜாதி, அமைதியிலே இன்பம் நுகர்ந்து கொண்டிருக்க வேண்டியதுதான். ஆனால், அமைதியே சுதந்திரமாகாது.

இனிப்புத் தின்பண்டங்களுக்கிருக்கும் கெட்ட குணம் கற்கண்டுக்கு இல்லை. அதுபோல, தாஸாபிமானம், பக்தாபிமானம் இருப்பதில் தீங்கொன்று மில்லை. அவை ஒருவனை ஈசுவரன் சமீபத்தில் கொண்டு சேர்க்கும். இதுதான் பக்தியோக மெனப்படும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

புத்தக உலகம்

கலேஞன் தியாகம் : ஆசிரியர் : கி. வா. ஜகந்நாதன். வெளியிட்டோர் : கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர். விலை : ரூ. 1—8—0.

இதில் பதினெட்டுச் சிறு கதைகள் இருக்கின்றன. காதல், குழந்தை மனேதத்துவம், சோகம், தியாகம் இப்படியாகப் பல உணர்ச்சிகள், பல மனப்பண்புகள் இவைகளை விஸ்தரிக்கும் பல விதக் கற்பனைகள். நவரஸ பரிதமான கதைகள். ஒன்றிரு அமானுஷ்யக் கற்பனைகளுள்பட, பல தினிசும் பல வகையுமாய் அமைந்துள்ள இவை படிக்க இனிமையாயிருக்கின்றன. தெளிந்த, மாசுமரு வற்ற நடை. அழகான பதிப்பு.

*　　*

கமலா : ஆசிரியர் : ஆர். திருஞான சம்பந்தம். வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், ஜி. டி., சென்னை. விலை: ரூ. 1—0—0.

பதினேழு சிறுகதைகள் அடங்கிய புத்தகம். உள்ளத்தை இளக்கும் நிகழ்ச்சிகளும் மனங்கவரும் வர்ணனைகளும் இனிய சம்பாஷணைகளும் கதைகளில் நிறைந்திருக்கின்றன. பாத்திரங்கள் அனைவரும், அநேகமாய் உணர்ச்சிக் களஞ்சியங்கள்தான். காட்சிகளெல்லாம் தமிழ் நாட்டுக் காட்சிகள்; பழக்க வழக்கங்கள் தமிழுக்கே உரியவை. ரஸமான கதைகள்.

*　　*

தோட்டியை மணந்த அரசகுமாரி : ஆசிரியர் : தி. நா. சுப்பிரமணியன். வெளியிட்டோர் : அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர். விலை : ரூ. 1—8—0.

கதைகள் புனைவதிலே, சரித்திரத்தில் வரும் ஒரு கதையையோ சம்பவத்தையோ ஆதாரமாய் வைத்துக்கொண்டு, சரித்திரப் பகைப்புலனேடொட்டி எழுதுவது ஒரு வகை. இந்திய சரித்திர நிகழ்ச்சிகளை அவ்விதம் ஆதாரமாய்க் கொண்ட பதினைந்து சிறுகதைகள் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன. வீரமும் தியாகமும் காதலும் நிறைந்த இந்தக் கதைகள் ரசனை மிகுந்து பொலிகின்றன. கதா ஸ்வாரஸ்யம் நிரம்பியிருக்கின்றன. எளிய நடை.

*　　*

முப்பெருந் தலைவர் : ஸ்ரீ அரவிந்தர் அருளியது. மொழிபெயர்ப்பாசிரியர் : பி. கோதண்டராமன், எம். ஏ., பி. எல். வெளியிட்டோர் : நவயுகப் பிரசுராலயம், ஜி. டி., சென்னை. விலை : அணு 10.

வங்காள நாவலாசிரியர் பங்கிம், இணையற்ற இந்தியத் தலைவர் லோகமான்ய திலகர், தயானந்த ஸ்வாமிகள் இம் மூவரையும் பற்றி, பாபு அரவிந்தர் எழுதியுள்ள மூன்று ஆராய்ச்சிக் கட்டுரைகள் இதில் அடங்கியுள்ளன. இந்த முப்பெருந் தலைவர்களின் ஸேவைகளையும் பண்புகளையும், தமக்கேயுரிய தனித்ததொரு விசார சக்தியுடன் அரவிந்தர் விமர்சனம் செய்கிறார். பல தத்துவங்களே அவருடைய உரைகற்கள். அவை உராயும்போது, அங்கே பல சிந்தனைப் பொறிகள் தெறித்துப் பறக்கின்றன. அருங்கருத்துக்களும் தேச பக்தியும் கலந்து, சிந்தனைக்கு உணவாக இலங்கும் நூல்.

*　　*

கம்பர் யார் : ஆசிரியர் : டி. கே. சிதம்பரநாத முதலியார். வெளியிட்டோர் : புதுமைப் பதிப்பகம், 3, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை. விலை : ரூ. 1—0—0.

கம்ப ராமாயணம் உலகிற் சிறந்த தொரு மகா காவியம். அதைப்பற்றிய தோர் அரிய ஆராய்ச்சி நூல் இது. ஆராய்ச்சி என்றால், அடியிலிருந்து நுனிவரையில், கம்ப ராமாயண விளக்கமல்ல. எந்தப் பொதுத் தத்துவங்களைக் கொண்டு கம்பனை அணுகவேண்டுமோ அந்தப் பொதுத் தத்துவங்களை, டி. கே. சி. எட்டுக் கட்டுரைகளில் விளக்குகிறார். குழந்தைகளும் புரிந்து கொள்ளத்தக்க முறையில், உயர்ந்த காவிய சூட்சுமங்களை அவர் தெளிவுபடச் சொல்கிறார். பொருளும் சுவையும் பொதிந்த கட்டுரைகள்.

*　　*

அனுபமா : மூல ஆசிரியர்: சரத் சந்திர சட்டோபாத்யாயா. மொழிபெயர்த்தவர் : வித்வான் ச. வி. ஸ்ரீனிவாஸ சர்மா. வெளியிட்டோர் : சூடாமணிப் பிரசுராலயம், கோபாலபுரம், சென்னை. விலை : அணு 8.

காதலின் மனக்குழைவை அனுபமா தாங்கி நிற்கிறது. தன்னிடம் காதல் கொண்ட லலித மோஹனைச் சிறைக்கு அனுப்ப, அனுபமா உதவுகிறாள். ஆனல், தான் காதல்கொண்ட சுரேசனை அவள் அடையவில்லை. முகூர்த்த நேரத்திலே மோசம்செய்து அவன் சென்று விடுகிறான். கிழவனுக்கு வாழ்க்கைப் பட்டு அமங்கலியான அனுபமா, மாற்றாஞ் சகோதரனுடைய கொடுமை தாளமுடியாமல், உயிரை விடத் துணிந்து குளத்தில் விழுகிறாள். பழைய லலித மோஹன் காப்பாற்றுகிறான். இது தான் கதை. எளிமையும் அழகும் செறிந்த நடையில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது.

*　　*

ஸீதா கல்யாணம் : தொகுப்பாசிரியர்: தொ. மு. பாஸ்கரத்தொண்டமான், பி. ஏ. வெளியிட்டோர் : கம்பன் கழகம், காரைக்குடி. விலை : அணு 12.

இதிலே கம்பனுடைய நூறு பாடல்கள் அடங்கியுள்ளன. பொறுக்கி யெடுத்த பாடல்கள். தொடர்ச்சி தெரிவதற்காக, இடையிடையே வசன நடையில் கதைப் போக்கு விளக்கப்படுகிறது. எடுத்த எடுப்பிலே பெரிய கம்ப ராமாயணத்தை வைத்துக்கொண்டு யாரும் விழிக்காமல், கம்பனை இம்மாதிரி சிறிது சிறிதாய்ப் பரிச்சயம் செய்து வைக்கும் முயற்சி பாராட்டத்தக்கது தான்.

பாலர் பாட்டு :

குருவித் தம்பதிகள்

'ஜீவன்'

ஆணும் பெண்ணும் கூடி ஜோடி
யாக வாழ்வோமே—சென்று
கானு மலர்த் தேனருந்திக்
களித்து மீள்வோமே.

ஆணும் பெண்ணும் அரைக்கணமும்
அயலை நாடாமே—நாங்கள்
பூணும் மண விரத மிற்றுப்
போக விடோமே.

பாமணக்குங் கீதம் பாடிப்
பறந்து செல்வோமே—நாங்கள்
தேமணக்குஞ் சோலை யெங்குஞ்
சேர்ந்து செல்வோமே.

அயல் குருவி உடைமையின் மேல்
ஆசை கொள்ளோமே—பழிச்
செயல் புரிந்து நீதிச்சாலை
சென்று நில்லோமே.

இலை யொடிலை சேர்த்திணைத்து
இருப்பிடஞ் செய்வோம்—சிற்பக்
கலைஞர்களும் வியந்து திறங்
கண்டிடச் செய்வோம்.

பருவத்திலே முட்டை யிட்டுப்
பாதுகாப் போமே—நாங்கள்
கருவங் கொள்வோம்; குஞ்சு கண்டு
களிப்புங் கொள்வோமே.

தேடிப் பல சத்துணவைச்
சேர்த் தளிப்போமே—பின்னர்,
பாடியவை அருகிருந்து
மனங் களிப்போமே.

நலமடையும் மார்க்க மெலாம்
நவின்றிடு வோமே—அவை
பலமடைந்தால் பறக்க விட்டுப்
பறந்திடு வோமே!

பாலர் கதை :

விகடம் தெரியாத விகடன் — 'நீலா'

முன் காலத்திலே, ராஜாக்களிடம் விகடகவிகள் இருப்பது வழக்கம். ஒரு சோழ ராஜாவிடமும் ஒரு விகடகவி இருந்தார். விகடராமன் என்று அவருக்குப் பெயர். அவர் ரொம்பக் கிழவர் ஆகிவிட்டார். விகட வேலையை விட்டு, நந்தவனம் பயிரிட எண்ணினார். பூக்களை ஸ்வாமிக்கு அணிந்து, 'கிருஷ்ணா, ராமா!' என்று கடவுளை வணங்கிக் காலங் கழிக்க நினைத்தார்.

ஆனால், அவரை ராஜா விடவில்லை: "உமக்குப் பதிலாக வேறொரு விகட கவியைக் கொண்டு வாரும். அப்புறம் தான் நீர் போகலாம்" என்று அரசர் சொன்னார்.

"எனக்கு வயதாகிவிட்டது. என்னை விட்டுவிடும்படி நீயாவது உன் அப்பாவிடம் சொல்லமாட்டாயா?" என்று, ராஜகுமாரியிடம் விகடராமர் சொன்னார்.

அவளுக்கும் இஷ்டமில்லை. "யாரோ வங்க நாட்டு ராஜகுமாரனாம். அவன் பெரிய முட்டாளாயிருக்கிறான். அவனை நான் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமாம். என் அப்பா அப்படிச் சொல்கிறார். அந்த மூடனைக் கலியாணம் செய்துகொண்டால், எனக்குப் போதே போகாது. நீங்களும் போய்விட்டால், நான் என்ன செய்வேன்? நீங்கள் போகலாகாது" என்று ராஜகுமாரி கெஞ்சினாள்.

விகடராமருக்கு வழியில்லை. இன்னொரு விகடனை ஊரெல்லாம் தேடினார். ஒருவரும் அகப்படவில்லை. ரொம்ப வருத்தத்தோடு, அரண்மனைவாசலில் உட்கார்ந்திருந்தார்.

அப்போது அங்கே ஒருவாலிபன் வந்தான். அவன் மிக்க அழகாயிருந்தான். ஆனால், கந்தல் துணி உடுத்தியிருந்தான்.

அவனைப் பார்த்து, "நீயாரப்பா?" என்று விகடராமர் கேட்டார்.

"நான் பாண்டிநாட்டு ராஜகுமாரன். யாரோ கலிங்க தேசத்து ராஜகுமாரியாம். அவள் மிக்க அவலட்சணம். அவளை நான் மணக்க வேண்டுமாம். என் அப்பா அப்படிச் சொல்கிறார். ஆகையால், இப்படிப் பரதேசியாய் வந்துவிட்டேன். எனக்குப் பிடிக்காத பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டு, பட்டத்திளவரசனாயிருப்பதைவிட, எங்கேயாவது ஓடிப் பிழைப்பது மேல்" என்றான் அந்த வாலிபன்.

"நீ என்ன வேலை செய்வாய்?"

"என்ன வேலை யானாலும் செய்யத் தயார்."

"விகடகவி வேலை பார்ப்பாயா?"

"ஆஹா."

விகட ராமருக்கு ரொம்ப ஸந்தோஷமாயிற்று. இந்த வாலிபனை ராஜாவிடம் விகடராமர் கொண்டுபோய்விட்டார். "இனி இவன் உங்களுக்கு விகடம் செய்வான். எனக்கு விடைகொடுங்கள்" என்று வேண்டினார்.

ராஜாவும் விடை கொடுத்தார்.

ஆனால், புதிய விகடகவிக்கு விகடம் செய்யத் தெரியவேயில்லை. ராஜாவும் ராஜாத்தியும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார்கள். அவன் வாய் திறக்கவேயில்லை.

கடைசியிலே, ராஜாவுக்குக் கோபம் வந்துவிட்டது. "விகடராமன் என்னை ஏமாற்றிவிட்டான். இவனையும் அவனையும் ஓர் இருட்டறையில் கொண்டுபோய் அடைத்து வையுங்கள்" என்று வேலையாட்களிடம் உத்திரவு போட்டுவிட்டார்.

ராஜாவின் வேலைக்காரர்கள் அப்படியே இந்த இருவரையும் பிடித்துச் சிறையில் அடைத்தார்கள்.

சிறைக்குள்ளே ராஜ குமாரனைப் பார்த்து, "ஐயோ! உன்னால் எனக்கும் இந்தக் கதி வந்துவிட்டதே. தெரியாத வேலையை ஒப்புக் கொண்டால் இந்தக் கதி தான் நேரும். உனக்கு என்ன வேலைதான் தெரியும்? அதையாவது சொல்லேன்" என்றார் விகடராமர்.

"நன்றாய்ப் பாடுவேன்" என்றான் ராஜகுமாரன்.

"எங்கே, பாடு பார்க்கலாம். அதைக் கேட்டாவது, கொஞ்சம் நமது கவலையை மறக்க

லாம்" என்று சொன்னார் விகடராமர்.

ராஜகுமாரன் பாடினன். மகா அற்புதமாய்ப் பாடினன். விகடராமர் மெய்மறந்து கேட்டார். காவல்காரர்களும் சொக்கிவிட்டார்கள். மெல்லத் தலையை உள்ளேவிட்டுப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இந்த ஸமயம், ராஜாவுக்குப் போது போகவில்லை. "ஜெயிலில் இருக்கும் விகடராமனைக் கூட்டிவா. அப்போதுதான் எனக்குப் பொழுதுபோகும்" என்று ஒரு வேலையாளை அனுப்பினர்.

சிறைக்கு வந்த வேலையாள், இங்கே பொழிந்த சங்கீதத்தைக் கேட்டுப் பரவசமானன். வந்த வேலையை மறந்து அப்படியே நின்றுவிட்டான்.

ராஜா பார்த்தார். போன ஆள் வராதது கண்டு, ஆத்திரமடைந்து, பிரதானியை அனுப்பினர். அவரும் பாட்டில் மயங்கிவிட்டார்.

பிரதானியும் திரும்பாதது கண்ட ராஜா, முதல்மந்திரியை அனுப்பினர். அவரும் திரும்பி வரவில்லை.

அப்புறம் சேனதிபதியை ராஜா அனுப்பினர். சேனதிபதியும் சங்கீதத்தில் தன்னை மறந்தார்.

கடைசியில் ராஜாவே புறப்பட்டு வந்தார். "எல்லாரையும் தொலைத்து விடுகிறேன்" என்று ஆத்திரத்தோடு வந்தார். ஆனல், அவரையும் பாட்டு மயக்கிவிட்டது.

பாட்டு முடிந்த பிறகுதான், எல்லாருக்கும் தன் னினைவு வந்தது. ராஜாவுக்குக் கோபமெல்லாம் போய்விட்டது. வாலிபனை விசாரித்தார். பாண்டி நாட்டு ராஜகுமாரன் என்று அறிந்தார். சந்தோஷமுற்றார். தம்முடைய பெண்ணை இவனுக்கே மணம் செய்து கொடுத்துவிட்டார்.

—

புயல் படைக்கும் குழாய்



இந்தப் பிரம்மாண்டமான அசுரக் குழாய், பெரும் புயலைச் சிருஷ்டித்து விடுகிறது. பிரிட்டிஷ் விமானப் படையார், தங்களுடைய புது விமானங்களைப் பரிட்சித்துப் பார்க்க, இந்த இயந்திரத்தை உபயோகிக்கிறர்கள். இதிலுள்ள ஒவ்வொரு சிறு துவாரத்திலும் ஒரு மின்சார விசிறி இருந்து கொண்டு காற்று வீசுகிறது. அந்தப் பல விசிறிகளின் காற்றும் ஒன்று சேர்ந்து பெருங்காற்றகிறது. அந்தக் காற்றைச் சமாளித்துக் கொண்டு செல்லும் விமானங்களே உறுதியானவை என்று தீர்மானிக்கிறர்கள்.

* * *

குருடருக்கு மின்சாரக் கண்

நியூயார்க் நகரில் குருடருக்கு உதவி புரியும் ஒரு மின்சாரக் கண்ணைப் பலவிதமாய் உபயோகிக்கிறர்கள்.

குருடர் நிலையத்தில் இம்மாதிரி கண் ஒன்று இருக்கிறது. அந்த நிலையத்துக்கு அருகாமையில் யாராவது ஒரு குருடர் வந்தால், அவர் உடம்பிலிருந்து ஓர் ஒளிக்கதிர் புறப்பட்டு அந்த மின்சாரக் கண்மீது விழுகிறது. உடனே ஒரு 'லவுட் ஸ்பீக்கர்' பேச ஆரம்பித்து, "இது குருடர் நிலையம்" என்று அறிவிக்கிறது. பின்பு ஒரு சங்கீதம் கிளம்புகிறது. அந்த ஸங்கீதத்தைப் பின்பற்றிச் சென்று, நிலையத்தின் கதவைக் குருடன் அடைகிறன்.

குருட்டு வியாபாரிக்கும் அந்தமாதிரி கண் உதவுகிறது. யாராவது கடைக்கு வந்தாலும், கடையிலிருந்து சென்றலும், அது இவ்வாறே 'லௌட் ஸ்பீக்கர்' மூலம் குருடனுக்கு அறிவிக்கிறது. இரண்டு மூன்று பேர் தொடர்ந்து வந்தால், அதைக்கூட அது அறிவித்து விடுகிறது!

★ ஒலியும் நிழலும் ★

சங்கமாலா : முதலாவது பர்மிய வனப்படமாகிய சங்கமாலா இம் மாதம் 30வயிலிருந்து தென்னிந்தியாவில் திரையிடப் படும். இதனுடன் நான்கு துண்டுப் படங்களும் காண்பிக்கப்படும்.

(1) சமீபத்தில் நடந்த பர்தோலிக் காங்கிரஸ் கூட்டம்.

(2) பண்டித நேருவின் பர்மா-சீனப் பிரயாணப் படம்.

(3) இந்திய க்ஷேத்திர யாத்திரை—இந்தியாவில் முக்கிய யாத்திரை க்ஷேத்திரங்கள்.

(4) பொற்கோவில் நிறைந்த பர்மா நாடு—பர்மியர் நடனம், பாட்டு, விளையாட்டு, கோவில், உற்சவம் முதலியவை நிறைந்தது.

பல அம்சங்கள் இந்த புரோகிராமில் அமைந்திருக்கின்றன.

*　　*

பிரபாவதி சிறந்த முறையில் பிராக் ஜோதி ஸ்டூடியோவில் தயாரிக்கப்பட்டு வருகிறதாம். எஸ். எஸ். ராமச்சந்திரன் டைரக்ட் செய்யும் இந்தப் படத்தில் எஸ். பி. எல். தனலட்சுமி, டி. ஆர். ராஜகுமாரி, என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம் முதலியோர் நடிக்கிறார்கள்.

*　　*

வனப்புமிக்க **வனமோஹினியில்** தவமணியும் யானை சந்துருவும் மற்றுமுள்ள நடிகர்களும் நன்கு நடித்திருக்கிறார்கள். இயற்கைக் காட்சிகளும் இனிய பாடலும் சேர்ந்திருக்கின்றன.

*　　*

தை பிறக்க வழியும் பிறந்தது என்ற சந்தோஷம், **நியூ ஈரா பிலிம்ஸ் கந்தன் ஸ்டூடியோவின் காரைக்காலம்மையார்** தயாராகும் செய்தி கேட்டதும் உண்டாகிறது. பெரிய புராணத்தில் உள்ள இந்த அரிய சரிதத்துக்கு, தி. ஜ. ர. சம்பாஷணை எழுதுகிறார். பி. எஸ். செட்டியார் இதை டைரக்ட் செய்கிறார்.

*　　*

உதய சங்கர், கலையை உயர்த்தும் நோக்கத்துடன் சினிமாவில் நடிப்பதானால் நடிப்பாராம். தம்முடைய கலாபிமானத்தை, ஒரு பேட்டியின்போது அவர் தெரிவித்திருக்கிறார். வெறும் நட்சத்திரமாவதற்கு அவர் ஒருக்காலும் நடிக்க மாட்டாராம்.

'தமிழறியும் பெருமா'ளில் நடிக்கும் எம். ஆர். சந்தானலட்சுமி

நியூடோன் ஸ்டூடியோவில் உமா பிக்சர்ஸின் தயாரிப்பான **தமிழறியும் பெருமாள்** சிறப்பாக வளர்ந்து வருகிறது. டி. ஆர். ரகுநாத் டைரக்ட் செய்யும் இந்தப் படத்துக்கு 'இளங்கோவன்' கதை, வசனம் எழுதி யிருக்கிறார். உள்ளத்தைக் கவரும் சித்திரமாக இருக்குமாம்.

*　　*

பிரகதி பிக்சர்ஸின் தயாரிப்பான **சபாபதி** விமர்சையாக வெளியூர்களில் ஓடிக்கொண்டிருக்கிறது. காளி ரத்னம், டி. ஆர். ராமச்சந்திரன், கே. சாரங்கபாணி முதலியோர் நடித்துள்ளார்கள். டிஸ்டிரிபியூடர்கள்: சௌத் இந்தியா பிக்சர்ஸ், சென்னை.

*　　*

நமது **சக்தியில்** வெளிவரும் **ஜமீந்தாரிணி** (காசிநாத்) கதை நிதின் போஸ் டைரக்ட் செய்யும் அடுத்த படமாம். சில புது முகங்களை அதில் காணலாமாம்.

*　　*

'பிரிதிவிராஜ்' என்னும் சரித்திரப் படத்தை ஸென்ட்ரல் ஸ்டூடியோக்காரர்களும் ஹரன் டாக்கீஸாரும் சேர்ந்து எடுக்கப் போகிறார்களாம். பிரபல நடிக நட்சத்திரங்கள் இதில் தோன்றுவார்கள்.

*　　*

ஆனந்தன் வெளியூர்களில் ஆனந்தமாக ஓட ஆரம்பித்து விட்டது. யோகி பிலிம்ஸாரின் இந்தச் சிறப்பு மிகுந்த படத்தில் கிருஷ்ண காந்தன், மாயவரம் சரஸ்வதி, எஸ். டி. ஆர். சந்திரன், எம். பி. மணி, குஞ்சிதபாதம் பிள்ளை, பி. ஆர். மங்களம் முதலியோர் சிறப்பாக நடித்திருக்கிறார்கள்.

*　　*

செல்லம் டாக்கீஸின் தமிழ்ப் புராணப் படமான **அல்லி விஜயம்** சிறந்து விளங்குமெனத் தெரிகிறது. இனிய நடிப்பு, அரிய பாடல்கள், நல்ல காட்சிகளை இதில் காணலாம். ரத்னபாய், சரஸ்வதிபாய் இருவரும் நன்றாய் நடித்திருக்கிறார்களாம். கூடிய சீக்கிரம் திரைக்கு வரும்.

*　　*

வனமோஹினியைத் தயாரித்த ஸ்ரீ என். விசுவனாதையர் **சாந்தி முகூர்த்தம்** என்ற படத்துக்கு வெகு மும்முரமாக ஆயத்தம் செய்து வருகிறார் எனத் தெரிகிறது. மனித வாழ்வைச் சித்தரிக்கும் இந்தப் படத்தில் நவரஸங்களையும் அனுபவிக்கலாமாம்.

*　　*

'இளங்கோவன்' சொந்தமாக ஒரு சரித்திரப் படம் எடுக்கப் போகிறாராம். சினிமாவில் நல்ல பழக்கமுடைய இவருடைய படம் புகழுக்கு உரியதாயிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

*　　*

லட்சுமிகாந்தனில் புத்தப்புது நட்சத்திரங்களைக் காணலாமாம். சந்திரா பிக்சர்ஸின் இந்த ஸமூகப் படத்தை ராஜா சாண்டோ டைரக்ட் செய்கிறார்.

*　　*

அழகு ராணி எனப் பெயர் பெற்றவர் நஸீம். சௌந்தர்ய

தேவியே உருக்கொண்டு பூவுலகைக் களிப்புறுவிக்க ஜனனம் செய்து விட்டாள் எனப் பலராலும் போற்றப்படுகிறவர் நஸீம். **பிலிம் இந்தியாவில்** ஒருவர் நஸீமை இவ்வாறு வர்ணிக்கிறார்: "நவநவமாக வளையல்களை வாங்கி அடுக்கடுக்காக நஸீம் அணிந்து கொள்வார். நஸீமை ஊதாரி என்றுதான் சொல்ல வேண்டும். ஆயிரம் புடவைகளுக்குமேல் அவரிடம் இருந்தும் இன்னமும் புடவை வாங்கிக் கொண்டே இருக்கிறார். நஸீமுக்கு வாசனைத் திரவியங்களில் அளவற்ற மோகம். பலவித வாசனைகள் அடங்கிய ஒரு சிறு பெட்டியும் அவரிடம் இருக்கிறதாம். அதில் ஐந்நூறு ரூபாய்க்கு மேற்பட்ட வாசனைச் சாமான்கள் இருக்கின்றனவாம். நஸீம் இம்மாதிரி ஒரு சுகவாஸி."

*　　*

ஆராய்ச்சிமணி அதி விரைவில் திரைக்கு வருகிறதாம். கோவை கந்தன் அண்டு கம்பெனியின் தயாரிப்பான இதை ரகுபீர் எஸ். ரம்யா டைரக்ட் செய்கிறார்.

*　　*

மதனகாம ராஜன் சிறப்பாய் ஓடுகிறது. இனிமையான பாடல்களும், நல்ல நடிப்பும், சிறந்த காட்சிகளும் அதில் இருக்கின்றன.

*　　*

பாலாஜி பிக்சர்ஸார் வினியோகிக்கும் **பஞ்சாமிர்தம்** படத்தில் ஒப்பற்ற நட்சத்திரங்கள் காட்சி அளிக்கிறார்கள். பாலாஜி, ஈசுவர் பிலிம்ஸின் இந்தத் தயாரிப்பை **ஜித்தன் பானர்ஜி** டைரக்ட் செய்கிறார். ஸ்டூடியோ: நியூடோன்.

*　　*

விஜய மாருதி பிக்சர்ஸாரின் **சாந்தாவில்** பல திடுக்கிடும் சம்பவங்களையும், உள்ளம் உருக்கும் காட்சிகளையும் காணலாம்.

*　　*

ஜாதியா, பக்தியா என்ற பிரச்சனையைத் தீர்க்கும் **சோகா மேளா** படத்தை வி. வி. ராமன் டைரக்ட் செய்கிறார். விஜய மாருதி ரிலீஸ்.

*　　*

பாரத் மூவிடோனில் புல்லையா டைரக்ட் செய்யும் **பாக்யலட்சுமி** விரைவாகத் தயாராகிறது.

'அல்லி விஜய'த்தில் நடிக்கும் சரஸ்வதி பாய்

நாகையா, சூரியகுமாரி முதலியோர் நடிக்கிறார்கள்.

*　　*

ஏராளமான பொருள் செலவில் தயாராகும் ஸ்ரீ மீனாட்சி பிலிம் கம்பெனியில் **சதீசுகன்யா** ஒரு பெருத்த வெற்றியாயிருக்கும் என நம்பலாம். மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டூடியோவில் வளரும் இதில் டி. ஆர். ராஜகுமாரி, ஹொன்னப்ப பாகவதர் முதலியோரைக் கண்டு களிக்கலாம்.

*　　*

தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையின் போஷகராக இருக்க, செட்டிநாட்டு ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் ஒப்புக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

கந்தன் கம்பெனியாரின் இரண்டாவது மகத்தான புராணப்படம் **பூம்பாவை**. வளருமிடம் கந்தன் ஸ்டூடியோஸ்.

*　　*

ஜெமினி ஸ்டூடியோவில் ஜெமினி தயாரிப்பும் ஜெமினி ரிலீஸுமான **பால நாகம்மா** (தெலுங்கு)வில் காஞ்சனமாலா, புஷ்பவல்லி முதலிய மற்றும் பலர் நடிப்பார்கள். படத்தை ஸி. புல்லையா டைரக்ட் செய்கிறார்.

*　　*

ஜெமினி ஸ்டூடியோவில் மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷன் தயாரித்த **அனந்தசயனம்** விரைவில் வெளிவரும். அதை நேர்த்தியாக டைரக்ட் செய்திருப்பதோடு, ஸ்ரீ கே. சுப்ரமண்யம் மிக அருமையாக அதில் நடித்துமிருக்கிறார்.

*　　*

படம் பார்க்கும் புதிய சினிமா தியேட்டர் ஒன்று ஜெமினி ஸ்டூடியோவுக்குள் கட்டப்பட்டிருக்கிறது. இதைக் கட்டி முடிக்க 40,000 ரூபாய் வரை செலவாயிற்றாம். தற்போது சென்னையிலிருக்கும் தியேட்டர்களில் பெரும்பாலானவைகளைவிட இது அதிக அழகாக விளங்குகிறதாம். ஜெமினி ஸ்டூடியோவிலேயே தயாராகும் படங்களின் காட்சிகளை அவ்வப்போது போட்டுப் பார்ப்பதற்கும், படங்களின் பிரத்யேகக் காட்சிகளை நடத்துவதற்கும் இந்தத் தியேட்டர் உபயோகிக்கப்படுமாம்.

அநாமதேயக் கடிதம்

ஒரு பிரபல பாதிரியார். ஹென்ரி வார்டு பீச்சர் என்பது அவர் பெயர். பிளிமத் தேவாலயத்தில் ஒரு சமயம் அவர் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்.

அப்போது உறையிட்ட கடிதம் ஒன்று அவருக்கு வந்தது. "முட்டாள்!" என்ற ஒரே வார்த்தைதான் அதில் இருந்தது. பாதிரியாரிடம் துவேஷங் கொண்ட யாரோ எழுதிய கடிதம்.

பாதிரியார் வெகு அமைதியாக, அந்தக் கடித விஷயத்தை ஸபையோருக்கு அறிவித்தார். அவர் சொன்னதாவது: "அநேகம் ஆசாமிகள் கடிதம் எழுதிக் கையெழுத்துப் போட மறந்து விடுவார்கள். அதை நான் கண்டிருக்கிறேன். ஆனால், இந்தக் கடிதக்காரரைப்போல் செய்தோரை நான் கண்டதில்லை. இவர் கடிதத்தை எழுத மறந்து விட்டார். ஆனால், கை யெழுத்தைமட்டில் போட்டிருக்கிறார். இது விந்தையல்லவா?"

கலை மிகுந்த சித்திரம்

திரைக்கு வரத்
தயாராய் இருக்கிறது!

கண்ணைக் கவரும் அமைப்புகள்!

கர்ணாமிர்தமான கானம்!!

வயிறுவெடிக்கும் தமாஷ்!!!

வேறென்ன வேண்டும்?

டைரக்டர்.
எச்.எஸ்.மேத்தா
M.P.E. (U.S.A)

அல்லிவிஜயம்



ஸ்ரீமதி.
பி.எஸ்.ரத்னபாய்
பி.எஸ்.சரஸ்வதிபாய்
எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி
காளி.என்.ரத்தினம்
டி.எஸ்.துரைராஜ்
கிருஷ்ணராவ்
அங்கமுத்து.
முதலியோர் நடித்தது

தயாரிப்பு
சுந்தரம்
ஸௌண்ட்
ஸ்டூடியோஸ்

புக்கிங்களுக்கு

செல்லம் டாக்கீஸ்

பிராஞ்சு:
ஜயா மான்ஷன்ஸ்
பி.டி., மதராஸ்

ஹெட் ஆபீஸ்:
மில்ரோடு
கோயமுத்தூர்

உண்மையான இன்பத்தை அனுபவிக்க

" டாக்டர் மஹாம்ப்ஸ் நைட் பில்ஸ்கள் "

உபயோகியுங்கள்

இவ்வுலகில் ஒவ்வொருவரும் பணக்காரனுயினும், ஏழையாயினும், ஆணுயினும், பெண்ணுயினும், யௌவனராயினும், வயோதிகராயினும், வீர்யத்துடனிருப்பதையே விரும்புவார்கள். அவர் யாருக்காவது வாழ்க்கையின் இன்பங்களை அனுபவிக்க முடியாதென்று தோன்றினுலோ அல்லது இனத்தின் இன்பங்களை அனுபவிக்க முடியாவிட்டாலோ, அல்லது நல்ல திடகாத்திரமுள்ள குழந்தைகள் பிறக்கவேண்டிய சக்தி இல்லாவிட்டாலோ அவர்கள் எப்பவும் **'' டாக்டர் மஹாம்ப்ஸ் நைட் பில்ஸ்களை ''** உபயோகிக்க வேண்டும். இந்த மாத்திரைகள் ஆச்சர்யமான குணத்தைக் கொடுக்கும். ஒவ்வொரு பெட்டியிலும் பத்து டோஸ்களிருக்கின்றன. வயது என்னவாயிருந்தாலும், விவாக வாழ்வின் இன்பங்களை பூரா திருப்தியுடன் அனுபவிக்க ஒரு டோஸ்கூடப் போதுமானது இன்றைக்கே **'' டாக்டர் மஹாம்ப்ஸ் நைட் பில்ஸ்கள் ''** ஒரு பெட்டி வாங்கி உபயோகித்துப் பாருங்கள். நீங்கள் முன்னுல் அனுபவிக்க முடியாத இன்பத்தை அது தரும் என்பதற்கு சந்தேகமில்லை. ஒரு பெட்டியின் விலை ரூபாய் 5. தபால் கூலி அணு 9. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஏஜண்டுகள் : **அப்பா & கம்பெனி**

அப்பா பில்டிங்ஸ், சைனு பஜார், மதராஸ்.

அனுபவ ஜோதிஷர்

திறமைக்கு தங்க மெடல்களும் நற்சாட்சிகளும் பெற்றவர், எதிர்காலத்தைப் பற்றி 3 கேள்விகளுக்கு ரூ. 1. பேல் கேள்வி 1-க்கு அணு 8. மாதவாரி ஒரு வருஷ பலன் ரூ. 5. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரொபஸர் காழியூர் கோவிந்தாச்சாரி

3/-, பிராடீஸ் ரோட், மயிலாப்பூர்

மதராஸ்

உயர்ந்த வைரங்கள்

புதுமாதிரி வைர நகைகளுக்கு

நம்பிக்கையான இடம்

உ. அ. அரு. அருணுசலம்

செட்டியார்

வைர வியாபாரம்

கல்லுக்கட்டி காரைக்குடி

எல்லா விதமான

தமிழ்ப் புத்தகங்களும்

எங்களிடம் கிடைக்கும்

புத்தக விலைப் பட்டியல்

வேண்டுவோருக்கு அனுப்பப்படும்.

மானேஜர்

சக்தி காரியாலயம்

G. T, சென்னை

காண்போரனைவரையும் கலகல வென்று சிரிக்கவைக்கும் படம்!

இதிலுள்ள குஷியான பாட்டுக்களை
நாடெங்கும் குதூகலத்துடன் பாடிவருகிறார்கள்!

வனமோஹினி

தமிழ்

சந்துரு (யானை), தவமணிதேவி, எம். கே. ராதா

மற்றும் பலர் நடித்தது

திருநெல்வேலி	—	நெல்லை	—	2-வது வாரம்
தர்மபுரி	—	ஷண்முகா டூரிங்	—	,,
கொல்லம்	—	பேபி	—	,,
திருப்பூர்	—	யூனிவர்சல்	—	1-வது வாரம்
ஊர்காம் (கே.ஜி.எப்)		கே	--	,,

மற்ற இடங்களில் கூடிய சீக்கிரம் எதிர்பாருங்கள்

Regd. No. M. 4162. SHAKTI January 1942



பால் பொங்கிற்று?
பணிகள் பெருகிப்
புதுவாழ்வு வாழுங்கள்

புதுவருஷக் கொண்டாட்டத்திற்கும்
விசேஷ காலங்களிலும் நகைகளும்
வைர ஆபரணங்களும் வாங்க
வேண்டிய இடம்

சுராஜ்மல்ஸ்

நம்பகமுள்ள நகை வியாபாரிகள்,
– வைர வியாபாரிகள் –
பொன், வெள்ளி ஆபரணங்கள், சாமான்கள் தயாரிப்பவர்கள்

313, எஸ்பிளனேட் சென்னை

Edited, Printed and Published by V. Govindan at Shakti Press Limited (Shakti Press), 46, Muthumari Chetti Street, G.T., Madras. Joint Editor: T. I. Ranganathan.